# வள்ளல் பாரி

ஆராய்ச்சி நூல்

கு. ராஜவேலு எம். ஏ.

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1

44371

முதற் பதிப்பு, டிசம்பர், 1953
இரண்டாம் பதிப்பு: மே, 1957
மூன்றும் பதிப்பு; ஏப்ரல், 1960
நான்காம் பதிப்பு; ஜூலை, 1960
ஐந்தாம் பதிப்பு: ஜூலை, 1966
ஆறும் பதிப்பு: [illegible] 1976

© உரிமை [illegible]

TAMIL ... ARCHIVES LIBRARY
4858
V211,1
N53-6
4858

விலை ரு. 4-00

குழந்தை அச்சகம், 13, ஆரிய கவுடர் ரோடு, சென்னை-33

பல்கலைச்செல்வர், பன்மொழிப் புலவர்

உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

M. A., B. L. M. O. L., நல்கிய

# அணிந்துரை

பாரியின் பெயர் தமிழ் நாட்டில் பழைய புராணமாகி விட்டது. பாரி வாழ்ந்தபோதும் அவனைக் கபிலர் போன்ருேர் போற்றிப் புகழ்ந்தனர். அவனுக்கெனவே கபிலர் வாழ்ந்து அவனேடு மறுமையிலும் உடனுறைய உயிர் துறந்தார் என்ற வரலாறும் இந்த நாட்டில் எழுந்தது இஃதோர் அழகிய கருத்து. "ஏழு வள்ளல்கள்" என்ற சொற்ருடரே சிறந்ததோர் குறிக்கோளைச் சங்க நூல்களில் சுட்டுகிறது. அழகு, கலை என்ற இயற்றின் வழிபாட்டில் தம்மையும் மறந்து ஈடுபட்டுத் தமதெலாம் தந்துதவும் தகுதிப்பாடே இங்குள்ள வள்ளன்மையாகும். அருள் வழி நின்று பாடிய சுந்தரருக்கும் வள்ளல் என்ருல் பாரியின் நினைவே வருகிறது. இடைக்காலத்தே அவ்வையாரைச் சுற்றிப் பாரியின் புராணம் வளர்ந்து உருப்பெற்றது.

நம்முடைய நாளில் சங்கப் பாக்களை நேரே அறியும் வாய்ப்பினை டாக்டர் சுவாமிநாதய்யர் வழங்கியதும், பாரியைப்பற்றிய பேச்சுகளும் ஆராய்ச்சிகளும் எழத் தொடங்கின. மகாவித்வான் இரா. இராகவையங்காரும் பாரி வெண்பா என்ற காப்பியம் பாடி அரங்கேற்றினர்.

இன்று நண்பர் திரு. இராசவேலனர் நாவல்கள் எழுதும் ஈடுபாட்டினிடையே அந்த ஈடுபாட்டையும்

சிறிது மறந்து பாரி வள்ளலின் புகழைத் தம் கதைச் சுவை எல்லாம் தோன்ற எழுதியுள்ளார். இவருக்குத் தமிழினிடத்துள்ள பெருமதிப்புத் தமிழ் மூவேந்தர் தவறு செய்யார் என்று உறுதியாக நம்புகிறது "வஞ்சனையால் பாரி மாண்டான்" என்ற கதையையும் ஆராயத் தூண்டுகிறது. பொறாமையால் பாரியைத் தாக்கியதனையே பாரிபால் இருந்த அன்பால் வஞ்சனை என்று உலகம் பேசிவரத் தலைப்பட்டது என்று இவர் முடிவு காண்பதனை யாவரும் ஒப்புக்கொள்வர்.

கபிலரது நட்பின் திறத்தினை நண்பர் போற்றுமிடம் நம் மனத்தினை எல்லாம் உருக்கும். அறிவும், அன்பும் ஒருங்கு திரள நண்பர் இராசவேலனார் இந்நூலினை எழுதியிருப்பது இன்றைய தமிழருக்கு நல்லதொரு விருந்தாகி இனிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சிந்தாதிரிப்பேட்டை
சென்னை

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

# முன்னுரை

பச்சைப் பசேலென்று பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தால் அது நிலத்தின் வளத்தைக் காட்டும். முத்தும் பவளமும் நிறைந்து காணப்பெறின் அக்காட்சி முந்நீர்ப் பெருங்கடலின் செழிப்பைத் தெரிவிக்கும். இவ்வாறே ஒரு நாட்டு மக்களின் அறிவு வளத்தை அறிய வேண்டுமானால் அந்நாட்டில் பெருகி மிகுந்துள்ள ஆக்கத்தையும் நாம் அளந்து பார்க்க வேண்டும். மக்கள் ஆக்க வேலையைச் செய்யாமல் அழிவு வேலையைப் பற்றியே பேசினால் அது அந்நாட்டின் சீரழிந்த நிலையினையே செப்புகிறது என உணரலாம். அழிவு வேலையில் ஈடுபட்ட அந்த அறிவின் கூர்மை ஈட்டியின் கூர்மையைப் போன்றது. அதனால் அழிக்கத்தான் முடியுமே தவிர ஆதவனின் சிவந்த கதிர்களைப் போன்று எவ்விடத்தும் ஊடுருவிச் சென்று உயிர்களைப் பேணிவளர்க்கும் சீரிய செயலைச் செய்ய முடியாது.

இக்கருத்துக்கள் இலக்கியத்திற்கும் மிகப் பொருந்தும். இலக்கியம் வளர வேண்டுமென்றால், அறிஞர்களின் கருத்துக்கள் எழுத்து உருவம் பெற வேண்டும். அவ்வுருவம் நூல்களாக வெளிவரும் பொழுது அவைகள் ஒன்றோடொன்று மாறுபடலாம். ஒருவரின் கருத்துக்கள் மற்றவரோடு வேறுபடலாம். அவ்வாறு வேறுபடும் பொழுது ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை விளக்குவதோடு நாகரிகமான சொற்களால் மற்றவரின் நூல்களிலே காணும் தவறுகளையும் குறிப்பிடல் வேண்டும். இவ்விதம் செய்யாது தமக்குப் பிடிக்காத நூல்களை அழிக்க வேண்டுமென்று எவராவது கூறினால் அவ்வாறு கூறு

பவரின் அறிவை நாம் "ஈட்டி அறிவு '' என்றுதான் கூற வேண்டும். அது நாகரிகம் பெற்ற மூளை அன்று.

மேலை நாடுகளைப் போன்று திறனாய்வுக் கலையை (Literary Criticism) நம் நாட்டில் வளர்க்க வேண்டுமானால் நாமும் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதவேண்டும். இல்லெனில் இலக்கிய வளர்ச்சியே நாளடைவில் தேங்கிப் போய்விடும். இதனால் மொழி வளவனும் குன்றிவிடும்.

பாரியைப்பற்றித் தமிழ் நாட்டில் பழமையாக வழங்கி வரும் கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்கள் மாறுபட்டன. இதற்கு அடிப்படையாக இருந்தது என்னுடைய பச்சையப்பன் கல்லூரி வாழ்க்கையே யாகும். அங்கே டாக்டர் மு. வ. அவர்கள் எங்களுக்குச் சங்க இலக்கியத்தைச் சொல்லிக் கொடுத்தார். அப்போது அவர் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சில் நீங்காது நின்று விட்டன. அதன் பயனே இச்சிறு நூல். இந்நூலின்கண் காணும் நல்ல தன்மைகள் எல்லாம் அவரைச் சார்ந்தவை. ஒவ்வாத கருத்துக்கள் இருப்பின் அவை என்னைச் சார்ந்தவை.

பிற்பாடு, இச்சிறு நூலுக்கு முன்னுரை ஒன்று தருமாறு பேரறிஞர், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைக் கேட்டேன். அப் பெரியார் தம் சால்புக்கேற்ப மறுக்காது உடனே ஓர் அணிந்துரை எழுதி உதவினார்கள். அச் சான்றோர்க்கு என் நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

சென்னை
16-3-76

கு. ராஜவேலு

# பறம்பு மலை

---

பலவும் மாவும் குலைவளர் வாழையும் இருங்கனி நாவலும் இள மாதுளமும் பருவமன்றியும் பயன் கொடுக்கும் இயற்கை வளம் உடையது பறம்பு மலை. அம் மலையின்கண் நாகமும் வேங்கையும் நனிமலர் தாங்காது முற்றிய செந்நெல்போல் தலை கவிழ்ந்து, தாழ்ந்திருக்கும். விண்ணை இடிப்பது போன்று பல்லிணர்க் குரவம், கடியிரும் புன்னை ஆரம் முதலான அருமரங்கள் எல்லாம் பாரித்து ஓங்கி வளர்ந்திருக்கும். அம் மலை வாழும் குறுந்தொடிக் குறத்தியர், வற்றிய சந்தனக் கட்டைகளையே விறகாக எரிப்பர். அங்ஙனம் அப் பெண்டிர் எரிக்கும் போது எழும் நறும் புகை, காற்றிலே வெண்மேகம் போல் தவழ்ந்து சென்று அவர்கள் மனைக்கருகே பொன்போலப் பூத்திருக்கும் வேங்கை மரங்களின்மீது படர்ந்து, அம் மலை முழுவதையும் மணமிக்க மாண்புடைக் குன்றமாக்கும்.

கருவி வானம் கதழுறை சிதறும் கார் காலத்தின் மாலைக் காலத்திலே காட்டுப் பூனை சிரித்தாற் போன்று முல்லையின் பசிய முகை முறுக்குடைந்து மணம் வீசும். பூக்கள் நிறைந்த சோலைகளில் மயில்கள் தம் தோகைகளை

ஓகையுடன் விரித்து அழகிய விறலியர்போல் ஆடும். கார் காலம் கழிந்ததும் அம்மலை, பொன்னை மெருகிட்டது போன்று மேலும் கவின் பல நிறைந்த காட்சி பலவற்றைக் கொடுக்கும்.

அக்காலை, களிற்றின் முகத்திலேயுள்ள புகரைப் போன்று தெறுழ் மலர்கள் மலர்ந்திருக்கும். வயல் நிறையப் புதற்பூக்கள் பூத்துக் குலுங்கும். புனிற்றாவின் நெடு நிரைகள் ஆநும் வண்ணம் புல்வெளிகள், விரித்த மரகதக் கம்பளம் போல் பரந்திருக்கும். மானினம் மலைச்சாரலில் துள்ளி விளையாடும். முசுக்கலை வான்தோய் கழைகளில் தாவிப் பாய்ந்து களிக்கும். கண்ணேணியையுடைய நெடிய அம்மலையின் சிகரங்கள் தோறும் வெண்பட்டென அருவி பல இழிந்து, முழவென முழங்கும்.

சிறிய இலைகளையுடைய மூங்கிலினது நெல், மலையெங்கும் விளைந்து பலன் கொடுக்கும். சுவை மிக்க சுளைகளையுடைய பலா, பழுத்த கனிகளைக் கொடுக்கும். வள்ளிக் கிழங்கின் வளமான கொடிகள், நிலம் பிளவுபடும் வண்ணம் வீழ்ந்திருக்கும். மலைச் சிகரங்களிலும் முழைகளிலும்உள்ள தேன்கூடுகள், குரங்கு பாய்தலான் உடைந்து தேன் பிலிற்றும். வாடைக்காற்று அத்தேனை அள்ளிச் சென்றுஅங்குமிங்கும் ஓடி. அள்ளித்தெளித்து எங்ஙனும் விளையாடும். இங்ஙனம் வீழ்குடி உழவர் உழுது பயிரிடாமலே அம்மலை நான்குவிதப் பயன்களைக்கொடுக்கும் இயல்பு வாய்ந்தது.

இவ்வாறான இயற்கைவளன் நிறையப் பெற்று செழிப்புடன் காட்சி நல்கும் இப்பறம்பு மலையைச் சூழ்ந்துள்ள முரம்பு நிலமும் பல பயன்களை உடைத்தாய் இருந்தது. அது காராளர்களின் கைவன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. அண்மையில் ஈன்ற பெண்மயிலை ஒப்ப வரகுக்கதிர்களின் கரிய தண்டுகள் நீண்டு அவற்றின் அடியிலிருந்து முடிவரை கதிர் விரிந்து விளைந்திருக்கும். தினைக்கதிர்கள்



கொடுவாளைப் போல் வளைந்து முதிர்ந்திருக்கும். எள்ளின் இளங்காய்கள் முற்றிக் கறுத்திருக்கும். அவரையின் கொழுவிய கொடிகளிலே காய்கள் குலைகுலையாய்க் காய்த்திருக்கும். இவ்வாறு புன்செய்ப் பயிர்களும் நனகு செழித்து மிகுபயன் கொடுத்தன.

வானத்திலே தவழும் மதியையும் வையத்திலே வளரும் கொடியையும் அழகிய மாதரின் பெருவனப்புக்குப் புலவர் உவமை கூறுவர். ஆனால் பறம்பு மலையின் பலனை இனிது நுகர்ந்த கபிலரோ, கவினெலாம் நிறையப் பெற்ற இளமகள் ஒருத்தியின் ஒப்பற்ற எழிலைப் பறம்பு மலையின் எழிலுடன் ஒப்பிட்டுள்ளார்.

“ ஒண்ணிழைக் குறுமகள்
பேரிசை யுருமொடு மாரி முற்றிய
பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி
பலவுறு குன்றம் போலப்
பெருங்கவி னெய்திய அருங்காப் பினளே ”

*(நற் - 253)*

என்று மாறாது மழைதவழும் அம் மலையைக் கவின் நிறைவால் அருங்காப்பினளாகிய தலைவிக்கு உவமை கூறுகிறாரெனில் அம்மலையின் இயற்கை வனப்பை எங்ஙனம் இயம்ப முடியும்? இங்ஙனம் பெண்ணின் பருவ அழகைவிடப் பறம்புமலையின் அழகு பிறவியிலேயே நிறைவுபெற்று விளங்கியது. பாரியின் செங்கோலாட்சியால் அம்மலை புதுமணம்பெற்ற பெண்ணைப்போல் முன்னையினும் ஏர் நிறைந்து, எழில் சிறந்து பாருலகம் அறியும் வண்ணம் உயர்ந்து திகழ்ந்தது

நீல வானத்தின்கண் நித்திலக் குவியலாய் ஒளிரும் விண்மீன்களை ஒப்ப அப் பறம்புமலையின்கண் எண்ணற்ற எழிற் சுனைகள் மின்னின. அச்சுனை நீரின் தண்ணார் தன்மை

மிகப்பெருமை வாய்ந்தது. அகன்று பரந்திருந்த அச் சுனைகளிலே குவளைப் பூக்கள், நீரிலே நெருப்பு மலர்கள் நிற்பன போன்று காடாய்ப் பூத்துக் குலுங்கின. கிணைமகளின் இணைவிழிகளைப் போன்று நீலமலர் விரிந்திருந்தன. அப் பனிச்சுனைகளின் தனித் தன்மையைப் பற்றிச் சான்றோர் பலரும் தம் கவிகளிலே கவினுறக் குறித்துப் போந்துளார். நன்னாகனார் என்னும் செந்நாப் புலவர்,

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீ
ரோரூ ருண்மையின் இகந்தோர் போலக்
காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே.

(புறம் 176)

என்று பாரியின் குளிர்நறுஞ் சுனையைப் பாராட்டியுள்ளார்.

இவ்வாறே மிளைக்கந்தன் என்னும் பெரும் புலவரும் அழகு சொட்டப் பாடியுள்ளார். "முன்னர், பசிய வேப்பங்காயை என் தோழி தந்தாலும் தித்திக்கும் கட்டி என்று தின்றீர். இப்போதோ பாரியின் பறம்பு மலையிலேயுள்ள பனிச்சுனையின் தெள்ளிய தைத் திங்களைப்போன்ற தண்ணிய நீரைத் தருகினும் மிக உவர்க்கும் என்கிறீர். இவ்வாறு உம் அன்பு இருக்கிறது" என்று தலைவனிடம் தோழி கூறியதாகப் பாடியுள்ளார்.

இங்ஙனம் வண்மகிழ்ப் பாரியின் மலையும் சுனையும் நிலமும் குன்றாத வளம் நிறைந்து மக்களை மகிழ்வித்தன.

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும்"

பறம்பு மலையின் நிலை திரியாது என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான காரணத்தையும் அவரே விளக்கியுள்ளார்.



"கோலல் செம்மையிற் சான்றோர் பல்கி"

அந் நாட்டின்கண் உறைதலான் பெயல், பிழைப்பறியாது ஒழுங்காகப் பெய்கிறதாம். அரசன் செங்கோலனாய் இருந்தால்தான் அவன் நாட்டில் சான்றோர் பலர் இருப்பர். சான்றோர் நிறைந்த நாட்டில்தான் மண்ணுக்கு இன்றியமையா மாரியைப்போன்று மாந்தர்க்கு இன்றியமையாத ஒழுக்கம் சிறப்புற்றிருக்கும். சான்றோர் இல்லாத நாட்டிலே வானும் தோயாது. வளனும் சுரக்காது. பசியும் பிணியுந்தாம் மக்களை நலியச் செய்யும். கபிலரின் இச் சிறந்த பாட்டு உணர்த்தும் பேருண்மைகளை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உள்ளம் இறும்பூதடைகிறது.

தண்டாது பல்வளனும் நிறைந்து, "பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுநிய" இப் பறம்பு மலையைக் கபிலர் வாயார, மனமாரப் பாடியுள்ளார். அவர் பாடல்களைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் நம் வாயும் உள்ளமும் இனிக்கின்றன. ஆகமெல்லாம் இன்பத்தால் கரைகிறது.

"வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித் தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே."

என்று திருவாசகத்தைப் படித்து என்பெலாம் உருகிப் பாடிய இராமலிங்க அடிகளாரின் பாட்டு நம் நினைவிற்கு வருகிறது.

அடிகளாரை உருக்கிய மணிவாசகத்தைப் போலவே கபிலரின் பாடல்களும் நம் உடலையும் உள்ளத்தையும் ஊனையும் உருக்கும் தன்மையனவாய் அழகுற அமைந்துள்ளன.

# 2
# பண்டைத் தமிழரின் ஈரம்

இப் பறம்பிற்குக் கோமானாகி ஆண்ட நெடுமாப் பாரியின் வியத்தகு வரலாற்றை அறிவதற்கு முன்னர் அவன் காலத்தில் வாழ்ந்த ஆடவர், பெண்டிர், குறுநில மன்னர், முடிகெழு வேந்தர் முதலியோரின் உள்ளப் பாங்கை, அறிவதனால் ஆகும் பலன் பெரிதாம். இற்றை நாளில் நம்மால் கற்பனை செய்யவும் முடியாத அளவுக்குப் பண்டைத் தமிழர், பெரும் நாகரிகம் வாய்ந்தவராக விளங்கினர்.

நாகரிகம் என்பது புறத் தோற்றத்தால் அறியப்படுவது அன்று. அறிவாலும் அளக்கப்படுவது அன்று. அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் தாண்டி உள்ளத்தோடு உறவாடும் ஒன்றிய மன உணர்வே நாகரிகம் எனப்படும்.

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கொப்ப உள்ளத்தின் உயர்வை யொத்துத்தான் நாகரிகத்தின் உயர்வும் சிறப்பும் நனிமிக விளங்கும். பண்டைத் தமிழரின் சாலவும் உயர்ந்த நாகரிகச் சிறப்பைச் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். அவர்களின் உள்ளம் வானினும் உயர்ந்ததாகவும் நெருப்பினும் தூய்மையானதாகவும் பளிங்கினும் களங்கமற்றதாகவும் ஒளிர்ந்தது.



நற்றிணை என்னும் சங்கத்தொகை நூல்களுள் ஒன்று, நாகரிகம் என்ற சொல்லின் பொருளை நன்கு விளக்குகிறது:—

> "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"

என்பது அதன் விளக்க உரை.

அதற்குப் பின்னர் வந்த வள்ளுவரின் வானுயர் குறள்

> "பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்"

என்று நாகரிக மாந்தரின் நல்லியல்பை விளக்குகிறது.

இவ்விரண்டு மேலோரின் உரைகளிலிருந்து நாம் அறியக்கிடப்பது, நம்முடன் பல ஆண்டுகள் நட்டவராயினும், நாம் மாளும் வகையில் நஞ்சினைக் கொடுப்பாராயின் அதையும் மறுக்காது உண்டு, அவர் மனம் மகிழச் செய்யவேண்டும் என்பதாம். நம் உயிரைக் கொடுத்தும் பிறருடைய விருப்பத்தை நிறைவேற்றுதல் வேண்டும். நண்பரின் அவாவை முற்றுவிக்கவேண்டும். நம் உயிரினும் பிறர் மகிழ்ச்சியே பெரிது என்று எண்ணுவதோடு அதற்கேற்பச் செயலும் ஆற்றுவதுதான் நனி நாகரிகம் என்பதை நாம் உணருகிறோம்.

இம் மாண்புடைய உள்ளம் அக்காலை வாழ்ந்து வந்த அனைவர்க்கும் இயல்பான பண்பாக விளங்கி வந்ததுதான் நம்மைப் பெரு வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளது.

மேடு பள்ளங்கள் நிறைந்த பொருளாதார நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம். பொருள் ஈட்டும் திருவாளர்கள் வறியோர்க்கொன்று ஈவதற்காக ஈட்டுவதில்லை. சொத்தைக் குவித்து வைப்பதே இன்றைய செல்வரின் பேரெண்ணமாக உள்ளது. இவ்வுள்ளப்பான்மை, திருவாளர்

களிடம் உறுதி பெற்றுவிட்ட காரணத்தால்தான் நாட்டில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. வறியோர் சொல்லொணுத் துயரமுறுகின்றனர். செல்வர்களும் தம் உள்ளத்தை வளர்க்காமல் தம்மிடம் உள்ள செல்வத்தைமட்டும் வளர்த்து வருகின்றனர். இதனுல் பொருள், ஒரு சிலரிடத்திலேயே குவிந்து தேங்கிவிடுகிறது. அது பொருளாதார, அரசியல் பிணக்குகளுக்கும் இணக்கமாக உள்ளது.

தற்காலப் பொருளாதாரம் செல்லும் தவருன நெறியையும் பொருளுடையோர் பலரின் இரக்கமற்ற இன்றைய போக்கையும் நன்கு உணர்ந்த காந்தி அடிகள், செல்வர்க்கெல்லாம் சிரிய உண்மைகள் பலவற்றை எடுத்தோதினர். அவற்றுள் தலையாயது, திருவுடையோரெலாம் தம் செல்வம் பொது மக்களுடையதெனக் கருதல் வேண்டுமென்றும் அவர்களுடைய திரண்ட நிதிக்குப் பாதுகாவலராகவே தாம் சமூகத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை உணரல் வேண்டுமென்றும் அறிவுறுத்தினர்.

இன்று அடிகளார் நம் நாட்டுச் செல்வர்க்கு எடுத்துரைத்த அறநெறியின் வழியில்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டின் செல்வர்கள் சென்று வழிகாட்டிகளாய் விளங்கினர். பிறர்க்கு ஈத்துவக்கும் இன்பமே பேரின்பமெனக் கண்டனர். தம்மை நாடி வரும் வறியோர்க்கெல்லாம் பொன்னும் மணியும் புனை தேரும் அணிகலனும் விரைபரியும் இருங்களிறும் வேண்டுவன கொடுத்து அவர்களை வழியனுப்பின வரலாற்றை நம் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். அகவாழ்வில் அவர்கள் காட்டிய அன்பு நெறியே, புறவாழ்வில் அவர்கள் கொண்ட அருள் வழிக்கும் பேருதவியாய் இருந்தது.



TAMILNADU ARCHIVES 4850

''அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு''

என்று வள்ளுவரும் எடுத்தோதினர். அறத்தைச் செய்வதற்காகவே பண்டைத் தமிழர் இல்லறத்தைக் கடைப்பிடித்தனர். செல்வத்தை ஈட்டினர். அகத்திலும் புறத்திலும் இதற்கு ஆதாரமாகப் பல செய்திகள் உள்ளன.

அறம் பல செய்வதற்காகப் பொருள் தேடச்சென்ற ஒரு தலைமகன், கார்காலம் தொடங்கியவுடனே அந்திப் போதில் தன் தலைவியிடம் விரைந்து வருகிருன். கலிமா விரைந்து செல்லும் காரணத்தால் தேரின் மணிகளெல்லாம் ''கலகல'' வென்று ஆரவாரஞ் செய்கின்றன. விரைந்து சென்று தலைவியை அடையவேண்டுமென்பதே தலைவனின் குறிக்கோள். கடுவிசையிற் செல்லும் அவன் மாவைவிட அவன் மனம் பல மடங்கு விரைந்து பறக்கிறது. அந்நிலையிலும் அவனுடைய அருள் உள்ளத்தைப் புலவர் கவினுற நமக்குக் காட்டுகிருர். கார்காலமாதலால் சாலையின ஓரங்களிலெல்லாம் முல்லைக்கொடிகள் வெண்மையான மலர்களைப் பூத்து மணம் பரப்புகின்றன. மலர்ந்த மணமலர்களிலுள்ள நறுத்தேனை அருந்துவதற்காக மணி நிற வண்டுகள் தம் துணையுடன் இசைபாடிய வண்ணம் மலர்களைச் சுற்றி வட்டமிடுகின்றன. துணையொடு களிக்கும் அவ்வண்டுகளின் இன்பக்காட்சியைத் தலைவன் காண்கிருன் ஆரவாரத்தோடு செல்லும் தேரினை விரைந்து நிறுத்துகிருன். மணியின் நாக்குகளைத் துணியால் யாத்து ஓசையெழா வண்ணம் தேரினை ஒரு பக்கமாக ஒதுக்கிச் செலுத்துகிருன். பொன்னிற வண்டுகளின் புது இன்பத்துக்கு இடையூறு நேராவண்ணம் காக்கின்ருன்.

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்.

(அகம்-4)

என்று இவ்வரிய காட்சியைப் புலவர் நமக்குப் படமாகக் காட்டுகிறார்.

மற்றொரு தலைமகன், "வினையே ஆடவர்க்கு உயிர்' எனும் மாண்புடைய விதியினைக் கைக்கொண்டு பொருள் தேடத் தலைவியை விட்டுப்பிரிய எண்ணுகிறான். தன் எண்ணத்தைத் தன் மெல்லியல் அரிவையிடமும் நயம்பட உரைக்கிறான். ஆனால் அவளோ, "புனையிழை மகளிர்க்கு ஆடவர் தாமே உயிர்". அவரைப் பிரிந்து நான் எங்ஙனம் பிரிந்துறைவேன் எனப் பேதுறுகின்றாள். இவளைத் தேற்று முகமாகத் தலைவன் கூறும் சொற்கள் நம் உடலையும் உள்ளத்தையும் தண்ணென ஆக்கும் தன்மையனவாய் உள்ளன. அவை தலைவனின் ஈரநெஞ்சத்தையும் அறத்தின் மாட்டு அவனுக்குள்ள அசையாத உறுதியையும் தெள்ளிதின் விளக்குகின்றன.

மெல்லியல் அரிவை நின் நல்லகம் புலம்ப
நிற்றுறந்து அமைகுவ னாயின் எற்றுறந்து
இரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே

(குறுந-137)

என்று தன் மனையாளிடம் வஞ்சினம் கூறுகின்றான்.

நின்னைத் துறந்து அமைகுவனாயின் என்னை வறியவர்க்கு ஒன்று ஈயாதவன் என எண்ணிக் கைவிட்டு, இரவலர்கள் என்பால் வாராத நாட்கள் பலவாகுக என்று அவன் கூறும்பொழுது, பொருளை எவர் பொருட்டு ஈட்ட எண்ணினான் என்பதை நம்மால் உணர முடிகிறது.



இவ்விரண்டு செய்திகளையும் நமக்கு அகநானூறும் குறுந்தொகையும் கூறுகின்றன. இச்செய்திகள் புலவர்களின் கற்பனை என எளிதில் ஒதுக்கிவிடக் கூடியனவோ? சமூகத்தில் முற்றிலும் இல்லாத ஒன்றைப் புலவர்கள் கூறினும் மற்றவர் அதை ஏற்பரோ? எனவே அக்காலத்தில் இவ்வித மனநிலை நம்நாட்டில் அருகியாதல் இருந்திருத்தல் வேண்டுமென்பதிலோர் ஐயம் சிறிதளவும் இல்லை.

வளைக்கை விறலியரின் மனைக்கு அண்மையிலே உள்ள தோட்டத்தின்கண் பறித்த இலைக்குமேல் தூவுவதற்காகச் சிறிது அரிசியைக் கேட்கின்றனர் இரவலர் ஒரு புரவலனிடம். அப்புரவலனோ சிறிது அரிசிகேட்ட அவர்களின் வறுமை நிலையையும் தன் தகுதியையும் சீர்தூக்கிப் பார்த்து, அவர்களுக்குக் குன்ற மன்னதோர் களிற்றை நல்கினனாம்.

நாஞ்சிற் பொருநனைப் பாடும் ஔவை மூதாட்டி இவ்வாறு அவன் அருளுடைமையைக் கூறுவதைப் புறநானூற்றின் 140-வது பாடலால் அறியலாம்.

இவ்வாறான அறச்செயல்களை அவர்கள் எவ்விதப் பயனைக் கருதியும் செய்தாரல்லர். "அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை" எனக் கருதி நடந்தனர். ஆய் என்னும் வள்ளலின் அருள் தன்மையைப் பாடும் ஏணிச்சேரி முடமோசியாரின் பாட்டு இக் கூற்றினை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்"

என்று அவர் அவனைப் பாராட்டிக் கூறுகிறார்.

"புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"

எனும் இக்கொள்கைகள் தாம் பண்டைத் தமிழரின் வாழ்வுக்குக் கலங்கரை விளக்கமாகவும் குறிகோளாகவும் இருந்துவந்தன. அவர்களின் சொல்லும் செயலும் இக்கொள்கைகளைச் சுற்றியே வட்டமிடும் ஆற்றல் பெற்றிருந்தன. இவ்வித வாழ்க்கை கி. பி. இரண்டாம் நூற்றுண்டு வரை நன்கு நிலவியிருந்ததைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

சிலப்பதிகாரக் காலத்துக்குப் பின்னர் இக்கொள்கைகள் மக்களின் நெஞ்சை விடுத்துச் சிறிது சிறிதாக அகலத் தொடங்கின. கோவலனின் ஈரநெஞ்சத்தைக் கருணை மறவ! இல்லோர் செம்மல்! செல்லாச் செல்வ! என்ற சொற்களால் இளங்கோவடிகள் வருணித்திருக்கிறுர். இவர் காலத்துக்குப்பின் தமிழர்கள் பண்டைப் பண்புகளை அவ்வளவாகப் போற்றுமல் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னலத்தைப் பேணி வளர்த்தனர். அதன் பயன்தான் இன்றுள்ள இயற்கைக்கு மாறுன இழிநிலை.

# 3

# அறம் வளர்த்த ஆன்றேர்கள்

எங்கோ ஓரிடத்துப் பாலையில் நிலவும் பனிச்சுனை போன்றதன்று தமிழ் நாட்டிற் பிறந்த பாரியின் வாழ்வு. "அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும்" உடையது அவன் நாடு. முத்தும் பவளமும் சிந்திக் கிடந்திட்ட முற்றங்கள் நிறைந்த நாடு அவனது பறம்பு நாடு. அவன் திருநாட்டின் ஆறுகள் பொன்னையும் மணியையும் சுமந்தவண்ணம் அலைகளை வீசிப் பெருமிதமாக நடந்தன. எண்ணற்ற நல்லோர்கள் அவனுக்கு முன்னே ஈகைக்கடனை இனிது நிறைவேற்றி அவனுக்கு வழி காட்டிளாய் வாழ்ந்து மறைந்தனர். அன்னவர் வழித் தோன்றலே பாரி. ஆனல் அவனுடைய உள்ளமோ தன்னையொத்த மாந்தரிடத்து மட்டும் கருணை காட்டாது உலகிடைத் தோன்றிய எல்லா உயிர்க்கும் இரங்குவதாக அமைந்து கிடந்தது.

பீடும் பெருக்கும் நிறைந்த இவ் வள்ளியோனின் கொடைத் திறத்தைப் புகழ்ந்து தெள்ளிய புலவர்கள் பலர் பாடியுள்ளனர். கடையெழு வள்ளல்களுள் முதல்வனுக இவனை அனைவரும் பாராட்டிப் பெருமைப்படுத்தினர். சிறுபாணுற்றுப் படையில் நத்தத்தனர் என்னும் நல்லிசைப் புலவர் கடையெழு வள்ளல்களின் அருஞ்செயல்களைக் கவிதைச் சுவை சொட்டப் பாடியுள்ளார்.

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்............
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும்...........
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன் மொழி இரவலர் கீந்த
கழல்தொடித் தடக்கைக் காரியும்...........
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
ஆர்வ நன்மொழி ஆயும்............
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
அரவக் கடற்றானை அதிகனும்
கட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கை
நளிமலை நாடன் நள்ளியும்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
ஓரிக் குதிரை ஓரியும்

இவ்வாறு பத்துப்பாட்டு நுவலும் இவ் வள்ளல்களின் அரிய செய்திகளையே பெருஞ்சித்திரனாரும் புறத்தில் திறம்பட வருணித்துள்ளார்.

இவ் வள்ளல்களை என்ன காரணம் பற்றியோ கடையெழு வள்ளல்கள் என்று பிற்காலத்தவர் கூறலாயினர். கடையென்னுஞ் சொல், தரம்பற்றிக் கூறப்படும் பொருளில் வழங்கிவருகிறது. தண்டாது ஈபவர் தலைவள்ளல்கள் என்றும் இரந்தோர்க்கு இட்டு மகிழ்பவர் இடை வள்ளல்கள் எனவும் தம்புகழ் துதிக்க அளிப்பவர் கடை வள்ளல்கள் என்றும் இலக்கணம் வகுத்தனர். இம் முறைப்படி பார்ப்பினும் பாரியும் மற்றோரும் கடை வள்ளல்கள் அல்லர். கடையெழு வள்ளல்கள் என்னும் கூற்று, காலத்தைக் குறிப்



பிடுவதாகக் கருதின் சாலப்பொருந்துவதாக இருப்பதை அறிஞர் பலரும் அறிவர். இவ்வாறு கொண்டால் பாரியும் அவனைச் சார்ந்து ஈகைச் செந்நுகத்தை இனிது பூண்ட மற்றவர் அறுவரும் கடைச்சங்க காலத்தைச் சார்ந்தவர் என்று அறுதியிடலாம். இல்லெனில் கடையெழு வள்ளல்களாகிய இவ் வெழுவரும் தரத்தால் எவ்வகையிலும் மேலே கூறிய இலக்கணப்படி 'பொருந்தியவரல்லர் என்பதை எளிதில் அறியலாம்.

# 4

# பறம்பிற் கோமான் பாரி

வீரமும் காதலும் ஆகிய இரண்டு உணர்வுகளே தலையாய மனித உணர்வுகளென்றும் மற்றவை இவைகளினின்றும் கிளைத்தனவே யெனவும் உளநூல் அறிஞர் இயம்புவர். வேறு சிலர் இவ் விரண்டு உணர்வுகளோடு அருளையும் சேர்த்து மூன்றாகக் கொள்வர். நுணுகி ஆராயாது மேற்போக்காகப் பழந்தமிழ் நூல்களைப் படிப்பவர் எவரும் வீரம், காதல், அருள் முதலிய மூன்று உணர்வுகளும் எங்ஙனம் தமிழர் வாழ்வியலை இயக்கி வந்தன என்பதை நன்கு அறிவர். இம் மூன்று பண்புகளும் அவர்களுக்குப் பிறவியிலேயே கிடைக்கும் செல்வங்களாக உள்ளன.

பிறங்கு வெள்ளருவி வீழும் சாரலையுடைய பறம்பு மலையையும் முந்நூறு ஊர்களையுமுடைய தண்பறம்பு நாட்டையும் செங்கோன் முறையும் அறநெறியும் அரசியல் விதியும் பிழையாவண்ணம் வேள்பாரி ஆண்டுவந்தான். "இரந்து செல்மாக்கட்கு இனி இடனின்றிப் பரந்திசை நிற்கப்பாடின" கபிலர் அவனுடைய அவைக்களப் புலவராய்த் திகழ்ந்து வந்தார். பாரியின் அழகியமனை, ஓவியத்தில் எழுதியது போன்ற வேலைப்பாடுகளுடன் அமைந்து திகழ்ந்தது. அவ் வரண்மனையின் கண்ணே பாவைபோன்ற அழகும் பனிநிலா ஒத்த



நலமும் உடைய நங்கை நல்லாள் அவன் மனைவியாய் வாய்த்து இல்லறத்தை இனிதே நடத்திவந்தாள். அவர்களுடைய மங்கல மனையறத்தின் பயனாய் இருமகளிர் பிறந்து கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் தலைசிறந்து விளங்கினர். எவ்விதக் குறையுமற்று அவனுடைய இல்லறம் நல்லறமாக நடந்து வந்தது.

அவனுடைய புறவாழ்வோ புகழ்மிக்கதாய்த் தழைத்து வந்தது. போர்க்களத்தில் பாணர் பாடும் பெருவீரனாய்த் திகழ்ந்தான். "கடுமா"வை உடையவனாய் இருந்தான். பகைவர்க்கு இன்னாகிய அவன் இரவலர்க்கெல்லாம் இனியனாக இருந்தான். இங்ஙனம் மாவீரனாக விளங்கிய அவனை நீரினும் இனிய சாயலை உடையவன் என்று அவனுடைய அவைக்களப் புலவராகிய கபிலர் அவன் மென்மைத் தன்மையைப் போற்றிப் பாடியுள்ளார்.

தன்னைத் தேடி ஆடிவரும் விறலியர்க்குப் பொன்னரி மாலை, பொற்றாமரைப் பூ முதலிய சிவந்த அணிகலன்களை வேண்டுமளவு கொடுப்பான். பாடிவரும் பாணர்க்குத் தேரும் யானையும் கொடுத்து, அவர்கள் கையகத்துள்ள மண்டை நிறையக் கள்ளையும் வார்த்துக் களிப்பில் ஆழ்த்துவான். இரவலர்க் கெல்லாம் இல்லையென்னாது அவர்கள் வேண்டுமளவும் கொடுத்து விடையளிப்பான். பாவலர்க்கோ அவர்களின் திறன் அறியாது ஈந்துவந்தான். அவர்களின் கவிதைகள் நல்லனவாயினும் அல்லனவாயினும் பரிசில் கொடுப்பதில் அவன் யாதொரு வேற்றுமையும் காட்டினான் அல்லன். அறிவில்லாதவரும் புல்லிய குணங்களையுடையவரும் அவனிடம் சென்று இரந்தால் அவர்களுக்கும் இல்லை என்னாது கொடுப்பதையே தன் கடமையாகக் கொண்டான். தெய்வம் எங்ஙனம் நல்ல பூ, அல்ல பூ என்ற வேறுபாடு கருதாமல் எருக்கம் பூவாயினும் விரும்பி ஏற்றுக்கொள்ளுமோ அங்ஙனமே பாரியின்

கொடைப் பண்பும் நிலவியது.

நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னு வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே (புறம் : 106)

என்று அவனுடைய அவைக்களப் புலவராய கபிலர் அவன் அருட்செயலை இனிது இயம்புகின்றார்.

மூடி புனைந்து வாழ்ந்த மூவேந்தரிலும் மேலாகப் பாரி இரவலர்க்கு இல்லை யென்னாது ஈந்து வந்தான். நிழ லில்லாத நீண்டவழியில் நின்று நிழற்றும் தனி மரம்போல அவனை எண்ணிப் பரிசின் மக்கள் ஓயாது வந்தனர். தனக்கு உரிய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்குக் கொடுத் தான். அதனால் அவனுடைய கைவண்மை காசினியெங் கும் பரவியது. அவனுடைய புகழோடு சேர்ந்து அவனது சிறுகுன்றின் புகழும் வளர்ந்து வந்தது. அவனுடைய நாடும் குன்றும் பாடிவருபவர்க்கு உரிமையாய் விளங்கின. அவனுடைய உயிரும் அவர்கள் கையில்தான் இருந்தது. பரிசிலர் இரந்தால் தன்னையே கொடுக்கும் தறுகண்ணாள னாக அவன் இயல்பு இருந்தது.

இவ்வண்ணம் அவன் கொடை நிழலில் பரிசின்மாக்கள் இனிது வாழ்ந்தனர். அனைவரும் பாரி ஒருவனே இப் பாருலகைக் காத்துவரும் மாவள்ளல் என்று எண்ணி அவனை வாயாரப் புகழ்ந்து மகிழ்ந்தனர். இவ்வாறு அனைவரும் அவனைப் பரவுவதைக் கண்ட கபிலர்,

பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே (புறம்: 107)

என்னும் பாடலைப் பாடியப்படி அவனைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாராட்டி உள்ளார்.

# 5
# தேர் நல்கிய திறம்

வானம் முழங்கி மழையைப் பொழியும் மாரிக்காலம். பச்சை மரங்களும் பசுங் கொடிகளும், தூசும் புழுதியும் நீங்கித் தூய்மையுடன் "பளபள" வென்று துலங்கின. கார்காலத்துப் பூக்கள் மலர்ந்து எங்கும் புது மணம் பரப்பின. அக்காலை பறம்பு மலையின் இயற்கைக் காட்சி, காண் பார் கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மைத்தாய் கவின் பெற்று விளங்கியது.

அக் கார்காலக் காட்சிவளன் காணும் பொருட்டு சுர புன்னை மரங்கள் அடர்ந்த மலைவழியே அந்திப்போதில் ஒருநாள், மாவண்பாரி நன்கு ஒப்பனை செய்த தேரின் மீது சென்றான். இயற்கையின் ஒப்பற்ற எழிற் காட்சி அவன் இதயத்தில் இன்பத்தை நிறைத்தது. ஆகமும் அகமும் மலர்ந்தும் குளிர்ந்தும் கிளர்ச்சி பெற்றவனாய் மேலும் அழகுக் காட்சிகளைக் காண ஆசைமிக்குற்று வழிமேற் சென்றான்.

அவ்வாறு செல்லும் வழியில் நீலவானம் பூக்கும் மீன் இனம் போன்ற வெண்மலர்களைத் தாங்கும் மெல்லிய முல்லைக் கொடி ஒன்று பற்றிப் படருவதற்குப் பக்கத் தில் ஓர் ஊன்றுகோல் இன்றிக் காற்றால் அலைக்கப் பட்டு அலங்கோலமாகக் கிடப்பதைக் கண்டான். நெஞ்சிற்

கடுந்துன்பம் கொண்டான். துணுக்குற்றுத் தேரினின்றும் கீழே விரைந்து இறங்கினான். தேரிற் பூட்டியிருந்த குதிரைகளை மட்டும் அவிழ்த்து விட்டுத் தன் அழகிய தேரை அம் முல்லைக்கருகில் நிறுத்தி விட்டு வெறுங் காலுடன் தன் இல்லம் வந்து சேர்ந்தான்.

அவனுடைய இவ் வரிய அருளுடைமையைக் கபிலர்,

> பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி (புறம்: 200)

என்னும் அடிகளின் மூலம் கவிதைநயம் இனிக்கப் பாடியுள்ளார். பற்றிப் படருவதற்கு ஊன்றுகோல் ஒன்று இல்லையே என்று அச்சிறுவீ முல்லைக்கொடி பாரியை இரக்கவில்லை. கார்கால மாகையால் காற்றும் மழையும் என்னை நிலைகுலையச் செய்தன. வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வாட்டம் தருவதாய் உள்ளது என்று தன் வறுமையை வாய் மலர்ந்து செப்பி அவன் இரக்க உள்ளத்தை அம் மலர்க்கொடி ஈர்க்கவுமில்லை. பாரி, பாரி என்று பாவலர் அனைவோரும் நின் இசையையே பரப்புவர். இரவலரெல்லாம் பழுமரம் தேடிச் செல்லும் பறவை இனம் போன்று நின்னை நோக்கி வருவர். பாண ருக்கும் விறலியர்க்கும் உனக்குரிய முந்நூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்து விட்டாய். தேர் வீசிருக்கை நெடியோனே! நின் பரந்த புகழைப் பாடுவதற்குப் பைந் தமிழின் பரப்பும் போதாதே! என்று அவனைப் புகழவும் இல்லை. இவ் வனைத்திற்கும் மேலாக அம் முல்லைக் கொடி வாய் திறந்து பேசாது என்றும் தான் பேசினும் அதை உணராது என்றும் அவன் அவ்வேளையில் அறிந் தான் அல்லன். அவன் சிந்தை முழுவதும், சிரொழுகப் பூக்கும் அம் முல்லைக் கொடியின் துன்பமே நிறைந்து



இருந்தது. தான் ஏறிவந்த கறங்குமணி நெடுந்தேரை அணையோடும் மற்றுமுள்ள அலங்காரங்களோடும் அதன் அருகிற் சென்று நிறுத்தி "கொள்" என்று சொல்லிக் கொடுத்தானும் அக் கொடை வள்ளல். நம்மால் கற்பனை செய்யவும் முடியாத அளவுக்கு அவன் உள்ளம் வானினும் மிக உயர்ந்து விளங்கியது.

உலகம் தோன்றிய நாள்முதற்கொண்டு இன்று வரை உலகில் எத்துணையோ வள்ளல்களும் மாஞானிகளும் பெருவீரர்களும் தோன்றி உள்ளனர். பிணியாளனையும் மூப்புடை முதியோனையும் பேரிழவால் பிடிக்கப்பட்ட பெருந்துயரம் உடையோரையும் கண்ட புத்தர், அரசையும் அழகு மனைவியையும் அன்புக் குழவியையும் துறந்து துறவியான வரலாற்றை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தை யும் திருப்பிக்காட்டு என்று அருளுபதேசம் செய்தும் அதை யறியாத மூடமக்களால் சிலுவையில் அறையப்பட்ட போது, "ஆண்டவனே, அவர்கள் இன்னது செய்கிறோம் என்று தெரியாமலே செயல்கள் செய்பவர்கள். அவர் களை மன்னித்துவிடு" என்று பகைவர்களுக்கு இரங்கிய ஏசுவின் அருள்நெறியையும் நாம் படித்துள்ளோம்.

அரசியல் வாழ்விலே அடிமைகளின் ஆருத்துயரை அகற்றுவதற்கு அரும்பாடு பட்டதற்காக ஆத்திரக் காரன் ஒருவனால் ஆவி செகுக்கப்பட்ட ஆபிரஹாம் லிங்கனின் அரிய வரலாற்றையும நாம் கண்ணீர் வெள்ளம் கரைபுரளப் படித்திருக்கிறோம்.

உண்மைக்கும் அகிம்சைக்கும் தம் வாழ் நாளையே ஈடுபடுத்தி, வீட்டிலும் வெளியிலும் எங்கும் அன்பு ஒன்றே ஆட்சி புரிதல் வேண்டும். "அன்போடியைந்த

வழக்கென்ப, ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு'' என்று எங்ஙனும் அன்பு ஒளிபரப்பிய நம் காந்தி அண்ணலை—நம் வாழ்நாளில் கண்கண்ட கலங்கரை விளக்கத்தை—வானத்துத் தண்ணிலவை—வையத்தின் தனி அருளை—புலியின் வெறிகொண்ட வீணன் ஒருவன் வஞ்சனையால் மாய்த்தபோதும் அதைக் குறித்துக் கவலாது மக்களின் சேவையே ஆண்டவன் சேவை என்று அறிந்து அதன் பெயரே இராமன் என்று எண்ணிய அப் பெரியோன், அவன் பெயரைச் சொல்லிய வண்ணமே ஆவி நீங்கி, இக் காசினியைக் கண்ணீரால் கரையும் வண்ணம் கருணைச் செயல் புரிந்த காந்தி அடிகளின் வாழ்வையும் நாம் கண்ணாரக் கண்டுள்ளோம்.

அம்ரு இப்னுலாஸ் என்பவர் முகம்மதியச் சமயத்தை நிறுவிய முகம்மதுவின் இனிய நண்பர். இவர் காலம் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். எகிப்தின் மீது படையெடுத்து அதை வென்று ஆண்ட வீரர் இவர். தம் கடமை முடிந்ததும் மீண்டும் தம் தாய்நாடு திரும்ப எண்ணினர் அதை அறிந்த அவரின் பணி மக்கள், அவர் உறைவதற்காக அமைத்திருந்த கூடாரங்களைப் பிரித்து அப்புறப்படுத்தினர். அக்காலை இப்னுலாசின் கூடாரத்தில் ஒரு புறா முட்டை இட்டிருப்பதைக் கண்டு அச் செய்தியை அவரிடம் செப்பினர். அதைக்கேட்ட அவ் வீரவுள்ளம் கூடாரத்தை அப்புறப்படுத்த வேண்டாம் என ஆணை இட்டது.

முட்டைகள் குஞ்சுகளாயின. அக் குஞ்சுகள் இறகு முளைத்துப் பறக்கும் வரை அவர் அங்கேயே காத்திருந்தார். அதன் பின்னரே கூடாரத்தைப் பிரித்துக் கொண்டு தம் நாடு திரும்பினர் என்ற வரலாறு நம்மைத் திகைக்கச் செய்கிறது.

ஏழைகளைக் கண்டு இரங்கி இரங்கிக் கண்ணீர் வடித்த இராமலிங்க அடிகளாரும் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் உள்ளம் வருந்துவாராம்.



**வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த**
**வெற்றரைக்கண்டு உளம் பதைத்தேன்!**
**நீடிய பிணியால் வருந்துகின் றோரென்**
**நேருறக் கண்டு உளம் துடித்தேன்**
**ஈடின் மானிகளாய் ஏழைகளாய்**
**நெஞ்சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்**

என்பது அவரே உலகின் துன்பங் கண்டு ஆற்றாது கண்ணீர் வடித்துப் பாடிய பாடலாகும். இங்ஙனம் உலக வரலாற்றிலே பல மேலோர்கள், பெரியோர்கள் மனித இனத்தின் துன்பம் துடைப்பதற்காக மாண்ட வரலாற்றையும் பிற உயிர்களின் துன்பத்துக்காக இரங்கிய செய்தியையும் நாம் அறிகிறோம். ஆனால் தமிழ் நாட்டின் கண்ணே, பாண்டி நாட்டிலுள்ள பறம்பு மலையிலே வாழ்ந்து வந்த பாரிவேள், தான் ஏறி வந்த தேரை முல்லைக் கீந்த செய்தியைப் படிக்கும்போதோ அவன் தன் முன்னோர்களின் ஈகைத் திறனை யெல்லாம் வென்றுவிட்டான். அத்துடன் பின்னோருக்கும் வழிகாட்டியாக அமைந்து விட்டான் என்ற இறுமாப்புடன் கூடிய எண்ணந்தான் நம் நெஞ்சிடை எழுகிறது.

புத்தரையும் ஏசுவையும் ஆபிரகாமையும் காந்தி அடிகளையும் அம்ரு இப்னுலாசையும் இராமலிங்க அடிகளையும் தன் அருள்திறனால் மதிக்கும் வண்ணம் செய்து விட்டான் மாவன்பாரி. மாஞாலம் அவன் செயலை மாயக் கற்பனை என்று சொல்லும் அளவுக்கு உயர்ந்து விட்டான். அம் மேலோனின் வாழ்க்கையை அவன் வழிவந்தவரே மறந்து விட்டனர். பிற்காலப் புலவர்களோ இணையற்று வானத்துக் கதிரவனைப் போன்று வள்ளன்மையில் விளங்கியவனைக் கடை வள்ளலாகக் கணித்து விட்டனர்.

# 6

# பாவியின் சூழ்ச்சி

மனித வரலாற்றை நாம் ஆய்ந்து காணும் பொழுது முதன் முதலில் தன உயிருக்காக விலங்குகளோடு மனிதன் போரிட்டதை அறிகிறோம். அதற்கப்பால் வலிய மனிதன் மெலிந்தவனை அடக்கி அவன் உடைமைகளைப் பறித்துத் தன் வாழ்வினை வளப்படுத்திக் கொண்டான். பிற்பாடு ஊரும் நகரமும் தோன்றின. அதனால் மனிதன் நிலையாக ஒரிடத்தில் தங்கி ஆட்சி புரிந்தான். அறிவைக் கல்வியால் வளர்த்தான். அதற்குப் பின்னர் பொன்னையும் பொருளையும் நிலத்தையும் நீர் வளத்தையும் பிறரிடம் கண்டு முன்னர் பொறுமைப்பட்ட மனிதன், தனி மனிதனின் வீரத்தையும் புகழையும் அறிவையும் கண்டு பின்னர் அழுக்காறு கொண்டான். இதனால் மனித இனம் எப்பொழுதும் ஓயாது அமர் செய்தவண்ணமே அழிந்து வந்தது. நாளடைவில் மக்களின் வாழ்வு துயரம் மண்டி அமைதியற்றுத் துடித்தது.

அவ்வப்போது தோன்றிய அறிஞர் பலர், தனிமனிதனிடம் தோன்றும் பொறாமையை—அழுக்காறை நீக்க அரும்பாடுபட்டனர். அழுக்காறுடையவனை மிக இழிந்தவன் என்று தூற்றினர். அழுக்காறு என்னும் அடாத குணம் ஒருவனிடம் இருந்தால் அவன் தன்னையே



அழித்துக் கொள்வான் என்னும் உண்மையையும் உரைத்தனர். ஆனால் அவர்களின் அரிய உண்மைகள் ஆள்வோரின் கருத்தை மாற்றுவதற்கு ஏற்ற வலியில்லாது போயின.

பாரியின் காலத்து வசித்த மன்னர்களும், இவ்வுண்மையை உணர்ந்து அதன்படி நடந்தார் அல்லர்.

> அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
> தீயுழி உய்த்து விடும்

என்ற பொய்யில் வாக்கை அன்னவரும் புறக்கணித்து விட்டனர். மாரியனைய வண்கை பாரியின் இசை எங்கும் பரந்து வளருவதைக்கண்டு அவர்கள் மனம் பதைத்தனர். உள்ளம் கொதித்தனர். நம்மையொத்த வேந்தன் நம்மினும் புகழ் பெற்று வாழ்வதோ என்று ஆத்திரங் கொண்டனர். அழுக்காறால் அறிவிழந்த அரசர்கள் பாரியின் பெருமையை மறந்தனர். அவன் இறந்தால் அன்றித் தங்களின் வாழ்வு ஒளிராது என எண்ணினர். எங்ஙனமேனும் அவன் உயிரைப் போக்க அவர்கள் முடிவு கட்டினர்.

இனியோனாகிய பாரியின்மீது இன்னாத பகை கொண்டு அவனை எதிர்த்த வேந்தர்கள் மூவர் என்பது கபிலரின் பாடலால் நன்கு புலனாகிறது. ஆனால் போரெதிர்ந்து வந்த அம் மூன்று காவலர்கள் யாவர் என்பதை நன்கு உணர முடியவில்லை. அக்காலை தமிழ் நாட்டின் முடிமன்னர்களாய் இலங்கி வந்த சேர, சோழ, பாண்டியர் மூவரும் பாரியின் கொடைப் புகழால் அழுக்காறு கொண்டனர் என்றும் அதனால் அவனிடம் போரிடுவதற்கான காரணம் ஒன்றை வேண்டி நின்றனர் என்றும் அதன் பொருட்டுப் பாரியின் மகளிரை மணம் பேசி விட்டனர் என்றும் அவன் மறுத்து விடவே மூவரும்

ஒருங்கு சேர்ந்து போரிட்டனர் என்றும் நமக்கு உணர்த்துகின்ற பழைய கருத்தையும் உரையையும் நாம் படிக்கிறோம்.

பெரியோர்களின் இக் கருத்தை மறுப்பதற்கு ஆதரவாகச் சான்றுகள் பல நம்மிடத்தில்லை. எனினும் நாம் அத்துடன் வேறொரு புதிய கருத்தையும் கூறுவதற்கு ஏற்ற வண்ணம் சில பாடல்கள் ஆதரவாய் உள்ளன.

கபிலரும் மற்ற சங்கச் சான்றோரும் பாடிய பாடல்களிலிருந்து, பாரி இருமுறை மற்றைய மன்னர்களோடு மறக்களத்தில் போர் செய்துள்ளனன் எனத் தெரிகிறது.

இரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
ஆடுகழை நரலும் சேட்சிமைப் புலவர்
பாடியானுப் பண்பிற் பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற லுடே (புறம்-120)

என்ற கபிலரின் வாக்கால், பாரி தன்னுடன் உடன்று வந்த பகைவர்களது புறங்கொடுத்தோடும் வீரக்கழலினது ஆரவாரத்தைக் கேட்டு நாணி, அவர்களைத் தொடர்ந்து பின் செல்லாது கண்டு நின்றான் என்ற வரலாற்றை நாம் அறிகிறோம்.

இவ் வரலாற்றிற் கொப்ப நக்கீரனார் என்னும் நல்லிசைப் புலவரும்,

ஆளிடூஉக் கடந்து வாளமருழக்கி
யேந்துகோட்டி யானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி (அகம்-78)

என்னும் அடிகளின் மூலம் பாரி, அண்ணல் யானை



வேந்தரை வென்று விளங்கிய வரலாற்றைப் பாடியுள்ளார்.

இவ்விரு சங்கச் சான்றோர்களின் பாடல்களிலிருந்து பாரியின பகைவர் யாவர் என்பது உறுதியாய்த் தெரியவில்லை. கபிலர் "பகைவர் ஓடுகழற் கம்பலை கண்ட" என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றார். நக்கீரனாரும் இவ்வாறே "ஏந்துகோட்டியானை வேந்தர் ஓட்டிய" என்று கூறுகிறார். பகைவர் என்ற சொல்லால் பகைவர் யாவர் என்பதை ஒரு தலையாக அறிய முடியவில்லை. நக்கீரனார் பாடிய "வேந்தர்" என்ற சொல்லால்தான் அது சிறிது விளக்கம் பெறுகிறது. பகைவர் "வேந்தர்" என்பதை அறிய முடிகிறது. ஆனால் அவ்வேந்தர் என்ற சொல் சேர, சோழ, பாண்டியரைக் குறிப்பது எங்ஙனம்? அற்றை நாளில் புலவோர், குறுநில மன்னரையும் வேந்தரென்றே பரவியுள்ளனர்.

பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னுடே

எனக் கபிலரே, பாரியின் நாட்டைப் பாராட்டியுள்ளார். "பணைகெழு வேந்தரை யிறந்தும்" என்ற அடிக்கு "முரசை யுடைய அரசரின் மிகுத்தும் இரவலர்க்கு வழங்கும் வன்மையை யுடையவனது நாடு" என்று புறநானூற்றின் பழைய உரைகாரர் பொருள் கூறுவர். இங்கும் வேந்தர் என்னும் சொல்லிற்கு அவர் முரசையுடை முப்பெருவேந்தரினும் என்று பொருள் கொள்ளவில்லை.

இவ்வாற்றால் கடும்பரியையுடைய நெடுமாப் பாரி பகைவர்களாகிய வேந்தர்களோடு போரிட்டனனென்று' தெரிகிறது. அப்போரிலே பாரி, தன் பகைவர்களைப்

புறங்கொடுத்து ஓடுமாறு போரிட்டு விரட்டினன் என்றும் அங்ஙனம் ஆற்றுது தம் வீரக்கழல் ஒலிக்க ஓடும் அவ் வரசரை அறம்பற்றித் தொடர்ந்து சென்று கொல்லவில்லை யென்றும் அறிய முடிகிறது. எனினும் இப்போருக்கான அடிப்படை இன்னதென நம்மால் உணர முடியவில்லை. அவனுடைய இசையால் மேம்பட்ட புகழைப் பொருமலே அன்னுர் பொருதப் போந்திருக்க வேண்டுமென்று நாம் துணிந்து கூறின் அதிலே பிழை இருக்க நெறியில்லை.

தோற்றேடிய வேந்தர் அத்துடன் அமையவில்லை. அவர்களின் தோல்வியால் பாரியின் புகழ் மேலும் வளர்ந்து ஓங்கியது. மாவள்ளியன் எனப் புகழ் நிறுவிய அவனை இப் போரிலே அவன் அடைந்த வெற்றியால் புலவர் அனைவரும் மாவீரன் என்று மேலும் பாராட்டிப் பாடினர். அவன் இசையைத் தாங்கள் செல்லுமிட மெல்லாம் பரப்பினர். அவனுடைய நாடும் குன்றும் உலகத்தாரின் பேச்சாக விளங்கின. சிறிய வரையாகிய பாரியின் மலையை, அவனது இசை மேம்பாட்டால் அனைவரும் அறிந்தனர். பாரியும் மேலும் ஈகையிற் சிறந்தோனுப் இசைபட வாழ்ந்து வந்தான்.

காற்றுல் மோதப்பட்ட கடுங்கனலைப் போன்று தோற்றேடிய காவலர் நெஞ்சங் கவன்றன ரெனினும் அவரின் வஞ்சம் பன்மடங்கு பெருகியது. பழிக்குப் பழி வாங்க அவர்கள் கனன்றனர். முன்னையினும் பன்மடங்கு படைகளைப் பெருக்கி, "அழுக்காறு என ஒரு பாவி" தூண்ட மறுமுறையும் பறம்பு மலையை அணுகி முற்றுகை இட்டனர்.

மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும் (புறம்-109)



எனும் கபிலரின் அடிகளால் அமர் கருதி வந்த அரசர்களின் படைப் பரப்பை நாம் நன்கு அறியலாம். அவர்களின் நால்வகைப் படையும் நானில மாதின் முதுகு நெளியும் வண்ணம் அடர்ந்து எந்திருந்தன.

முற்றுகை பல ஆண்டுகள் நடந்தன. பாரியின் பறம்பு மலையிலே உள்ளவர்களின் வாழ்வோ இதனுல் எள்ளளவும் இடையூறு அடையாது என்றும் போல் இனிதே நடந்தது. அவன் மலை, உழவர் உழாமலே நான்கு பயனையும் தரவல்லது அல்லவா? எனவே மக்கள் அனைவரும் மனமயராது வாழ்ந்தனர். அம் மலையிலே உள்ள மரங்களில் வாழும் பறவைகளும் போரின் ஆரவாரம் அணுகாக் காரணத்தால் காலையிற் பறந்து சென்று மாலையில் செந்நெற் கதிர்களை அலகுகளில் பற்றியவாறு தம் இருப்பிடங்களை வந்தடைந்தன என்பதை ஔவையார்,

... ... .. பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு (அகம்-303)

என அழகுறப் பாடியுள்ளார். அம் மலையில் உள்ள பெண்களும் மூவேந்தரின் முற்றுகையைக் கண்டு நெஞ்சம் கலங்கவில்லை. அச்சமற்ற வாழ்வை அவர்கள் நடத்தி வந்தனர் என்பதைப் பாரி மகளிரின் செயலால் தெள்ளிதின் உணரலாம்.

பூஞ்சோலையிலே "மாயிரும் பிலி மணிநிற மஞ்ஞை ஆடுவதையும் பெரிய மலையின்கண்ணோ பலாப் பழத்தை வெறுத்த முசுக்கலை தாவி உகள்வதையும் பார்த்துக் கொண்டே பாரியின் பாவையர் மலையின் நெடிய உச்சியை

அடைகின்றனர். அங்கே நின்று தம்முடைய தந்தையின் அருமையை அறியாது போரெதிர்ந்து வந்த தானை வேந்தரின் கலிமாவை விளையாட்டாக அவர்கள் எண்ணிக் கணக்கிட்டனராம்.

பறம்பு மலையினை முற்றியிருந்த மன்னர்களால் மக்களுக்கோ, அன்றிப் பறவைகளுக்கோ எவ்வித இடையூறும் நிகழவில்லை. பெண்களும் அம் மூவரின் படையெடுப்பைப் பகடியாக எண்ணிக் காலங் கழித்தனர். இயல்பிலேயே வெருவும் தன்மையுடைய முசுக்கலையும் மயிலும் கூட அச்சமின்றி வாழ்ந்தன. இவ்வாறுன வளம் நிறைந்த பறம்பு மலையிலே உள்ள மக்களின் வாழ்வை, மாறுபாடுற்று வந்த மன்னர்க்கு அறிவுறுத்தி அன்னவரை மீளச் செய்ய வேண்டுமென கபிலர் எண்ணினர். அழுக்காறு முற்றி அதனால் மலையைச் சுற்றி நின்ற மன்னரிடம் சென்று மலைவளனைப் பாடுகின்றார். மறமிகுந்த மாவண் பாரியின் கைவண்மையையும், வாள்வன்மையையும் பலபடியாகக் கூறி அவர்களைப் பகடி செய்கிறார்.

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே (புறம்-110)

என்றும்,

தாளிற் கொள்ளலிர், வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி



விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர், பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே (புறம்-109)

என அவர்களை இரவலராய் வந்து இரக்கச் சொல்லுதல் அரசரை மிக்கப் பரிகசித்துப் பாடுவதாகும்.

அப்பால், அண்ணல் யானை வேந்தர்க்கு இன்னுறுகிய இனியோன் குன்றைக் கைப்பற்றும் வழியையும் கூறுகிறு உங்கள் தாளாண்மையால் தண் பறம்பைக் கொள்ள முடியாது. வாளாண்மையால் அதை அவனிடமிருந்து வாங்கவும் முடியாது என்பதையும் நீவிர் அறிவீர். கொள்ளும் வகைதான் என்னென வினவுவீராயின், நும் விரையொலி கூந்தல் விறலியர் பின் வர, நீவிர் ஆடினீர் பாடினி ராய்வரின் நாடுங் குன்றும் ஒருங்கே ஈவான். பாரியும், பரிசிலர் இரப்பின் வாரேன் என்னுன். அதற்கு மாறுக இறந்தவரின் எல்லைக்கண்ணே நிற்பான் எனப் பாடுந்திறனல் பகைவேந்தரின் செயலை இழிவு படுத்தியும் பாரியின் அருளுடைமையை உயர்வு படுத்தியும் கபிலர் பாடியுள்ளார்.

இங்ஙனம் பாடிய புலவரின் கருத்துப்படி நடந்தாலொழிய? கைவண்பாரியைக் கைப்பற்றக் முடியாதென கண்டுகொண்ட காவலர் மூவரும், தாளாண்மையையும் மறந்து, வாளாண்மையையும் துறந்து, பழியையும் பாவத்தையும் எண்ணுது, தொன்று தொட்டு வந்த தமிழ்ப் படையின் அறச் செயலையும் அறவே விடுத்து. கபிலர் கூறியவாறே இரவலராய்ச் சென்று இனியோன் பாரியை இரந்து பெற்று வஞ்சனையாற் கொன்றனர் என்று வழி வழியாகப் பலரும் உரைப்பர்.

7

# மூவரும் யாவர் ?

"கடந்தடு தானை மூவிரும்" என்ற சொல் முப்பெரு வேந்தரைக் குறிக்குமாறு எங்ஙனம் என்று நாம் ஐயப்பட்டது போலவே ஈண்டு பாரி கொல்லப்பட்ட வழியினையும் ஐயப்பட வேண்டியுள்ளது.

ஒரு முறை தோற்றோடியவரே மறுமுறையும் மாறு கொண்டு வருவர் என்பது தெளிவு. எனவே முதலில் தோற்றோடியவர் முடியுடை மூவேந்தராயின் அதைக் குறித்துப் பாடும் கபிலரோ அல்லது நக்கீரரோ முப்பெரு வேந்தரையும் குறிக்காது இருக்க என்ன காரணமோ தெரியவில்லை.

முப்பெரு வேந்தர்களில் ஒருவனான சோழன் கரிகாற் பெருவளத்தான் மற்றையவரை வென்றதைத் தெளிவாகப் பாடிய புலவர் அக் காலத்தே இருக்க, நெடுஞ்செழியனின் வெற்றியைத் தம் உரையில் விரித்து எழுதிய உரைகாரர் இருக்க 'கபிலரும் நக்கீரரும் ஏன் பாரி, முடிவேந்தரை வென்று அடக்கியதைப் பாடவில்லை? அதுவும் அவர்கள் அஞ்சியோடியதை ஏன் பாடாது விடுத்தனர்? உரைகாரரும். "மூவிரும் கூடி" என்பதற்கு "முத்திறத்தீரும்" என்று மட்டும் ஏன் உரை யெழுதினர்?



**இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை**
**அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்**
**ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த**
**இருபெரு வேந்தரு மொருகளத் தவிய**

என்று திருமாவளவனைப் பொருநராற்றுப் படையிலே முடத்தாமக் கண்ணியார் பாராட்டிக் கூறுவர். இம் முடிமன்னர் இருவரொடு பதினொரு வேளிரையும் வென்ற வரலாற்றைப் பரணர் "பதினொரு வேளிரொடு வேந்தர் சாய" என்னும் அடிகளால் அகநானூற்றில் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் கரிகாலன், பெருவேந்தரையும் சிற்றரசரையும் வென்ற நிகழ்ச்சி விரித்துக் கூறப்படுகிறது.

**எழுவர் நல்வலங் கடந்தோய்நின்**
**கழூஉவிளங் காரம் கவைஇய மார்பே** *(புறம்: 19)*

என்று குடபுலவியனார் நெடுஞ்செழியனின் போர்த்திறனைப் பாடினார். இதற்கு உரையாசிரியர், "இரு பெருவேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய எழுவரது நல்வலியை வென்றாய்" என்று விரித்து உரை கூறுகின்றார்.

பாரியுடன் உடன்று தோற்றோடியது முப்பெரும் முடியுடை வேந்தர் என்று அவனைப் பாடிய புலவருள் ஒருவரும் குறிப்பிடவில்லை யாதலானும் உரையாசிரியரும் "மூவிரும்" என்ற சொல்லிற்கும் "வேந்தர்" என்ற சொல்லிற்கும் பொதுவாகப் பொருள் கூறிச் செல்லுகின்றமையானும் பாரியுடன் பொருத பகை வேந்தர் மூவரென்பது முடி மன்னர் அல்லர் என்பது அமையும். அவர் குறுநில மன்னரே. முடிவேந்தர் மூவரின் பரந்த சேனையைக் குறுநில மன்னனாகிய பாரி ஒருவனே வென்றான் என்பதும் அவ்வளவு பொருத்தமன்று.

# 8

# வஞ்சனையா ? வாளாண்மையா ?

இனிப்பாரியை வஞ்சனையால் கொன்றதையும் சிறிது ஆராய்வோம். பெருஞ்சித்திரனார் என்னும் பெரும் புலவர்,

முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் (புறம்-158)

என்று பாரியைக் குறிப்பிடுகின்றார். இப்பாடல் பாரியின் மறைவுக்குப் பின்னர் குமணனைப் புகழ்ந்து பாடப் பட்டது. எனவே இவருக்குப் பாரி, பிற வேந்தரை வென்ற வரலாறும் தெரிந்திருக்கும். அத்துடன் பிறர், வஞ்சனையால் அவனைக் கொன்றிருந்தால் அச்செயலும் நன்கு தெரிந்திருக்கும். ஆனால் இப்பாட்டில் அவனுடைய வெற்றியைப் பற்றியோ அல்லது பிறரின் வஞ்சனை குறித்தோ ஏதும் குறிப்பிடாது. "அரசுடன் பொருத" என்று மட்டும் பெருஞ்சித்திரனார் கூறிச் செல்லுகின்றார். இதனால் அவர், பாரியின் முதற்போரின் வெற்றியைக் கூறாது இரண்டாவது போரையே கூறுகின்றார் எனக் கொள்ளுவதே பொருந்தும். இப்போரில் அவன் பொருது வீழ்ந்தான் என்பதைக் கூற



மனமில்லாத அப்பெரும் புலவர், "அரசுடன் பொருத" என்று மட்டும் கூறிச் செல்லுகிறார். என்றும் எண்ணுவதற்கு இடன் உள்ளது.

கபிலரின் பாடல்களைப் பயிலுங்கால் அவர் நான்கு வகையான காலங்களில் பாரியைப் பாடி இருப்பதாகத் தெரிகிறது: (1) பாரியின் கொடைத்திறனைப் போற்றிப் பாடியன. (2) இரண்டாம் முறை முற்றுகையின் போது மாறுவேந்தரைப் பார்த்துப் பாடியன. (3) பறம்பிற்கு என்னுகுமோ என ஏங்கிப் பாடியன. (4) அவன் இறந்த பின்னர்ப் பாடியன.

கபிலர், பறம்பு மலையின் வளம், அம் மலைக்குக் காவலனாகிய வேள்பாரியின் கொடைத்திறன், வீரம், வென்றி முதலியனவற்றைக் கவிதைச் சுவைசொட்ட மிக அழகாகப் பாடுகிறார். கரையால் உடைக்கப்பட்ட அலைகள் ஓயாது மேன்மேலும் கடுகி வருவது போல் பாரியால் தோற்கடிக்கப்பட்ட மன்னர், மீண்டும் சீறி வருகின்றனர். அவரின் சீற்றத்தால் ஏதும் பயன் விளையாது எனக் கபிலர் அவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறார். இதன் விளைவால் அவர்கள் தம் வீறுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லையென்பதையும் அவர் பாடிய பாடல்கள் நன்கு விளக்குகின்றன.

இயற்கை வளன் எவ்வளவுதான் நிறைந்திருந்தாலும் மத்துணை ஆண்டுகள் மலையை நம்பியே வாழ முடியும்? முற்றுகையோ பல ஆண்டுகள் நடக்கிறது. முதல் முற்றுகை 'யாண்டு பல கழிய" நடந்ததாக நக்கீரர் கூற்றால் அறிகிறோம். இதிலே அவர்கள் பாரியால் விரட்டப்பட்டனர். ஆதலின் பல ஆண்டுகள் தொடர்ந்து முற்றி இருப்பதற்கு வேண்டிய வலியுடனும் ஆயத்தத்துடனுமே அரசர் இரண்டாம் முறை வந்திருப்பர். அதனால் இறுதியில் போர்செய்தே தீரவேண்டிய நிலை பாரிக்கு நேர்ந்திருக்க வேண்டும்.

பாரியின் குளிர்ந்த பறம்பு நாட்டின்கண் உள்ள, வளைந்த கரைகளையுடைய தெளிந்த நீரையுடைய சிறிய குளம் பாதுகாப்பாரின்றி உடைவது போலும் என்ற கருத்துப்படப் பாடும்,

தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரி தண்பறம்பு நாடே (புறம் - 118)

என்ற பாட்டும் கார்காலம் மாறிய காட்சிக்கினிய காலத்திலே பறம்புமலை, செம்புற்றின் கண்ணே உள்ள ஈயலை இனிய மோரொடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியை உடைத்து, மெல்லிய தினையாகிய புது வருவாயையும் உடைத்து, முன்பு. இனி அதுகெடுங் கொல்லோ என்னும் பொருள் தாங்கியுள்ள,

கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னலைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
(புறம் - 119)

என்ற ஏக்கங் கலந்த செய்யுளும், "சீரிதாக விளைந்த புதிய வரகை யறுக்கத்; தினையை அரிய; எள்ளிளங்காய் கறுப்ப; அவரையினது கொழுவிய கொடியின்கண் வெள்ளைக்காய் அறுக்கும் செவ்வியாக; நிலத்தின்கண் புதைக்கப்பட்டு முற்றிய மதுவாகிய தேறலைப், புல்லாலே வேயப்பட்ட சிறிய மனையின்கண் குடியுள்ள இடந்தோறும் நுகரக் கொடுக்க; நறிய நெய்யிலே கடலை துள்ள அதனோடு சோற்றை அட்டு ஊட்டுவதற்குப் பெரிய தோளையுடைய மனையாள் கலம் பூசு தலைப் பொருந்த; வருந்த வேண்டாத புது வருவாயை யுடைத்து முன்பு. இனி அது கெடும் போலும்" என்ற கருத்



துப் பொதிந்த பாடலும் ஆகிய மூன்றும், மூன்று மன்னர்களின் முற்றுகையைக் கண்டு கலங்காத மக்கள் கலங்கிய கலக்கத்திற்குப் பின்னும், பாரியின் இறுதிக்கு முன்னும் பாடப்பட்டவையாக உள்ளன. போர் செய்யாது பறம்பு மலையின்மீதே இருந்திருந்தால் கபிலர் இங்ஙனம் இரங்கிப் பாடக் காரணமில்லை. மலைவளம் குன்றினால் ஒன்று மறக்களம் புகுதல்வேண்டும். அல்லது பகைவனிடம் சரண் அடைதல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்றனைப் பின்பற்றுவதைத் தவிர பாரிக்கு வேறு வழி இல்லை.

பல ஆண்டுகள் நீடித்த முற்றுகையால் மலையின் வளன் குறைந்து போய் இருக்கும். எனவே போர் செய்வதே சிறந்த வழி என்று பாரி கீழே வந்திருக்க வேண்டும். வெளியிலிருந்தும் யாதொரு உதவியும் அடையா வண்ணம் பாரியின் அடையார் ஆவன செய்திருப்பர். இவற்றால் வளமிழந்து வலியிழந்த பாரி சில நாட்கள் வீரமாகப் போரிட்டு வீழ்ந்து, துறக்கம் புகுந்திருக்க வேண்டும்.

இதல்லாமலும் ஔவையாரின்,

... ... ... பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப்போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைத்தேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு (அகம் - 303)

என்னும் அடிகளுக்கு உரையாசிரியர் கூறும் உரை, பறம்பு மலையின் வளம் மூவரின் முற்றுகையால் வறண்டு போயிற்று என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

பறம்பின் வளம் வற்றிய காரணத்தால், கபிலர் அம்மலையிலே உள்ள பறவைகளை நன்கு பழக்கி இருந்தார் எனவும்

அவ்வாறு பழக்கப்பட்ட பறவைகள் பறம்பு மலையினின்றும் வைகறைப் போதில் பறந்து சென்று அந்திமாலையில் தம் அலகுகளிலே செந்நெற் கதிர்களைத் தாங்கிய வண்ணம் கபிலரிடம் திரும்பிவந்தன என்றும் மேலே உள்ள அடிகளுக்கு விரிவாக உரை கூறப்பட்டுள்ளது.

இவ் வுரையின் பொருத்தம் எவ்வாறு இருப்பினும் இதனின்றும் விளங்கும் உண்மை ஒன்றே ஒன்றுதான். பறம்பு மலையின் வளம், முற்றுகையால் வெளியே வர முடியாத மக்களை உண்பிப்பதற்கு உதவவில்லை என்பதே அவ்வுண்மை. எனவே ஈரநெஞ்சமும் அறவுணர்வும் சாலமிகவுடைய வள்ளல் பாரி, தன் குடிமக்கள் உணவின்றிப் பசியால் வாடித் தவிப்பதைப் பொறுக்காது கீழே இறங்கிவந்து வீரமுடன் பகைவர்களை எதிர்த்திருக்க வேண்டும். அங்ஙனம் அவன் செயலாற்றாது, பறம்பின்மீதே உள்ள தன் “ஒவத்தன்ன வினைபுனை நல்லில், பாவையன்ன நல்லோளுடன்” இருந்தான் எனக்கொள்வது அவனுடைய முன்னைய வீரத்திற்கும் அருளுடைமைக்கும் சிறிதும் ஏலாத செய்தியாக உள்ளதை எவரும் எளிதில் அறியலாம்.

இவ்வாறன்றி அவன் வஞ்சனையால் கொல்லப்பட்டிருப்பின், அவன் இறந்த பின்னரும் அவன் மகளிர்க்காக வாழ்ந்த கபிலர் வஞ்சனையால் உயிர் துறந்த அச்செய்தியைப் பாடாதிருப்பரோ? வஞ்சித்துக் கொன்ற கயவர்களை வையாது இருக்கவும் அவரால் ஒல்லுமோ? மற்றைப் புலவர்தாம் வாளா இருப்பரோ? பெண்கொலை புரிந்த நன்னனை ஏசிய புலவர் கூட்டம் அக் காலத்தே இருந்தது. வாய்மை தவறாத ஆய் எயினனின் அழிவுக்குக் காரணமான நன்னன் உதியனைப் பழித்துத் தூற்றிய மக்கள் அக்காலத்தே வாழ்ந்துள்ளனர். இவ்வாறெல்லாம் பழியைத் தூற்றும் பாவலரும் மக்களும் நிறைந்திருந்த



காலத்திலே பெரு வள்ளல் ஒருவனை வஞ்சனையால் கொன்ற வேந்தரைப் பழியாது அவர்கள் வீணே விடுத்துப் போவரோ? அதுவும் முடியுடை வேந்தரே அவ் வஞ்சகச் செயலைச் செய்திருந்தால் அதனைத் தகையாது விடுவரோ? எனவே பாரி போரிற் கொல்லப்பட்டுத் தன் புகழை இந்நிலவுலகில் நிறுத்திவிட்டு அகன்றனன் என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

அழுக்காறு நிறைந்த அரசர்கள் பாரியைக் கொன்றுவிட்டனர். அதனால் எப்பொழுதும் நீங்காத பழியைத் தேடிக்கொண்டனர். பாரி மாய்ந்த பின்னர் அவன் மகளிரை அழைத்துக் கொண்டு நீர்வார் கண்ணொடு கபிலர் செல்லுகிறார். அப்போது அம் மகளிர்,

**அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**
**எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்தரெம்**
**குன்றும் கொண்டார்யா மெந்தையு மிலமே**

(புறம் - 112)

என்று பாடிய பாடலில் “வென்றெறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார், யாம் எந்தையும் இலயே” என்று கூறுகின்றனர். “வென்று” எறிமுரசின் வேந்தர்” என்ற சொல்லிலிருந்து பாரியை அவர்கள் வென்ற உண்மையை நாம் காணலாம்.

**வென்றெறி முரசின் வேந்தரெம்**
**குன்றும் கொண்டார் யாமெந்தையு மிலமே**

என்ற அடிகள், பகைவேந்தர் பாரியைக் களத்தே அழித்ததோடுமட்டும் நிற்காமல் அவன் வளமார்ந்த பறம்புமலை

யினையும் கைக்கொண்டனர் என்பதையும் விளக்குகின்றன. வஞ்சனையால் பாரியை அவர்கள் கொன்றிருப்பின், குன்றை அவர்கள் எங்ஙனம் கொள்வர்?

விறலியராய் ஆடிப்பாடி வந்த அவ் வீரமிலா வேந்தர், வேள் பாரியை எவ்விடத்தில் வஞ்சித்தனர்? பாரியை அவன் அரண்மனையிலேயே கொன்றனரா? அல்லது இரந்து அவனைப் பரிசிலாகப் பெற்றுத் தனியிடத்தில் அழைத்துச் சென்று அம்மேலோனை வதை செய்தனரா? அவன் அரண்மனையிலேயே பாரியை அவர்களால் ஏதும் செய்திருக்கமுடியாது. அங்ஙனம் ஏதாவது செய்திருந்தால் அவர்கள் தப்பி வெளியே சென்றிருக்கவும் இயலாது. எனவே தனியே அழைத்துச் சென்று பாரியைக் கொன்றனர் எனின் கள்வர் போல் கரந்துசென்ற அவர்கள், எவ்வாறு அவன் இறந்த பின்னர் மீண்டும் பறம்பு மலைக்கு வந்து அதனைக் கைப்பற்றினர்? "குன்றும் கொண்டார், யாமெந்தையு மிலமே" என்ற அடி மாற்றரசர் பாரியின் மலையையும் கொண்டு போரில் அவனையும் மடித்தனர் என்னும் பொருளையே விளக்குகிறது.

"வென்றெறி முரசின் வேந்தர்" இகழ்ச்சிக் குறிப்பு எனக் கூறுவர். பன்முறை ஊன்றிப் படிப்பினும் அக்குறிப்பு நம் அகத்தே ஓடவில்லை. கபிலரும் பகை வேந்தரைக் குறிப்பிடுங்கால் இக்குறிப்புப்பட ஒருபாட்டிலேனும் கூறவில்லை.

மூவேந்தரும் பாரியை அடுகளத்தில் வெல்லாது வஞ்சனையால் மாய்த்திருப்பின், பாரிமகளிருக்குத் தம் தந்தை வஞ்சனையாலிறந்த செய்தி நெடு நேரங் கழித்தே எட்டி இருத்தல் வேண்டும். அப்போது பகைவர்கள் அவர்களைச் சிறைப் பிடிக்காமல் தப்ப விட்டிருக்க மாட்டார்கள்.



வஞ்சனையால் அவர்களையும் பிடித்திருப்பர். ஏனெனில் இப்போரே மகள் மறுத்தலைக் காரணமாகக் கொண்டே எழுந்த போரல்லவா? கபிலர் மட்டும் தப்பலாம். புலவரைச் சிறைப் பிடிக்கும் வழக்கம் அக்காலத்தில் எங்கும் இல்லை. போரில் இறந்தால்தான் அச் செய்தி காட்டுத் தீ போல் கடிதில் பரவும். அச்செய்தி அறிந்த கபிலர், மகளிருடன் வெளியே விரைந்து ஏகி இருப்பர். அம்மகளிரின் பாடலிலிருந்து அவர்கள் யாரும் அறியா வண்ணம் இரவிலே வெளியேறியதாகவும் கொண்டால் அதனால் இழுக்கொன்றுமில்லை.

கபிலரும் தம் துயரம் ஒருவாறு ஆறிய பின்னர் செல்வக் கடுங்கோவாழியாதனிடம் செல்லுகின்றார். பாரியை வஞ்சனையால் அழித்ததிலே சேரனும் சேர்ந்திருப்பின் கபிலர் அவனிடம் செல்வாரா? இதிலிருந்து பாரியோடு பொருதவன் சேரன் அல்லன் என்பது வெளிப்படை. அவனிடம் சென்ற கபிலர் அவனைப் பத்துப் பாடல்களால் கழ்கிறார். பதிற்றுப் பத்தின் ஏழாம் பத்தாக இவர்பாடல் உள்ளது.

முதற்பாட்டில் பதினெட்டு வரிகள் உள்ளன. அவற்றுள் ஐந்தே வரிகள்தாம் செல்வக் கடுங்கோவைப் புகழ்ந்து கூறுகின்றன. மற்றவை அனைத்தும் பாரியின் பரந்த புகழையே இசைக்கின்றன.

பழுத்து வெடித்த பலாப்பழத்திலிருந்து ஒழுகும் தேனை வாடைக் காற்று அள்ளி வீசும் மலையிற் பொருந்திய மிக்க வெற்றியை யுடையவன். "ஓவத் தன்ன வினைபுனை நல்லிற் பாவை அன்ன நல்லோள் கணவன்". உன்ன மரத்துக்குப் பகைவன். மலர்ந்த மார்பில் புலர்ந்த சாந்தினையும் குன்றாத கொடையினையு முடைய எம் கோவாகிய "மாவண் பாரி, முழவு மண் புலர, இரவலர் இனைய, வாராச் சேட்புலம்

படர்ந்தோன்.'' ஆதலால் என்னைக் காப்பாயாக என்று உன்னிடம் இரக்க நான் வாரேன். ''ஈத்தது இரங்கான், ஈத்தொறும் மகிழான், ஈத்தொறும் மாவள்ளியனாகிய பாரியைப் போன்றவன் நீ, என்று பலரும் சொல்வதால் நின் புகழ்தர வந்தேன்'' என்கிறார்.

இந்தப் பாட்டிலும் பாரி வஞ்சனையாற் கொல்லப்பட்ட செய்தி கூறப்படவில்லை. கபிலரின் இப் பாட்டால் அது நன்கு வலியுறுவதோடு, ''மூவிரு முற்றினும்'' என்ற சொல்லிலும் முடியுடைய வேந்தர் இல்லையென்பது நன்கு தெளிவாகிறது.

இறுதியாக வடக்கிருந்த கபிலர் பாடியதாக உள்ள புறப்பாட்டில் அவர்,

**பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது**
**ஒருங்குவரல் விடாஅது ஒழிகெனக் கூறி** *(புறம் - 236)*

என்று பாரியைக் குறிப்பிடுகின்றார். பாரி வஞ்சனையால் கொல்லப்பட்டிருப்பின் அவன் கபிலரை ஒருங்கு வரல் வேண்டாமென யாண்டுக் கூறி இருப்பான்?

மூவேந்தரின் முற்றுகையால் சற்றும் இடர் இல்லாத வாழ்வைப் பாரி பறம்பு மலையிலே நடத்தி வந்தான் எனில் சாவைப் பற்றி அவர்கள் இருவரும் ஏன் உரையாடல் வேண்டும்? உன்னுடன் நானும் மரிப்பேன் என்று கபிலர் கூறுவதற்கும் அவன் அதைத் தடுப்பதற்கும் சமயம் எங்ஙனம் வாய்க்கும்? கபிலர் அறியுமாறு மூவேந்தர் பாரியை வஞ்சனையால் கொன்றனரா? என்ற பல ஐய வினாக்களுக்கு விடை யாதுமில்லை.



போரைத் தவிர வேறு வழியில்லையென்ற நிலை வந்த பின்னரே பாரியும் கபிலரும் போரின் வெற்றி தோல்வியைப் பற்றியும் தங்களின் எதிர்கால வாழ்வைப் பற்றியும் பேசி இருப்பர். அங்ஙனம் உரையாடும் பொழுதே கபிலர் பாரி இறப்பின் தாமும் உடன் இறக்க விரும்பும் தம் அவாவினைக் கூறி இருப்பர். அவரின் பெருந்தகு நட்பைக்கண்டு சிந்தை மலைத்த அச் சீரியோனின் உள்ளம் அதைத் தடுத்திருக்க வேண்டும். முல்லையின் துன்பத்தைத் தீர்த்த அப் பெருமனம் தன் பொருட்டுத் தன் நண்பர் துடித்து மாள்வதை ஒருகாலும் விரும்பாது.

போரில் ஒருகால் தான் இறப்பின் தன் நன்மக்களைக் காக்க கபிலர் வாழவேண்டுமென்றும் பாரி விரும்பி இருக்கலாம். எக்காரணத்தாலோ கபிலரும் உடன்மாய்வதை அவன் விரும்பாமல் அதைத் தடுத்து விட்டான். கபிலரும் அவன் வேண்டுகோளுக்கு இணங்க, பாரி மாய்ந்த பின்னர் அவன் மகளிர்க்குரிய கடமைகளை நிறைவேற்றுங் காலம் வரை உயிரோடு இருக்கிறார். கபிலரை உடன் மாய வேண்டாமெனத் தடுத்து நிறுத்தல் முதலாய இந்நிகழ்ச்சிகள் பாரி போர்க்களம் நோக்கிப் புறப்படு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டுமென எண்ணுதற்கு இயைபுடைத்தாய் உள்ளன.

மேலும், திருமுடிக்காரியைப் பற்றிக் கபிலர் பாடிய பாடல்களாலும் அவர் ''மூவிருங் கூடி'' என்று முன்னர் குறித்துப் போந்த சொல், மூன்று முடிவேந்தரைக் குறிக்க வில்லை என்பதும் அறியக் கிடக்கிறது. காரியின் அருள் திறனைப் பாடுங்கால்,

**வீயாத் திருவின் விறல்கெழு தானை**
**மூவருள் ஒருவன் துப்பா கியரென**
**ஏத்தினர் தருஉங் கூழே நுங்குடி**

*(புறம் - 122)*

என்ற அடிகளால் முடியுடை மூவேந்தரும் அவன் துணையை நாடி வருவர் என்பதைக் குறிக்கிறார். பாரியுடன் முடிவேந்தர் மூவரும் முதலில் தோற்றோடியது உண்மையாயிருப்பின், அவர்கள் மறுமுறையும் தோற்கா வண்ணம் காரியின் துப்புத் துணையை வேண்டிப் பெற்றிருப்பர். காரி, பாரியுடன் போரிடாத காரணத்தால் முப்பெரு வேந்தரும் பாரியுடன் பொரவில்லை என்பது போதரும். காரி குடும்பத்தில் பாரிமகளிர் வாழ்க்கைப் படவும் இது துணையாக இருந்தது.

பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரே னென்னான் அவர்வரை யன்னே

என்னும் அடிகள் வாயிலாகப் பாரியின் இயல்பினைக் கபிலர் மூவேந்தர்க்கும் சொல்லி அதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்குப் பாரியின் கொடைத்தன்மை குன்றி இருக்கவில்லை.

முதற்போரில் தோற்ற அவர்கள், பின்னர்ப் பெரும்படையுடன் அடுகளம் நோக்கி வராமலே மிக எளிதில் வஞ்சனையாற் கொன்றிருக்கலாம். அது கருதவில்லையாதலால்தான் முன்னையினும் படைபெருக்கி, முரண் மிகுந்து, முற்றுகையை நீடித்து முடிவில் பாரியைப் போரில் கடந்தனர்.

Y211,1
N53-6
TAMIL NADU ARCHIVES LIBRARY
22 FEB 1979
EGMORE, MADRAS
No. 4858

## வஞ்சனை வளர்ந்தவகை

பாரியுடன் வெஞ்சமர் குறித்துவந்த மூவிரு வேந்தரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கபிலர், அவர்களின் இயல்புகளை நல்லவண்ணமே சிறப்பித்துப் பாடுகின்றார். "நளிகொள் முரசின் மூவிரும்," "கடந்தடு தானை மூவிரும்" (வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படையினை யுடைய மூவர்) "அண்ணல் யானை வேந்தர்", "பாரியது அருமை அறியார் போரெதிர்ந்து வந்த" என்ற சொற்றொடர்களால் பகைவர்களைக் குறிப்பிடுகின்றார். பாரிமாய்ந்த பின்னர் பறம்பு விடுத்த கபிலர் அதனைக் கண்டு நீர்வார் கண்ணொடு கதறிப் பாடும்பொழுதும் "பாரிமாய்ந்தெனக் கலங்கிக் கையற்று நீர்வார் கண்ணேம் நிற்தொழுது பழிச்சிச் சேறும்" என்று புலம்புகிறார். ஈண்டாவது பகை வேந்தரின் வஞ்சனையை அவர் குறிப்பிட்டிருக்கலாம். பிறபுலவரும் அக்கருத்துப்பட யாண்டும் இடம் கொடுக்காது பாடியுள்ளனர். இதனால் பாரிமகளிர் தம் கையறு நிலைப்பாட்டில், "வென்றெறி முரசின் வேந்தர்" என்று கூறின காலையில் அதில் இகழ்ச்சிக் குறிப்புப் பெறப் பாடினர் எனக் கூறுவதைச் சொல் அளவில்கூட ஏற்றுக் கொள்ளுவதற்குரிய

இடம் காணோம். அவ்வாறு கொண்டால், கபிலரின், ''நளி சொன், முரசின் மூவிரும்'' ''கடந்தடுதானை மூவிரும்'' முதலாய அடிகளிலும் இகழ்ச்சிக் குறிப்பு இருப்பதாகக் கூறல் வேண்டும். ஏனோ இவைகளுக்கு மட்டும் அப்பொருள் கூறாது விடுத்தனர்?

இவ்வாறு பாரி, மறக்களம் புகுந்து மாற்றாருடன் போரிட்டே துறக்கம் புகுந்தான் எனக் கூறுவதற்கு ஏற்ற அகச்சான்றுகள் பல இருந்தும் பாரியை வஞ்சனையால் கொன்றனர் என்ற கருத்து நம் தமிழ்நாட்டில் எப்படியோ வேரூன்றிவிட்டது. சங்க காலத்திற்குப் பின்னரே இக்கருத்து வலிபெற்றிருத்தல் வேண்டும். பாரியின்பால் கொண்ட அன்பால் இது நிலைபெற்றிருக்கலாம்.

நம்முடைய நாட்டில் நீதியினின்றும் நீங்கியவரை வஞ்சகர் என்று கூறுவது இன்றும் வழக்கமாக உள்ளது. நெறியின் நீங்கிய செயல்களை வஞ்சனைச் செயல்கள் என்று புலவரும் குறிப்பிடுகின்றனர்.

தயரதன் தனக்குக் கொடுத்த வரத்தின்படியே பரதன் நாடாளவும், இராமன் காடாளவும் வேண்டுமெனக் கைகேயி வரம் கேட்கின்றாள். அவளுடைய செயல் வாதப்படி சரியானதே. இதனால் அவளைக் குறை கூறுவதும் தவறுடைத்தாகிறது. எனினும் கம்பர் இவளை வஞ்சனைக்காரி என்றே நமக்கு விளக்குகிறார். இவளுடைய செயலை வைத்துக்கொண்டு மாதர் கூட்டத்தையே அவர் நொந்து, 'வஞ்சனை பண்டும் மடந்தை மாதரைத் தஞ்சென உள்ளலார்கள் தக்கோர்'' எனக் கூறுகிறார். ''ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியினம்மா'' என்று வியந்து பாராட்டக்கூடிய குணம் எனும் குன்றேறி நின்ற பரதனைச் சேய்மையில் படைகளோடு கண்ட குகன், ''வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரோ?'' எனக் கூறுகின்றான்.



பரதனும் அவன்தாயும் வஞ்சகர்களாகக் கருதப்பட்டது எங்ஙனம்? யாது காரணம்பற்றி? மூத்த மகனே நாடாளப் பிறந்தவன் என்று தொன்று தொட்டுக் கருதி வந்த பழக்கம் ஒன்றைத்தானே தற்கு ஆதாரமாகக் காட்டமுடியும்? இதைத் தவிர வேறு என்ன சொல்லிக் கைகேயியை ஏச முடியும்? இராமனைக் காட்டிற்கு அனுப்பியது அநீதியென்று சிலர் கூறலாம். அவனைக் காட்டுக்கு அனுப்பியதால் கைகேயின் அரசியல் அறிவையே நாம் போற்றல் வேண்டும். இராமன் நாட்டிலேயே இருந்தால் மக்கள் அவனுக்காகக் கலகஞ் செய்வர். அவனுடைய உரிமையை ஆதரிக்கும் பெருஞ் செல்வர்களும் அதற்குத் துணைபுரிவர். இராமன் நாட்டைவிட்டே சென்று விட்டால் மக்களின் கலக உணர்ச்சி எழுவதற்கு இடமேயில்லை. பதினான்கு ஆண்டுகள் கழித்து அவன் நாட்டுக்குத் திரும்பி வந்தால் அவனுக்காக இரக்கப்படவும் மாட்டார்கள்.

இவ்வாறெல்லாம் நாம் காரணம் காட்டிக் கைகேயினுடைய செயலை நிறுவிக் காட்டலாம். எனினும் அது நீதியின்பாற்பட்டது என்று மட்டும் நம்மால் நிலை நிறுத்த முடியாது. இவ்வொரு காரணம்பற்றித்தான் கம்பர் அவளை வஞ்சனையின் உருவமாக்கினார். அவர் அவ்வாறு அவளைக் கருதியதை நாமும் மிகச் சுவைத்து இன்புறுகின்றோம்

''நிழலில் நீளிடைத் தனிமரம் போல'' பாரி, வேந்தர் அனைவரினும் விஞ்சிய வள்ளன்மை உடையவனாக விளங்கி வந்தான். பாணர்க்கும் விறலியர்க்கும் புலவர்க்கும் களியானை, செம்பொன், தேர், ஊர், அனைத்துமே தந்தான். மடையர்களும் அற்பர்களும் அவனிடம் சென்று வெறுங்கையராய்த் திரும்பியதில்லை. ஓரறிவுடைய முல்லையும் அவன் கொடையைப் பெற்று வீறுடன் வாழ்ந்ததை நாம்

அறிகிறோம். இவை அனைத்திற்கும் மேலாக இரப்பவர் தன்னையே வேண்டினும், தரும் பண்பினனாக விளங்கினான்.

இன்ன தன்மையால் அவன் உயர்வு விளங்குவதோடு இரவலர்க்கு எவ்வாறு இன்றியமையாதவனாக இவ்வுலகில் அவன் நிலைபெற்றுவிட்டான் என்பதும் போதரும். எனவே அவனிடம் போருக்குரிய நல்ல காரணம் ஏதுமின்றி, மகள் மறுத்தலை நொண்டிச்சாக்காக வைத்துக், கடுஞ் சமரில் கண்ணோட்டமின்றிக் கொன்றனர் என்றால் கொன்ற வேந்தர்கள் நீதியின்பாற் பட்டவர்கள் ஆவரோ? பொறாமை அவர்கள் உள்ளத்தில் கொழுந்துவிட்டெறிந்ததையும் அறிந்த மக்கள் அவர்களின் அநீதிச் செயலை மிகத் தாழ்ந்ததாகக் கருதினர். பாரியின் பிரிவால், பாணரும் புலவரும் விறலியரும் வஞ்சிக்கப்பட்டனர். அவர்களின் வாழ்வு வஞ்சிக்கப்பட்டது. அவனைப்போல் எவரும் இனிக்கொடுக்க முடியாது என்பதையும் அக் கலைஞர் உணர்வர். நீதியின் நிலைக்களனாகவும் அறத்தின் பாதுகாவலனாகவும் இரவலரின் இடுக்கணைத் துடைக்கும் இரவியாகவும் புலவர்களின் தோன்றாத் துணைவனாகவுமிருந்த அவனைக் கொன்றது நீதியைக் கொன்றதாகும். அறத்தை அழித்ததாகும். வள்ளன்மையை வெட்டி வீழ்த்தியதாகும்.

உண்மை தோற்றுவிட்டது என்றால் வஞ்சனை வெற்றி பெற்றது என்றுதானே பொருள். இக்காரணம் பற்றித்தான் பாரிவேளைக் கொன்ற வேந்தர்கள் மாந்தரால் வஞ்சகர்களாகக் கருதப்பட்டனர். அவனை அவர்கள் வென்ற செயலை வஞ்சகச் செயல் என்று அனைவரும் கூறினர். பாரிவேள் மூவேந்தராலும் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான் என்று வழங்கி, வளர்ந்துவரும் வரலாறு இவ்வாறுதான் தோன்றி வளர்ந்து நிலைபெற்றிருக்க வேண்டும் என்றும் நாம் எண்ணலாம்.

# 10

# இருள் அகற்றிய இளநிலா

“விரிகதிர் பரப்பி உலக முழுதாண்ட ஒரு தனித் திகிரி உரவோனைக்” காணவில்லை. வையம் அவன் பிரிவை எண்ணி எண்ணிப் பசலைபாய்ந்து இருளால் துன்புறுகின்றது. அவ் வேளையில் அகன் உலகமாகிய அன்னையின் சோர்வைத் தன் இளநகையால் மாற்றும் இளநிலாவைப் போல் பாரியின் பிரிவால் கடுந்துயரம் அடைந்த பாரியின் மகளிர்க்குக் கபிலர் விளங்கினார்.

முழுமதியம் ஒளிவீசும் நாளிலே அம் மதியனைய முகம் படைத்த பாரியின் மகளிரை அழைத்துக்கொண்டு அவர்க்குரிய கணவரைத் தேடும்பொருட்டுக் கபிலர் பறம்பு விடுத்துச் செல்லுகிறார். அக்காலை அவர் பறம்பு மலையை விட்டுப் பிரியமுடியாது கண்ணீர் வெள்ளம் கரைபுரள, அம் மலையை நோக்கிப் பாடும் பாட்டுக்கள் சோகக் கடலினின்றும் படிந்துவந்தனபோல் கல்லையும் கண்ணீர் வடிக்கச் செய்யும் தன்மைத்தாய் உள்ளன. பாரி மகளிரின் பாடலோ தம்மையே கண்ணீரால் குளிப்பாட்டிவிடுகிறது.

நமக்கு இனிய நண்பருடன் நாம் உடனிருந்து உறையுமளவும் அவரின் அன்பு, பண்பு, சான்றாண்மை, அறிவுடைமை முதலிய நல்ல இயல்புகளை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. பிரிந்துறைபோதில்தான் அவரின் அரிய பண்புகளை எண்ணியெண்ணி நாம் அகமகிழ்வோம். அதன் மூலம் பிரிவுத் துயரையும் ஒருவாறு மறப்போம். ஆனால் அந் நல்ல நண்பரை விட்டுப் பிரியும்பொழுது நிகழும் பெருந்துயரைத் தடுக்க உலகில் எதற்கும் வலிமை இல்லை. அன்புடையாரைப் பிரியும்போது அருந்தவத்தோர்களும் சிந்தை நொந்து செப்பிய சொற்களை நாம் பன்முறை படித்துளோம்.

பாரியிடம் நட்புப் பூண்ட பிறகு அவனை விடுத்துக் கபிலர் வேறெங்கும் பெரும்பாலும் சென்றதில்லை எனலாம். அவ்வாறு சென்றிருப்பினும் மிக விரைவில் அவனிடம் திரும்பி இருப்பார். கபிலர் பாரியின் அவைக்களப் புலவராய் மட்டும் இலங்கவில்லை. அவனுக்கு அரிய அமைச்சராகவும் அவர் பணி ஆற்றினார். இதை,

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய் நின்று

(அகம் - 78)

என்னும் நக்கீரரின் தொடர்களால் நன்கு உணரலாம் இவை அனைத்திற்கும் மேலாக அவர்களுடைய நட்பு "இருநிலம் பிளக்க வேர்" வீழ்த்தது.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

என்னும் அருங் குறளை விளக்கும் இலக்கியமாய் இருவரும் வாழ்ந்து வந்தனர். இடிவிழுந்து, பெருமரத்தை இரண்டாகப் பிளப்பதுபோல் பாரியின் பிரிவு இவர்களைச்



சில நாட்கள் பிரித்து வைத்தது. இயற்கையையும் வென்று தம் வழி இணங்கச் செய்யும் பான்மையுடையவராகக் கபிலர் திகழ்ந்தார். புலவர்கள் அனைவரும் மதிக்கும் உயர்வுடையராய்ச் சிறப்புற்றிருந்தார்.

பறம்பு மலையிடமிருந்து வள்ளல் பாரியை எங்ஙனம் வேறுபடுத்த முடியாமல் இருந்ததோ அதையொத்த தொடர்பையே அம்மலையுடன் கபிலரும் கொண்டிருந்தார். 'அன்புடன் புரக்கும் அன்னையைப் போல் சாலப் பரிந்து ஊட்டிய அம்மலையை அவர் பிரியவேண்டிய கெடுநாள் வந்து விட்டது. அதை எண்ணும் பொழுதே கண்ணில் நீர் நிறைந்து விட்டது

தேர்வழங்கும் இருப்பையுடைய உயர்ந்தோனுக்குரிய மலையே! உன் முடிதொறும் வெள்ளருவி வீழ்ந்து செல்லுவது போன்று பாரியின் ஒலித்தன்ன விளை புனை நல்லின் முற்றத்திலே மது ஒழுகும். உன்னுடைய உருவத்தை அண்மையில் உள்ளவர்கள் மட்டும் அறிந்தாரில்லை. பாரியின் பெருமையால் சேய்மையிலுள்ளவர்களும் நின்னை அறிந்து மகிழ்ந்தனர். அங்ஙனம் அவன் இருந்த காலத்தில் பெரும் புகழ் படைத்து விளங்கினாய்.

அண்ணல் யானை வேந்தர்க்கு இன்னாயாகிய இனியோனின் குன்றே! உன் ஒரு பக்கத்திலே அருவி ஆர்க்கும். மறுபக்கத்திலே பாணர்க்காக வார்க்கும் தேக்கள் தேறல் கல்லை அலைத்து ஒழுகும் வண்ணம் அருள் வழித்து நின்றாய்.

பெரிய புகழையுடைய பறம்பு மலையே! பாரி உயிரோடிருந்தபோது மதுக்குடமும் ஊன்சோறும் கொழுந்துவையும் நாங்கள் விரும்பும் வண்ணம் சுவை நிரம்பக் கொடுக்கும் செல்வம் நிறையப் பெற்று எம்மோடு நட்புச்

செய்தாய். இன்றோ அவன் இறந்துவிட்டான். செய்வதறியாது நாங்கள் சித்தங் கலங்கி உள்ளோம். வேள்பாரியின் குறுந்தொடி மகளிரின் மணங் கமழும் கரிய கூந்தலைத் தீண்டுவதற்கு உரியவரை நினைந்து செல்லுகின்றோம். நின்னை வாயார வாழ்த்துகின்றோம். கைகூப்பித் தொழுகின்றோம். பறம்பு மலையே! நாங்கள் செல்லுகின்றோம் என்று அம்மலையில் வழிந்தோடும் அருவி போல் கண்ணீர் இழிந்து ஓட அதனிடம் விடைபெற்றுச் சென்றார். கபிலரின் கண்ணீரைக் கண்ட மகளிரும் மனம் மிகக் கவன்று அந்நாளிரவில் அக் குன்றும் சோர்ந்து அழும் வண்ணம் தம் தந்தையின் பிரிவை எண்ணிக் கவல்கின்றனர்.

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இன்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றம் கொண்டார்யாம் எந்தையு ம் இலமே

*(புறம் - 112)*

என்று வாய்விட்டுக் கதறுகின்றனர்.

பகைவர் முற்றுகை இட்டிருந்த சென்ற திங்களின் முழுநிலாவிலே, எங்களின் தந்தையை உடையேமாய் இருந்தோம். இத் திங்களின் இவ்வெள்ளிய நிலாவின் கண்ணே வென்று அறைந்த முரசினையுடைய அரசர் எமமுடைய மலையையும் கொண்டார். நாங்கள் எங்களின் தந்தையையும் இழந்தோம் என்று ஏங்கி அழுதவண்ணமே அம்மலையை விடுத்துக் கபிலருடன் கண்ணீர், வழியை நனைக்கச் சென்றனர்.

ஈண்டு பாரியின் மனைக்கிழத்தியைப் பற்றி நாம் ஏதும் அறிந்திலம். பதிற்றுப் பத்தில்,



ஓவத் தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன நல்லோள் கணவன்

என்று பாரியின் மனைவி வாயிலாகப் பாரியைப் புகழ்ந்து இசைக்கின்றார் கபிலர். இங்ஙனம் "செயிர்தீர் கற்பின் கொழுந்தாக" விளங்கிய அவள் பாரியின் மறைவுக்குப் பின்னர் என்ன ஆனாள் என்பதைப் புலவர் ஒருவரும் கூறவில்லை. கூறவேண்டுவது மிகை என அவர்கள் விடுத்துச் சென்றனர் போலும்.

'கடவுட் கற்புடைய அக் காரிகை தன் கணவன் இறந்த செய்தியறிந்த உடனே தன் இன்னுயிரை இழந்திருக்க வேண்டும். அல்லது நளிமலர்ப் பொய்கை யெனக் கனல் எரியில் மூழ்கி உயிர் துறந்திருக்க வேண்டும். இவ் இரண்டனுள் ஏதாவது ஒரு முடிவு நிகழ்ந்திருந்ததால்தான் அவளைப்பற்றிய குறிப்பு அறவே விடப்பட்டதுபோலும்!

# 11

# கல்லக வெற்பன்

நாட்டை இழந்து, நளிமலர்க் குன்றையும் இழந்து, அன்புடைய அம்மையையும் அத்தனையும் இழந்த அறிவுடை மகளிரை அழைத்துச் செல்லும் கபிலர் வழி நெடுக அன்னவர்க்குரிய ஆண்மையாளரை எண்ணி வழி நடந்தார். இளமையும் அறிவும் திருவும் ஆண்மையும் ஆற்றலும் ஒருங்குவரப் பெற்றவரே அவர்க்குரிய கணவராவர் என ஏங்கிய அவர் உள்ளம் அவ்வாறுள்ள ஒருவனைக் கண்டது.

ஓங்கி வளர்ந்த குளிர்ந்த மலைக்குரியவனும் வெற்றி மிக்க வேலும் தறுகண்மை மிக்க வாரணமும் மணிகள் ஒளிரும் வளைந்த ஆபரணத்தையு மணிந்த விச்சிக்கோன் என்னும் குறுநிலமன்னனின் உருவம் கபிலரின் கண் முன்னே நின்றது. களிமீதூரப் பெற்றவராய் மகளிரை அழைத்துக்கொண்டு அவனுடைய "மடங்கா விளையுளை" யுடைய நாட்டை அடைந்தார்.

அவனுக்குப் பாரி மகளிரை அறிமுகப்படுத்தும் வாயிலாகக் கபிலர் தம்கோனின் கொடைப் பெருமையைக் கூறுகிறார். நானிலம் முழுவதும் தோன்றிய கவிகளுள் இவருக்கு முன்னிருந்தோரும் பின்னிருந்தோரும் இவனுடைய புகழை



இவ்வளவு அருமையாகப் பாடியதில்லை. பஃறுதற்கரிய அவன் பரந்த புகழை நான்கே அடிகளில் குறிப்பிட்டுச் செல்லும் திறன் கற்பார் நெஞ்சைக் கனிவிக்கும் திறன் மிக்கதாய் உள்ளது.

விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை பருஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்

(புறம் - 200)

என்று பாரிமகளிரை அவனுக்கு விளக்குகிறார். பாரியின் மகளிர் என்ற ஒரு பெருமையே உலகம் அவர்களை எதிரேற்றுக் கொள்ளுவதற்குரிய சால்புடைத்து என்பதைப் பெருமையுடன் விளக்கித் தன் நிலையையும் அவனுக்கு எடுத்துக் கூறுகிறார்.

"யானே பரிசிலன், மன்னும் அந்தணன்"; நீயோ அறப்போர் செய்து பகைவரை வென்று வாளால் மேம்பட்டவன். உனக்கு நான் கொடுப்ப இவ்விருவருள் ஒருவரை மணந்து கொள்வாயாக. அதுவே நீ எனக்குக் கொடுக்கும் அளப்பரிய பரிசிலாகும் என்று அவனை வேண்டுகிறார்.

"வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" எனப் பாராட்டப் பெற்ற கபிலர் அவனிடம் "யானே பரிசிலன், மன்னும் அந்தணன்" என்று தன் வறிய நிலையைக் கூறியும் விச்சிக்கோனின் உள்ளம் நெகிழவில்லை.

அவனை விடுத்துக் கபிலர், துவராபதியை ஆண்டு வந்த, வேளிர்களுள் ஒருவனான இருங்கோவேளை அடைந்து அவனிடமும் தான் கருதி வந்த காரியத்தைக் கூறுகிறார். ஈண்டும் அவர் பாரியின் மகளிரைப் பற்றி அவனிடம் கூறுங்கால்,

இவர்யார் என்குவை யாயின் இவரே
ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற கோமான்
நெடுமாப் பாரி மகளிர்

(புறம் - 201)

என்று அவர்ன் பிறந்த குடியால் அவர் எய்தும் பெற்றியைக் கூறித் தன்னையும் விளக்கித் தனக்கும் பாரிக்கும் உள்ள செறிந்த நட்பையும் அவனுக்கு அறிவிக்கிறார்.

... ... ... யானே
தந்தை தோழன் இவர்என் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே

என்கிறார். பறம்பிற்குக் கோமானாய் பாரடங்காப் புகழ் கொண்டு வாழ்ந்த பாரியின் தோழன் நான். உடலால் நாங்கள் "இருதலைப் புள்ளென" வாழ்ந்தோமெனினும் உயிரால் ஒன்று பட்டவரே ஆவோம். அவனுடைய மகளிராகிய இவர் என் மகளிரே. நான் அந்தணன். பைந்தமிழ்ப் புலவன். நான் வேண்டுவதைக் கொடுத்துக் காக்கவேண்டுவது நின் கடன்.

"செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகராகிய" துவாரபதிக்குக் காவலனே! வேளிர்க்கெல்லாம் வேளாயுள்ளவனே! விறற்போர் அண்ணலே! தாரணியானைச் சேட்டிருங் கோவே! ஒலியற்கண்ணணி புலிகடி மாஅல்! வானுற் கவிக்கப் பட்டுக் கார்க்கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின்கண் அணுகுதற்கரிய வலியையுடைய பொன்படு மால்வரைக் கிழவ! கெடலருங் துரைய நாடு கிழவோயே! என் மகளிருள் ஒருவரை யான்தர நீ வரைந்து கொள்வாயாக" என்று பாடினார்.



இங்ஙனம் அவனைப் பலபடியாகப் புகழ்ந்து பாடியும் அவர் விருப்பத்தை அவன் நிறைவேற்றவில்லை. நயம்பட உரைத்துத் தன் ஏலாமையைக்கூற வகையறியாத அவ் வேள் "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று புலவோரால் பாராட்டப்பெற்ற அவரை வாய்க்கடிப்பாகப் பேசியும் அவமதிக்கத் தயங்கினான் அல்லன்.

அறிவில்லாது அக் குறுநில மன்னன் இகழ்ந்த சொற்கள் கூரிய வேலைப்போன்று பாவலரின் மென்மையான நெஞ்சைத் தாக்கியது. சினமிகக் கொண்டார். சிற்றரசனின் செயலைச் சீறிக் கடிந்தார்.

"ஒலியற்கண்ணணி புலிகடிமால்! பல கோடியாக அடுக்கப்பட்ட பொன்னையுடைய அரையம் என்னும் ஊர் அழிந்த வரலாற்றையும் நீ இப்பொழுது கேட்பாயாக. உன்னையொத்த அறிவினையுடைய உன் குடியுள் பிறந்த ஒருவன் என்னையொத்த புலவர் கழாத்தலையாரை இகழ்ந்ததன் பயனே ஆகும். இயல்சேர் அண்ணலே! இவர் எவ்வியின் பழைய குடியிலே படுவார்களாக என்றும், இவர் கைவண்மையுடைய பாரியின் மகளிர் என நான் ஆராயாது உன்னிடம் சொன்னேனே அச்சொல்லையும் பொறுப்பாயாக! பெருமானே! நின்னிடம் விடையும் கொண்டேன். நின்வேல் சிறக்க!" என அவனைப் பழித்து அப்பால் சென்றார்.

தாம் ஆவலோடு விரும்பிச் சென்ற இரு குறுநில மன்னர்களும் தம் அவாவை நிறைவேற்றாதது அவர் உள்ளத்தைப் பெரிதும் பிணித்து வருத்தியது. புலிகடிமால் தன் விருப்பத்திற்கு இணங்காததோடு மட்டும் நில்லாமல் இதயத்தையும் புண்படுத்தியது அவர் நெஞ்சில் குருதி வடியச் செய்தது. பாரியின் மகளிருக்குத் தான் செய்து முடிக்க வேண்டிய கடமையைச் செய்து முடிக்காமலே வீணாய் உயிர்விட நேருமோ என்ற ஏக்கம் அவரை நிலைகுலையச்

செய்தது. எவ்வளவு பெரியவன் பாரி! மனிதப் பண்பாட்டின் மாணிக்கமே! கார்முகிலும் நாணிக் கண்புதைக்கும் வண்ணம் கரவாது கொடுத்துக் காலப்பெருவெளியில் கலந்து மறைந்து விட்ட ஒளிக்கதிரே! தண்டமிழின் சுவையறிந்த தகைசால் அண்ணலே! உன்னைப்பாடிப் பரவிய என்வாய், பதடிகளைப் பாடி அவமதிக்கப்படவும் நேர்ந்ததே என்று தன் நிலையினை எண்ணி எண்ணித் துயருள் ஆழ்ந்திருந்தார்.

# 12

## இரு வேறு உலகம்

எவ்வளவுதான் அரிய பொருளாய் இருப்பினும் அது நம் கைக்கு வலியக்கிடைப்பின் அதன் அளப்பரிய தன்மையினை அறிவதற்கு நமக்கு ஆற்றல் இருப்பதில்லை. பாரியின் மகளிரை மணக்கவும் மன்னர் மறுப்பாரோ என்று கபிலர் எண்ணி இருந்தார். அவரை மணக்கவும் மறுத்தனர். அவமதிக்கவும் துணிந்தனர் என்பதைக் கபிலர் கண்டார். பாரியின் மகளிரை மணப்பின் ஒருகால் அவனைக்கொன்ற மூவேந்தரும் நம்பாலும் போர் தொடுப்பாரோ என்ற அச்சத்தால் அவர்கள் மறுத்தனரோ என ஆய்ந்தார். அவ்வளவு ஆண்மையற்றுத் தமிழ் வேந்தர்கள் இருப்பரோ என ஐயுற்றார். அச்சத்தால் அவர்கள் மறுத்திருப்பின் தம்மை இகழவேண்டியதற்குக் காரணம் என்ன? அவர்கள் மறுத்தமைக்குக் காரணம் அவர்களின் அச்சமன்று. பாரி மகளிரின் ஏழ்மை நிலையே பெரிதும் காரணமாய் இருத்தல் வேண்டும். "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற உண்மை அவர்க்கு நினைவில் வந்தது. இனி எங்ஙனமேனும் பொருள் தேடிச் செல்லல் வேண்டும். கையகத்துப் பொருள் இருப்பின் காசினியில் வாழும் காவலனும் மதிப்பான். இல்லெனில் தெருவில் திரியும் வீணனும் மதியான் என்று

எண்ணினார். பொருள் ஈட்ட முனைந்தார். ஆனால் பொருள் தேடிவரும்வரை பாரியின் மகளிருக்குப் பாதுகாவலாக யார் இருப்பர்?

நெடிது நினைந்தார். ஆன்ற ஒழுக்கமுடைய அந்தணர்களிடம் அடைக்கலமாக அவர்களை விட்டுச்செல்லலாம் என்ற முடிவுக்கு வந்தவராய் நல்லவரைத்தேடி வழி நடந்து வந்தார். இங்ஙனம் வரும் வழியில் ஒருநாள், ஒரு சிற்றூரின்கண் தங்கினர். அவர்கள் தங்கி இருந்தமனை முள்வேலியால் சூழப்பட்டிருந்தது. அம் மனைக்கருகில் சுரைக்கொடி படர்ந்திருந்தது. பீர்க்கும் முளைத்திருந்தது. ஈத்திலையையுடைய குப்பை மேடும் காணப்பட்டது. பாரியின் மழைக்கண் மகளிர் அக்குப்பையின்மீது நின்று உமணர்கள் செலுத்தும் வண்டியை எண்ணிய வண்ணமே தங்களின் இருந்துயரை மறந்து நின்ற காட்சியைக் கண்டார். அவருடைய துயரம் பன்மடங்கு பெருகியது. குழந்தை உள்ளம் படைத்த அவ்வின்னகை மகளிர் முன்னொரு நாள் பறம்பு மலையின்கண் நின்று பகைவரின் பரிமாவை எண்ணிய காட்சி, அவர் கண் முன்னர் வந்தது. அன்று அவர்கள் வாழ்ந்த வாழ்வென்ன? இன்று அவர்கள் இருக்கும் இருப்பென்ன? இதைக்கண்டு வருந்தி வாழும்படி என் வாழ்நாள் அமைந்து விட்டதே! அது அடியுடன் இன்னும் அழியவில்லையே என்று ஆறாத் துயரடைந்தார்.

இங்ஙனம் கபிலர் மாசில் மனமுடைய அம் மகளிர்க் காகப் படும் வேதனையைக் காணும் பொழுது தமிழகம் அக்காலத்தில் தறுகண் மன்னரும் தாளாண்மை மிக்க வள்ளல்களும் இல்லாது வறுமை அடைந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஏழ்மையைக் கண்டு இரங்காமல் இரவலரைக் கண்டு ஏளனம் செய்யும் இந்த தற்காலநிலை அக்காலையிலும் நிலவி இருந்ததோ என்று மனம் மலைவுறு



கிறது. பாரி இறந்தபின் வாழ்வில் வருத்தம் தவிர வேறொன்றையும் கண்டறியாத கபிலர் மறுநாள் அம் மகளிருடன் புறப்பட்டார். விரைந்து மகளிரின் குறையைத் தீர்ப்பேன் எனச் சிந்தையில் சூளுரைத்து, அம் மகளிரைச் சீரிய ஒழுக்கமும் அறநெறி பிறழா வாழ்வும் உடைய அந்தணரிடம் அடைக்கலமாக ஒப்புவித்துச் செல்வம் திரட்டிவரச் சேரனை நாடிச் சென்றார்.

# 13

# பழுமரம் தேடிச் செல்லல்

பாரி மாண்ட பின்னர் வேறு பிறரைப் பாடிப் பரவ வேண்டிய நிலை ஏற்படுமென கபிலர் கனவிலும் கருதி இருக்கமாட்டார். இனிய நண்பனாகவும் அரிய புரவலனாகவும் இருந்த பாரியின் சீரிய பண்பை அவர் மிக நன்கு அறிந்தவர். சொல்லும் செயலும் ஒருங்குபட அவனைப் பாராட்டினார். அப் பெருவள்ளலைப் புகழ்ந்து பாடிய பின்னர் பிறரை எவ்வகையாய் வாழ்த்திப் பாட இயலும்? எனினும் இப்போது வேறு வழி இல்லை. பாரி மகளிர்க்காகவே தாம் பிறரிடம் செல்லுகிறோம் என்ற எண்ணம் அவருக்குப் பெரும் ஆறுதலைக் கொடுத்திருக்கும்.

கபிலருக்கு அக்காலை ஏதும் பொருள் வேண்டியதில்லை. தன்னலத்துக்காக அவர் சேரனைப் பாடி இருந்தால் அவருடைய நட்பிற்கு ஓர் இழுக்கு ஏற்பட்டிருக்கும் அவருடைய சால்பும் புரைபட்டதெனச் சான்றோர் பழித்திருப்பர். அங்ஙனம் யாரும் பழிக்காது போற்றும் வண்ணம் நட்புக்கடன் ஆற்ற அவர் விழைந்து சென்றது அவருடைய நட்பின் பெருமையையும் நெஞ்சின் நலத்தையும் நேர்மைத் திறனையும் விளக்குவதாக அமைந்துளது.



சோழனையும் பாண்டியனையும் அணுகாமல் சேரனிடம் சென்று அவன் செவ்வியைப் புகழ்ந்து பாடியுள்ளார். இதனால் சோழனும் பாண்டியனும் அக்காலத்தில் சேரனைவிட வலி குறைந்தவர்களாக இருந்திருக்கலாம். தமிழ்நாட்டின் வரலாற்றில் இச்செய்தி புதுமையானதல்ல. சோழனாகிய கரிகாலன், பாண்டியனையும் சேரனையும் வென்று வீறு பெற்று உயர்ந்தான். பாண்டியன் நெடுஞ்செழியனின் ஏற்றமும் இவ்வண்ணமே. இங்ஙனமே தமிழ்நாட்டின் வரலாறு அமைந்து விட்டது. இதன் விளைவால் தமிழ்நாட்டில் சீரும் சிறப்பும் செல்வமும் குன்றியது. தமிழர்களின் பீடும் பெருக்கும் பெருவாழ்வும் அழிந்தது. இறுதியில் தமிழினம் மாற்றார்க்கு மாலையிட்டு வாழும் இனமாக மாறிவிட்டது. பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை எண்ணுங்கால் நம் சிந்தையில் இவ்வித எண்ணங்கள் தோன்றுவதில் எள்ளளவும் புதுமை இல்லை.

செல்வக்கடுங்கோ வாழியாதனை அடைந்த கபிலர், தம் தகுதிக்கும் புலமைக்கும் ஏற்ப அவனைப் பாடியுள்ளார். அவருடைய மிடுக்கு நிறைந்த வாழ்க்கை, அவர் அவனைப் பாடிய முதற்பாட்டால் நன்கு தெரிகிறது. பாரோர் அனைவரும் இந் நாள்வரை அறியாவண்ணம் கொடைத்திறன் ஆற்றிய பாரியை அங்கும் புகழ அவர் மறக்கவில்லை.

என்னுடைய வேந்தன் திரும்பிவாராத வானுலகம் அடைந்துவிட்டான். அதனால் என்னைக் காப்பாயாக என்று உன்னிடம் இரவலனாகயான் வரவில்லை. பரிசில்பெறும்கருத்து மட்டும் உடையவனாக உன் புகழை மிகைபடக் கூறவும் மாட்டேன். ஈத்தகாலையில் எள்ளளவும் அதற்காக இரங்காத நெஞ்சினையும், இன்னும் இரவலர்க்குக் கொடுக்க முடியவில்லையே என்ற எண்ணத்தால், வளரும் புகழைக் கண்டு மகிழாமலும், பிறர்க்கு அளிக்கும் பொழுதெலாம்

மாவள்ளியன் என மற்றையோர் வாயார, உளங்குளிர வாழ்த்தும் என் காவலனுகிய பாரியின் திறன் உன்னிடத்திலும் உள்ளது என்று உலகோர் கூறக்கேட்டு உளம் மகிழ்ந்தேன். அந் நல்ல புகழே என்னை நின்பால் ஈர்த்து வந்தது என அவனைக் களத்தில் கண்டதும் கூறுகிருர்.

அப் பெருவேந்தனின் வென்றிச் சிறப்பினையும் கொடைச் சிறப்பினையும் சொற்சுவை, பொருட்சுவை சொட்டப் பாடியுள்ளார். புனல்பொரு கிடங்கையும், வரைபோல் இஞ்சியையும் உடைய, அணங்குடைத் தடக்கையரெலாம் செல்வக் கடுங்கோவைக் கண்டவுடன் வணங்கிய கையினராய், வாழ்த்திய மொழியினையுடையவராய் இருப்பின் அவர் நாடு நல்வளம்நிறைந்து நனிமிக அழகுடன் விளங்குமென்பதை,

> புனல்பொரு கிடங்கின் வரைபோல் இஞ்சி
> அணங்குடைத் தடக்கையர் தோட்டி செப்பிப்
> பணிந்திறை தருபநின் பகைவ ராயிற்
> புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி
> வளனுடைச் செறுவின் விளைந்தவை உதிர்ந்த
> களனறு குப்பை காஞ்சிச் சேர்த்
> அரியல் ஆர்கை வணகை வினைஞர்
> அருவி ஆம்பல் மலைந்த சென்னியர்
> ஆடுசிறை வரிவண் டோப்பும்
> பாடல் சான்றவவர் அகன்தலை நாடே

என்று கூறி அவனை அடைந்தவரின் நாடு எங்ஙனம் இன்பமான நாடாக இருக்கும் என்பதைச் சித்திரத்தில் காண்பதுபோல் செஞ்சொற்களால் தீட்டியுள்ளார்.

கூத்தர்களைப் புறஞ்சிறை இடத்தே வரக் காணினும், கொய்சுவற் புரவிகளையும் அசைந்து செல்லும் தேர்களையும் அவ்வவற்றுக்குரிய அணியணிந்து விரைந்து கொடுமின் எனக்கூறும் அமையாத அருளுடைமையை



உடையவன் என்று இசையொலிக்கக் கூறுகிருர்.

> மலையுறழ் யானை வான்தோய் வெல்கொடி
> வரைமிசை அருவியின் வயின்வயின் நுடங்கக்
> கடல்போல் தானைக் கடுங்குரல் முரசம்
> காலுறு கடலிற் கடிய உரற

என்பனபோன்று தித்திக்கும் தீஞ்சுவைச் சொற்களால் அவனைப் பாடி மகிழ்வித்தார்.

செல்வக் கோவே, சேரலர் மருக, பூண்கிளர் மார்ப, சேயிழை கணவ, பாணர் புரவல! நனந்தலை உலகம் செய்த நன்று உண்டெனின், ஆம்பல் என்னும் எண்ணும் பல ஆயிரங்களாகப் பெருகிய வெள்ளமென்னும் எண்ணும் ஆகிய ஊழிகள், நீ நீடு வாழ்வாயாக என வாழ்த்தினுர்.

நுண்மாண் நுழைபுலன் உடைய புலவரின் அளப்பரிய ஆற்றலையும் கொள்ளை இன்பம் குலவும் அவர்தம் கவியையும் கண்டு, கேட்ட மன்னனின் உள்ளம் கரை காணுக் களிப்பில் ஆழ்ந்தது. இத்தகைய மாண்புடைப் புலவரால் பாடப்படும் புகழுடையார் அன்றே "விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி எய்துப" என்று செம்மாந்திருந்தான்.

இத்தகைய பாவலர்க்குப் பரிசிலாக எதைக் கொடுப்பது? விலை மதித்தற்கரிய மாணிக்கத்தை விலை மதிப்பிடுபவர் அறிவுடையர் ஆவரோ ? கொடுக்க வேண்டியது தன்னுடைய கடன் என எண்ணிய அச்செல்வக்கடுங்கோவாழியாதன், "சிறுபுறமென நூறுயிரங்காணங் கொடுத்து நன்ருவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெலாம்" காட்டிக் கொடுத்தானும் கபிலருக்கு. என்னே! இரவலர் உண்மையும் அவ்விரவலர்க்கு ஈவோர் உண்மையும்!

# 14

## மாண்புடை மணவினை

சேரனின் சிந்தை களிகூரப்பாடிப் பரிசில் பெற்ற கபிலர் அவனிடம் விடைபெற்று விரைந்து திரும்பினார். மலையிலிருந்து இழிதரும் அருவியைப் போன்று பாரி மகளிரை அடைந்தார். பொருள் இல்லாக் குறையால் அம் மகளிரின் வதுவை ஒருகால் தடைப்பட்டிருக்கலாம் என எண்ணிய கபிலர் அம் முட்டுப்பாடும் இல்லாவண்ணம் தம் புலமையால் தீர்த்துவைத்தார். இனியாவது திருமணம் இனிதே நடைபெறுமா? மகளிர்க்குரிய கடன் தீர்க்கத் தம்மைத் தனியே இருக்கச் செய்து, வானம் சென்ற வள்ளல் பாரியின் ஆவி, அமைதியடையுமா என்று அவர் நெடிது கலங்கி நெஞ்சம் வருந்தி இருக்கவேண்டும்.

அணுகிச் சென்ற இரு சிறு அரசர்களும், கபிலர் வருந்தி உளம் நையும் வண்ணம் நடந்து கொண்டனர். இனித் தாம் நாடத்தக்க நாடுதான் யாது? அணுகவேண்டிய அரசர் எவர்? சென்ற உடன் வரவேற்று உபசரித்துத் தம் நன்றிக் கடனைக் கழிக்க உதவி செய்பவர் யாவர்?

வலியும் அளியும் சிறந்த மலையமான் திருமுடிக் காரியின் நினைவு வந்தது. அவனது வள்ளன்மையைப் பற்றியும் வாள்வன்மையைப் பற்றியும் பல புலவர்கள் பாடி



யுள்ளதை எண்ணிப் பார்த்தார். முப்பெரு வேந்தரும் ஒருவரை ஒருவர் முந்திச் சென்று, போரில் அவன் உதவியை வேண்டுவர். பாரியை அநீதியால் அழித்த மூவேந்தரையும் கண்டு அவன் அஞ்சான். அம் மூவரும் அடர்த்துவரினும் ஆண்மையுடன் அன்னவரை அடக்கும் அடலேறு போன்றவன் அவன். இப்பெற்றித்தாய மதுகையும துப்பும் நிறைந்த அத் தடந்தோள் மன்னவன் பாணகடன் ஆற்றுவதிலும் பரந்த இசையை உடையவனாயிருந்தான்.

அவனுடைய தொலையாத நல்லிசையை அறிந்தார் கபிலர். அவனுக்கு மக்கள் இருவர் உண்டென்பதையும் அறிந்த அவர் அவனிடம் சென்று தம் குறையைச் சொல்வதே சாலவும் பயனுடைத்தாயிருக்கும் என்று எண்ணி மகளிர் இருவருடன் அவன் மாண்புடைத் திருக்கோவலூர் நோக்கிப் பயணமானார். விச்சிக்கோனையும் இருங்கோவேள் இடத்தும் சென்றபோது கபிலர் வறியராய்ச் சென்றார். திருமுடிக்காரியை நோக்கிச் செல்லும் பொழுதோ திருவெலாம் நிறையப் பெற்றவராய் வழிநடந்தார். செல்வக்கடுங்கோ வாழியாதன் செய்த சிறப்புகளாலும் அவன் அளித்த அரிய பரிசிலாலும் அவருடைய நெஞ்சச்சுமை சிறிது குறைந்திருக்கும். அறிவிலியான இருங்கோவால் புண்பட்ட உள்ளமும், சிறிது ஆறி இருக்கும். எனினும் அவருடைய பழைய நினைவுகள் அவரை எப்போதும் வட்டமிட்டுக்கொண்டே இருந்திருக்கும். திருமுடிக்காரியும் ஒருவேளை தன் சீரிய நோக்கத்தை நிறைவேற்றுவிடில் என்செய்வது என்ற நினைவு அவரைப் பெரிதும் பிணித்து வருத்தி இருக்கும்.

இப் பெற்றித்தாய எண்ணம் படரப் பெண்ணையாற்றங் கரையிலே அழகுற அமைந்துள்ள காரியின் ஊரை அடைந்தார். அவனைத் தேடிவரும் பரிசின்மாக்களையும், அவனிடம்

விடைபெற்றுச் செல்லும் இரவலர், புரவலர் போன்று இனிய தோற்றத்துடன் விளங்குவதும் அவருக்கு ஆறுதல் ஈந்தன.

களிப்பும் நம்பிக்கையும் மீதூரப் பெற்றவராய் திருமுடிக்காரியின் திருவோலக்கம் நோக்கிச் சென்றார். "கழல் புனை திருமுடிக்காரியே! நின் நாடு வேள்வித் தீயைப் பாதுகாக்கும் அந்தணருடையது. என்றும் அழியாத செல்வத்தினையும் வென்றி பொருந்திய படையினையுமுடைய முப்பெருவேந்தருள் ஒருவனுக்கு வலித்துணையாக வேண்டுமென அம் மூவரிடத்தினின்றும் வந்தோர் தனித்தனி நினக்குக் கொடுக்கும் பொருள் அளப்பரியது. அங்ஙனம் அன்னவர் தந்த அப்பொருளோ உனது குடியை வாழ்த்தி வரும் பரிசில ருடையதாயுள்ளது. உனக்கென உரிமையாக ஒன்றுமில்லை. 'வடமீன்புரையுங் கற்பின் மடமொழி தோள்தான்' உனதென நீ உரிமை பாராட்டுவதாகும். இங்ஙனமிருந்தும் நீ பெருமிதத்தோடு வாழ்கிறாய்? இதன் காரணம் என்னை" என்று அவன் சிறப்பை இனிது ஓதினார்.

பொருள் செறிந்த புலவரின் இனிய பாடலைக் கேட்டு மகிழ்ந்தான் பாரி. மற்றப் புலவர்க்கு ஈயும் முறைப்படியே அவர்க்கும் பொன்னும் மணியும் புனைதேரும் நல்கினான். அதைக் கண்ட கபிலர் பெரிதும் ஏமாற்றமடைந்தார். யாது காரணம் பற்றி நாம் இவண் வந்தோமென்பதை இவன் வினவ வில்லையே? நாம் வேண்டும் பரிசில் யாதென்பதையும் இவன் உசாவ வில்லையே? பாடி வரும் புலவர் அனைவரையும் அவரவர் புலமையும், தகுதியும், தன்மையும், அவர்தம் விருப்பமும் அறியாது அனைவரையும் பொது நோக்காக அவன் நடத்தும் விதத்தையும் கண்ட கபிலர் மனம் மிக உளைந்தார். தம்முடைய நல்லெண்ணம் ஈங்கும்



நிறைவேறப் பெறாது வறிதே பெயரும் கொடியநிலை ஏற்படுமோ எனப் பெரிதும் அஞ்சினார்.

இழையணி நெடுந்தேரையும் இன்னபிற பொருள்களையும் கருதித் தான் வரவில்லையென்றும், ஈதல் மிக எளிது என்றும், வரிசை யறிதல்தான் பெரிது என்றும் அவன் உணரும் வண்ணம்,

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே

(புறம் - 121)

என்னும் செய்யுளைப் பாடி அறிவுறுத்தினார்.

கொடுத்த பொருளைக் குறியாது நின்று, புலவர் உணர்த்திய உண்மையைக் கண்டான் காவலன். குறிப்பறியாது கொடுத்ததற்காக வருந்தி அவர் குறித்து வந்த பொருள்தான் யாதோவென வினவினான். ஏதும் பொருள் குறித்துத் தாம் வரவில்லையென்றும், நன்று என்னும் குன்றேறி நின்று சேரலர் பெருமான், தன் கண்ணிற் கண்ட நாடெலாம் காட்டித் தனக்குத் தந்துளதையும் அவன் அறியுமாறு எடுத்துச் சொன்னார். கபிலரின் சொற்கேட்டும் தெளிவு பெறாத வேந்தன், அவர் விழைவதுதான் யாதென மீண்டும் வினவினான்.

இச் செவ்வியை எதிர்பார்த்து ஏங்கி நின்ற கபிலர் பாரியின் மகளிர்க்கு மணம் நடத்துவான் பொருட்டே தாம் அவனிடம் வந்ததையும் அவன் மக்கள் இருவருக்கும், அறிவும் திருவும் ஆன்ற ஒழுக்கமும் அமைதியும்

நிறைந்த பாரியின் மகளிரை வதுவை முடிக்க வேண்டும் எனவும் அதுவே தாம் கருதிவந்த பரிசிலாகும் என்வும் எடுத்தியம்பினர்.

பெரு வீரனான அம் மாவண்தோன்றல் அதைக் கேட்டு மகிழ்ந்து உள்ளம் பொங்கினன். பாரியின் மகளிரை மணக்கத் தம்மக்கள் மாதவம் பல செய்திருக்க வேண்டுமெனக் கபிலரிடம் ஈரநன்மொழி பல இயம்பி மன்றலை இனிது நடத்த ஒருப்பட்டான்.

சித்தம் களித்த கபிலர் சிலநாட்கள் தங்கி, அவன் நாளோலக்கத்தைச் சிறப்பித்தார். மற்றை மன்னர்களைப் போல் நாட்காலையே மதுவுண்டு, மகிழ்ச்சி மிகக் கொண்டு, இரவலர்க்குத் தேர் வழங்குவதைப் போலாது; மதுநுகராது மகிழ்ச்சியின்றி அவன் தன்னை வந்தடைந்த இரவலர்க்கு உயர்ந்த தேர்களைப் பரிசிலாகக் கொடுத்தான். அவ்வாறு அவன் கொடுத்த தேர், அவனது முள்ளூர் மலை உச்சியின்கண் உண்டாகிய மழைத் துளியினும் பலவாக இருப்பதை அவனிடம் கூறி அவனைப் பலப்படப் பாராட்டினர்.

குறித்த ஒரு நாளில் மலையமான் திருமுடிக்காரியின் மக்களுக்கும் பாரிவேளின் மகளிர்க்கும் மணம் இனிது நடந்தேறியது. முடிவேந்தர் மூவர்க்கும் வேண்டும் நண்பனாகக் காரி இருந்தமையால் அவன் மக்களின் மன்றலின்போது அவர்களும் வந்திருந்து காரியைப் பெருமைப்படுத்தினர். மணமக்களை வாழ்த்தினர். தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே அரிதிற் காணப்படும் வகையில் பெருவேந்தரும் குறுநிலமன்னரும் இன்முகத்தோடு ஒருவரை ஒருவர் கண்டும் பேசியும் களிமகிழ்



வுற்றனர். இத் திருமணவிழாவை மக்கள் அனைவரும் மனமார வாழ்த்தினர். அனைவரின் முகத்திலும் நிலவிய களிப்பு வெள்ளத்தைக் கபிலரின் முகத்தில் தோன்றிய பொலிவுவோடு ஒப்பிடுகையில் அது ஒன்றற்கும் பற்றாது. அலையாடும் நெடுங்கடலே அவர் சிறுமனதில் புகுந்து களியாடும் கடலாக மாறிவிட்டதைப்போன்று மனமகிழ்ச்சி கொண்டார். அவர் நெடுநாளைய கனவு நனவாகி விட்டது. தம் உயிர் நண்பன் பாரியின் எண்ணம் ஈடேறி விட்டது. அம் மாவண் பாரியின் பெருமையையும் அருமையையும் அறிந்து நடந்த திருமுடிக்காரியை எப்படி வாழ்த்துவதென்றே அவருக்கு விளங்கவில்லை. அவன் செய்த செயலுக்குக் கைம்மாருக அவர் என்ன செய்யமுடியும்? நூறுயிரம் காணமும் நன்ரு வென்னும் குன்றேறி சேரன் கொடுத்த நாடெலாம் அவனுக்குக் கொடுத்து விட்டதால் தம் நன்றி உணர்வை முற்றிலும் காட்டி விட்டதாக ஆகுமா?

உள்ளம் இன்பக் கடலால் மொத்துண்டது. மலையனின் பீடுகெழு வாழ்வை எண்ணினர். தீயநாளிலே சென்றாலும் புள்நிமித்தம் இடையே நின்று தீங்கினைக் குறித்துத் தடுத்தாலும் செவ்வியல்லாத வேளையில் சென்று, பொருந்தாத வெறுக்கத்தக்க செய்திகளை அவன் முன்னிலையில் செப்பினாலும் அவர்கள் வறிதே மீளமாட்டார் என்று பொருள்படும்,

நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர், நெறிகொளப்
பாடான் திரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே

(புறம் - 124)

எனும் இனிய டலைப் பாடி அனைவரின் உள்ளத்தையும் தம் மனதைப் போலவே புனலாடும் இன்பக் கடலாக்கினார்.

இங்ஙனம் மிக உயர்ந்து கபிலர் வாழ்த்தியதை அக் காலப் புலவரும் அறிந்து குறித்தனர். மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவர், மலையமான் திருமுடிக் காரியைப் பாடுங்கால்,

பறையிசை அருவி முள்ளூர்ப் பொருந
தெறலரு மரபின்நின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசென் மாக்கட்கு இனி இடனின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்

*(புறம்-126)*

எனக் கபிலரின் இசைமேம்பட்ட செய்யுளால் காரி அடைந்த புகழைப் பாராட்டியுள்ளார். உள்ளத்தில் உவகை பொங்கப் பாடியதால் அவர் பாடல்கள் அங்ஙனம் சிறந்து புலவரும் போற்றும் வண்ணம் பொருள் சறிந்ததாய் அமைந்தன.

நப்பசலையார் பாடிய புறம்-174-ம் பாட்டால் காரியின் மகன் திருக்கண்ணன் என்பவனை நாம் அறிகிறோம். அரசுக்குரிய முத்தமகன் இவனாய் இருந்தமையானும் சோழநாட்டின் பருவரலைத் ர்த் த. வளவனின் வெண்கொற்றக் குடையை நிலைபெறுவித்த பெருவீரனாக விளங்கினமையானும் அவன் பெயர் வெளிப்பட்டது. மற்றவன் பெயர் அறியப்படவில்லை. அவ இளையோனாய் இருத்தல் வேண்டும். இக் காளையர் இரு



வருமே பாரி பயந்த பனிமலர் மகளிர் இருவரையும் மணந்து, பொய்யா நாவினை உடைய கபிலரின் பருவரலைத் தீர்த்தவர்கள் எனக் கொள்ளலாம்.

இக் கருத்தைக் கீழ்காணும் அடிகளால் நன்கு அறியலாம்.

முத்தமிழ் வான்மைத் தெய்வக் கவிதைச்
செஞ்சொற் கபிலன் மூரிவண் டடக்கைப் பாரி
தன டைக்கலப் பெண்ணை மலையற்கு உதவி

(S.I.Inscriptions, Vol. VII, No. 863)

# 15
# வடக்கிருந்த வீரன்

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் உணர்வு மிக்குக் காணப்பட்டது, அகத்திலும் புறத்திலும் அவர்களுக்கு வழிகாட்டியாக உணர்வுதான் விளங்கிவந்தது. இக் காரணம்பற்றியே அவர்கள் தங்களைப்பற்றி எண்ணாமல் பிறர் வாழ்வின் இன்பத்தையே எண்ணினர். பிறர் மகிழுவதைக் கண்டு தாங்களும் மகிழ்ந்தனர். அடுத்தவர் அல்லலுறும்பொழுது அவர்களும் ஆறாத்துயரத்தில் அழுந்தினர். நட்பு, காதல், வீரம் முதலிய உயர்ந்த குறிக்கோள் அனைத்தினும் உண்மை யுடையவராய் வாழ்ந்து வந்தனர்.

உயர்ந்த குறிக்கோள்களுக்கிடையே சமயமும் சாதியும் அக்காலத்தில் தடையாக நிற்கவில்லை. ஒரு குடும்பத்தில் பிறந்தவர் ஒவ்வொரு வகையாக உணவுச் சுவையை விரும்புவதுபோல் பண்டைத் தமிழ் மக்களுக்குச் சமயம் நின்று உதவியது. சேரன் செங்குட்டுவன் சிறந்த சைவன். அவன் தம்பியோ நிறைந்த சமணர். கூன்பாண்டியன், சமணன் அவனுடைய



மனைவியாகிய மங்கையர்க்கரசியோ பழுத்த சைவர். இச் சமய வேறுபாட்டால் அவர்களின் உறவில் எவ்விதக் குறையும் ஏற்படவில்லை.

இவ்வித சூழ்நிலை இலங்கிய காரணத்தால், மக்கள் எவ்வித மாறுபாடும் இல்லாது ஒருவருடன் ஒருவர் நெருங்கிய உறவுடன் வாழ்ந்தனர். சமயமும் சாதியும் அவர்களைப் பிரிக்கவில்லை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கொள்கையே அன்வரின் வாழ்விலும் கலந்திருந்தது எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியில் கற்றவனை மிக்க மதித்தனர்.

கோப்பெருஞ் சோழனின் நட்பால் பிணிக்கப்
ட்ட பிசிராந்தையாரும், பொத்தியாரும், அவனிறந்த
ன் உயிர் வாழாது வடக்கிருந்து தங்கள் இன்னுயிரை
ந்தனர். இங்ஙனமே வேள்பாரியின் சிறந்த பண்பால்
ர்க்கப்பட்டு, அவனுடைய இன்னுயிர்த் தோழராய்
லங்கிய, புலனழுக்கற்ற அந்தணராகிய கபிலர்
றைய எண்ணினார். பாரியோ அதைத் தடுத்து விட்
ன். அவன் தடுத்ததன் காரணம் யாதெனக்
பிலரும் உணர்ந்தார். மகளிரைத் தக்க மன்னரிடம்
சர்க்கும் வரைக்கும் உயிருடன் இருப்போம் என
ண்ணினார்.

அந்த எண்ணமும் இனிது நிறைவேறியது. இனி
வருக்கு இவ்வுலகில் என்ன வேலை? தம் நண்பனாகிய
ரியின் ஆருயிரைப் பின்பற்றிச் சென்று அவனுடன்
ரியாது உறையப் பெரிதும் விழைந்தார். பாரியின்
களிரையும் அவர்தம் கணவரையும் வாயார வாழ்த்தி
ர். தம் எண்ணத்தை அவர்களிடம் வெளியிட்டுப்

பிரிந்தார். திருமுடிக்காரியின் பயன் கருதாது செய்த உதவியைப் பலப்படப் பாராட்டி அவனிடமும் விடை கொண்டார். இச் செய்தி நாடெங்கும் பரவியது. அவருடைய அரிய பண்பினையும் விழுமிய நோக்கத்தையும் தெரிந்த மக்கள் பெண்ணையாற்றங் கரையிலே எள் விழவும் இடனின்றித் திரண்டனர். அவர் இன்னுருவம் கண்டு இரு கையும் குவித்து மக்கள் அவரை இறுதியாக வணங்கினர்.

வடக்கிருந்த கபிலரோ தம் வள்ளல் பாரியை எண்ணினர். இருவரையும் பிரித்து வேருக்கிய வெய்ய வினைப்பயனை உள்ளி உருகினர். கண்ணீர் வெள்ளம் கரைபுரள, அவனை எண்ணிப் பாடினர். கொடிய அவ் விதியை இரந்து வேண்டினர்.

மலைகெழு நாட, மாவண் பாரி
கலந்த கேண்மைக்கு ஒவ்வாய் நீ எ
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே
பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒவ்வாது
ஒருங்குவரல் விடாஅது ஒழிகெனக் கூறி
இனையை யாதலின் நினக்கு மற்றியான்
மேயினென் அன்மை யானே யாயினும்
இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே

(புறம்-236)

எனக் கல்லும் புல்லும் கரைந்து, கண்ணீர் விட்டுக் கதறும் வண்ணம் கசிந்துருகிப் பாடினர். நம்முடைய நட்பிற்குப் பொருந்தா வகையில், நான் உன்னுடன் வருதலைத் தடை செய்துவிட்டாய். உனக்கு நான்



பொருந்திய தோழன் அல்லேன் எனினும் இப் பிறப்பில் நாம் இருவரும் கூடிவாழ்ந்தது போல மறுபிறப்பிலும் இடைவிடாத காட்சியினை உடைய உன்னோடு வாழ அங்காந்து நிற்கின்றேன். இதை உயர்ந்த விதி கூட்டுவதாக என்று சொல்லி, அனைவரின் கண்ணையும் அருவியாக்கிவிட்டு அப் பெரும் புலவர் ஆவி நீத்தார்.

அறிவுவானில் மாசற்று விளங்கிய அவ் வான்சுடர் மறைந்துவிட்டது. அரசனும் மற்றவரும் அப் பெரியோனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சிறிதும் குறைபாடின்றிச் செய்து முடித்தனர். அவர் உயிர் நீத்த இடத்திலே கல்நட்டு வாழ்த்தி வணங்கினர்.

இவ் வரலாற்றைக் கீழ்வரும் அடிகளால் நன்கு அறியலாம் :—

''தென்றிருக் கோவலூ ரிசரந் தன்றக் கவன்று
மிசரங் குடக்குக் கலுழி குணக்கு கால்பழுங்கக்
காளாகருவுங் கமழ் சந்தனமுந் தாளார் திரள்ச்
சாளமு நிளார் குறிஞ்சியுங் கொகுடியு முகடுயர்
குன்றிற் பறிந்துடன் விழப்பாய்ந்து செறிந்
துயர் புதுமதகிடறிப் பொர்க்கலிங் கிடந்து
மொது மொது முதுதிரை விலகி கதுமென
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது திர்த்தத் துறையது
மொய்வைத்தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
முரிவண் டடக்கைப் பாரிதன டைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை

*யலைபுன லழுவத் தந்தரிக்ஷஞ்செல மினல்*
*புகும் விசும்பின் விடுபெறண்ணிக் கனல்புகுங்*
*கபிலக் கல்லது புனல்வளர் பெரட்டான*
*விரட்டான மனைத்தினு மருதி யாயது*
*நினைப்பினு முணர்தற்கரியது யொகிக ளுள்*
*ளது புணர்தற் கினியது பொய்கைக் கரையது*
*சந்தன வனத்தது சண்பகக் கானது நந்தன*
*வனத்திலைடுலது பந்தற் சுரும்படை வெண்*
*பூங்கரும் பிடை துணித்தரத் தாட்டொலி யாலை*
*யயலது பாட்டொலிக் கருங்கைக் கடையர்*
*பெருங்கைக் கடைவாள் பசுந்தாட்டியுஞ்*
*செந்நெற் பழனத் தசும்பார் கணி''—*

(S.I. Inscriptions vol VII No. 863)

சிறந்த அறத்துக்கு எல்லையாய், பிறங்கிய வள்ளண்மைக்கு உவமையாய், மறத்துக்கும் மாண்புடைத் துணைவனாய் விளங்கிய மாவண்பாரி இறந்தான். அவனுடைய பிரிவை ஆற்றாது, நட்பிற்குத் தூண்டாமணி விளக்காய், புலமைக்குக் காயும் செங்கதிராய் விளங்கிய கபிலரும் அவன் நல்லுயிரைத் தேடிச் செல்வோர்போல் இந்நானிலத்தை நீத்தார். வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலனைத் தன் ஆரா அன்பாலும் அரிய பண்பாலும் ஆண்ட பாரிவள்ளலைப் போற்றுவதா? அல்லது சிறுவீ முல்லைக்கும் பெரிதிரங்கி அளிக்கும் அவ் வள்ளியோனுக்கு ஆற்றவேண்டிய நட்புக் கடனை முடித்த பின்பும், நண்பனைப் பிரிந்துறைய இயலாது வடக்கிருந்து உயிர்துறந்த, கபிலரைப் போற்றுவதா? தமிழர்கள் இவ்விரு ஆன்றோர்களையும் மறக்காது இருந்தனரா?

# 16

# கற்பனை வளர்ந்த கதை

பல்லாற்றானும் சிறப்புற்றுத் திகழும் தமிழ் இலக்கியம் அதன் வரலாற்றைப் பொறுத்தமட்டில் குறைபாடு உடையதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கிய வரலாறு இன்று வரை ஒழுங்கான முறையில் எழுதப்படவில்லை. ஒரு நாட்டின் இலக்கியம் செவ்விய முறையில் எழுதப்பட்டிருப்பின் அதுவே அந் நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கும் மக்களின் நாகரிகம், பண்பு, பழக்க வழக்கங்கள் வாணிகம், அரசியல் முதலியனவற்றைத் தெரிந்து கொள்ளுவதற்கும் ஓரளவு பயன்படும். இவ் வகையில் வரலாற்று ஆசிரியர்களுக்கும் இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் துணையாய் நின்று உதவுவது, சங்கத்தொகை நூல்களாகிய எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமே யாகும். இத் தொகை நூல்களைப் பாடிய புலவர் பெருமக்கள் மிக உயர்ந்தவர்கள். காசும் பொன்னும் ஒளிவீசும் பிற பொருள்களும் அவர்களைக் கவரவில்லை. அரசனின் செல்வாக்கும் அவர்களை அச்சுறுத்தவில்லை. பொருள் நகையும் இல்லை. அதிகாரத்துக்கு அஞ்சி நடுங்காத ஆண்மை அக்காலப் புலவர் பெருமக்களின் பெருங் குணங்களாக விளங்கி வந்தது. இத்தகு காரணத்தால் அவர்களின் புகழுரைகள் உண்மையை அறிவிப்பனவாய் வரலாற்றுக்கும் பெரிதும் பயன்படுவனவாய் உள்ளன.

இப்புலவர்களை அரசர்கள் பெரிதும் மதித்துப் போற்றி வந்தனர். புலவர்களால் புகழப்படா திருத்தலை வேந்தர்கள் பெரிதும் இழிவாகக் கருதினர். புலவர்களைத் தங்க

ளின் கெழுதகைய நண்பர்களாகவும் சூழ்ச்சிவல்ல அமைச்சர்களாகவும் அருந்திறல் மிக்க தூதுவர்களாகவும் கொண்டு அரசியலை நடத்தி வந்தனர்.

இங்ஙனம் வேந்தரும் போற்றும் வண்ணம் விழுமிய வாழ்வு நடாத்திவந்த புலவர் பெருமக்களின் பிற்கால பரம்பரையினர், தங்களுக்கென உயர்ந்த கொள்கை ஏதுமிலராய்ப் பொருள் ஒன்றனையே பெருங் குறியாகக் கொண்டு தங்கள் புலமைக்கும் அவர் தம் முன்னோருக்கும் சிறிது குறைபாட்டைத் தேடிக்கொண்டனர் என்று சொன்னால் அது தவறு என்று ஆராய்ச்சியாளர்கள் துணிந்து கூறுவதற்கில்லை. நில்லாத பொருளை நிலையென்று நம்பிவிட்ட பிற்காலப் புலவர்கள் பாடிய பாடல்கள், இதனால் பொருட்சிறப்பும் கவிதைச் சிறப்புமின்றி ஓசைச்சிறப்பு மட்டும் உடைய பாடல்களாய் விட்டன. வரலாற்றை மறந்து வீண் துதி செய்தனர் "கொடுக்கிலாதானைப் பாரி பாரி" என்று பலமுறை ஏத்தினர். வீரம் இல்லாதவனை விறல் வேந்தே! என்று வாழ்த்தினர். இக்காரணத்தினால் ஆராய்ச்சிக்கு உரியவைகளாக இவர்களின் நூல்கள் இலங்கவில்லை. மனிதவாழ்வில் நாம் காணாத புதுமைகளும் நடக்காத செயல்களும் இவர்களின் பாடல்களில் நிறைந்திருந்தன. தெய்வங்கள்கூட இவர்கள் அழைத்தபோதெல்லாம் வந்து வந்து போயின.

இறைவனைப் பற்றிய உயர்ந்த எண்ணங்களை மக்களின் மனதில் நிலைபெறச் செய்ய முடியாமலிருக்கும் இக்கால வருந்தத்தக்க நிலையே இவர்களுடைய பாடல்களின் ஏழ்மைத் தன்மையை இனிது விளக்கும்.



சங்கக்காலப் புலவர்கள் "ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களாய்" இருந்தமையால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் அவர்கள் வாழ்ந்து வந்த கால அளவும் அவர்களின் அரிய செயல்களும் பிற்காலத்தோர்க்குத் தெரிய வகையிலாது போய்விட்டன. சங்க காலத்தில் வாழ்ந்து வந்த புலவர்களின் பெயரால் பிற்காலத்திலும் பலபுலவர்களும் பாடி உள்ளனர். இவ்விருவகைப் பாடல்களையும் வேறு வேறாகப் பிரித்து வைக்காததால் இருவேறுபட்ட காலங்களில் இயற்றிய பாடல்களையும் சிலர் ஒன்றாகக் கருதிவந்தனர். இந்நிலையால் சங்கப் புலவர்கள் பாடிய விழுமிய பாடல்களுடன் பிற்காலப் புலவர்கள் பாடிய வெள்ளைச் செய்யுள்களும் சேர்ந்து உண்மையை உணர்த்த முடியாவண்ணம் நம்பத்தகாதவைகளாய் விட்டன. கட்டுக்கதைகளையும் மீறி இவை, மக்களின் கருத்தைக் கவராது போயின. இவ்வுண்மைகளை அறியாது தமிழைப் படிப்பவர்கள் தமிழை மிகத் தாழ்வாகவும் நினைத்துப் பேசினர்.

சங்க காலத்தில் வாழ்ந்து வந்த நெடுமாப்பாரியை அவன் காலத்திலேயே வாழ்ந்து வந்த புலவர்களாகிய கபிலர், ஔவையார், நக்கீரர், மிளைக்கந்தன், நன்னாகனார் முதலியோர் பாடி உள்ளனர். இவர்களின் பாடல்களில் நாம் அறிய முடியாத சில கதைகளைப் பிற்காலப் புலவர்கள் பாடி உள்ளனர். இவர்களுள் தலையாயவர் ஔவையார் என்பவராவர்.

ஆழ்ந்த ஆராய்ச்சி ஏதுமின்றி மேலே மிதந்து சென்றாலும்கூடப் பாரியின் காலத்து வதிந்து விளங்கிய ஔவையாரும் பிற்காலத்தில் பாரியின் வரலாற்றைக் கதையாக்கிப் பாடிய ஔவையாரும் வேறு வேறானவ என்பது தெரியும். இவ்விருவரும் பாடியுள்ள பாடல்

களின் நெறியும் போக்குமே இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றாகும். சங்க காலத்து ஔவையார் பாரி யைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது அகம். 303—வது பாட லால் தெரிகிறது.

புலங்கந் தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிறைபறைக் குரீ இயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் தரீஇயரோ ராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு

என்பது அவர்பெற வைத்த குறிப்பாகும்-

பறம்பு மலையிலே உள்ள குருவிகள் வெளியே பறந்து சென்று நெற்கதிர்களை அலகில் கௌவி வருமாறு அவை களைக் கபிலர் பழக்கி வைத்திருந்தார் என்ற குறிப்பை "நிறைபறைக் குரீஇயினங் காலைப் போகி முடங்குபுறச் செந்நெற் தரீஇய ரோராங்கு, இரைதேர் கொட்பினவாகிப் பொழுதுபடப், படர்கொள் மாலைப் படர்தந்தாங்கு" என்ற அடிகள் விளக்குகின்றன என்ற கதையும் எங்ஙனமோ உரையில் நிலவிற்று.

சங்கப் புலவராகிய ஔவையாரின் பாடலிலேயே இக் கதையைக் கண்டனர். இதனால் கதையிலேயே விருப்ப முடைய பிற்காலப் புலவர்களின் பாடல்கள் வெறும் கதையாகவே அமைந்து விட்டதில் நாம் வியப்படைவ தற்கு ஒன்றுமில்லை.



பாரியைப்பற்றியும் பாரி மகளிரைப்பற்றியும் இப்பிற் கால ஔவையார், பல பாடல்கள் இயற்றியுள்ளார். இவ ருடைய பாடல்களிலிருந்து பாரியின் மகளிர்க்குத் திரு மணம் முடித்துவைத்தவர் இவரே என்பது விளங்குகிறது. வேறு சில கதைகளும் காணக் கிடைக்கின்றன. அவை களையும் நாம் ஒரு சிறிது பார்ப்போம்.

# 17

# பாரி பறித்த பறி

தமிழ் நாவலர் சரிதையிலே ஔவையார், பாரியின் வரலாற்றைக் குறித்துப் பாடியன வெண்பாக்களாக உள்ளன. பாரியின் வரம்பற்ற கொடைத்திறனையும் ஔவையார் என்னும் அருமைப் புலவரின்மாட்டு அவன் கொண்டிருந்த அன்பின் திறனையும் விளக்கும் வகையில் ஒரு கதை உள்ளது.

எல்லையற்ற வள்ளன்மையுடன் விளங்கிய பாரியின் இசையைச் செவிமடுத்த ஔவையார் ஒருநாள் அவனைக் காண வருகின்றார். வந்தப் புலவரைப் பாரி தனக்குரிய இயல்புடன் வரவேற்று உபசரித்து அளவளாவுகின்றான். ஒருவர் பெருமையை மற்றவர் உணருகின்றனர். இருவரும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றனர். இறுதியில் தன் இயல்பிற் கேற்ப வேறிடம் செல்ல விழைகின்றார். அதுகண்ட பாரி அவரைப் பிரிய மனமில்லாது பல சொல்லித் தன்னோடிருக்க வற்புறுத்துகின்றான். ஔவையார் அதற்கிணங்காது அவனுக்கு ஆறுதல் சொல்லிப் புறப்படுகின்றார். பாரியும் பரிசில் பல கொடுத்து விடையளித்தான்.

ஔவையார் பாரியின் நாட்டெல்லையைக் கடப்பதற்கு முன்னரே அவர் எதிரில் ஆறலை கள்வர்கள் தோன்று கின்றனர். அவரிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு தங்கள் வழியே சென்றுமறைந்து விடுகின்றனர்.



இந்நிகழ்ச்சியால் ஔவையார் பெரிதும் அதிர்ச்சி அடைந்தார். அறவோனாகிய பாரியின் ஆட்சியிலும் ஆறலை கள்வரின் அச்சமுள்ளதே என அலமந்தார். திரும்பிப் பாரியை அடைந்து நடந்ததை அவனிடம் உரைத்தார். அதுகேட்ட அவன் முறுவலித்துக் கொண்டே, கள்வனைத் தேடித் தக்கவாறு தண்டனை செய்வோம் என்றான். ஔவையாரும் அதனால் அங்கு சில நாட்கள் மேலும் தங்க நேரிட்டது.

இறுதியில் ஔவையாருக்கு உண்மை புலனாகியது. அவரை மேலும் சில நாட்கள் தங்க வைக்கவே பாரி அவ்வித விரகைக் கையாண்டனன் என்பதை அறிந் தார். அவனுடைய அன்பின் பெருக்கை எண்ணி எண்ணி இறும்பூதடைந்தார். அவன் மனம் உவக்கப் பின்னும் சில நாட்கள் அவன் மனையில் தங்கிப் பின்னர் விடைபெற்றுப் போந்தார்.

"பாரி பறித்த பறியும்" என்னும் அடியால் இக் கதையை ஔவையாரே நமக்கு அறிவிக்கின்றார். கதை மிக்க சுவையுடைத்தாய் உள்ளது. அவனுடைய கொடைப் பெருமையை விளக்கவே ஔவையார் இவ்விதக் கற் பனையை ஆண்டுள்ளார் எனக் கொள்ளலாம். இல்லெனில் இதற்குச் சான்றாக, சங்ககால ஔவையாரிடமிருந்து நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. வெள்ளிவீதியைப் பற்றியும் கபிலரைப் பற்றியும் பரணரைப் பற்றியும் பாரியைப் பற்றியும் அதியமானைப் பற்றியும் வரலாற்றுக் குறிப்பு களுடன் பாடிய அவர், இவ்வரிய நிகழ்ச்சியை மட்டும் விடுத்துப்போனதற்கு என்ன காரணமோ?

சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே

(புறம் - 235)

எனப் பாடிய ஔவையாரின் வாழ்வில் இக் கதையில் காணும் நிகழ்ச்சி நடந்திருந்தால் அதைப் பாடாது விட்டிருப்பாரா? இந் நிகழ்ச்சியை ஆழ்ந்து நோக்குங்கால் இது ஆன்றோர்கள் கடைப்பிடிக்கும் செயலாகத் தோன்றவில்லை. சான்றோர்கள் இங்ஙனம் பிறர் குறிப் பறிந்து நடவாமல் இரார். முல்லையின் நிலையினைக்கண்டு அதன் துயர்தீர்த்த வள்ளல், ஔவையாரின் உள்ளத்தை விளையாட்டுக்கேனும் ஒரு சிறிது காலம் புண்படுத்துவான் என நினைப்பது அவன் பெருந்தகைமைக்கும் ஏலாத ஒன்றாகும்.

சங்க காலத்து ஔவையார், கபிலரையும் பரணரையும் மற்ற புலவரின் பெருமையையும் நன்கு உணர்ந்தவர்.

பூத்தலை யறா அப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி

என்று கபிலர், பாரியின் வாழ்வில் நடந்ததை வெளிப் படுத்திய திறனைவிட வேறு ஒன்றும் அவன் அருளுடை மையை விளக்கப் போதாது என்பதை அவர் அறிவார்.

அவர், அதியமான் கோவலூர் எறிந்தானைப் பாடுங் காலையில்,

இமிழ்குரன் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்று நீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே

(புறம் - 99)



எனப் பரணன் பாடின திறனை "இன்றும் பரணன் பாடினன்" என வியந்து போற்றுகின்றார். இவ்வடிகளால் ஔவையாரின் நல்லியல்பை நன்கு உணரலாம். இங்ஙனம் பெருமைபெற்ற அவர், கபிலர் மிகச்சிறந்த முறையில் அவனை உயர்த்திப் பாடியதை விடுத்து அதனினும் குறைந்த அருட்செயல் ஒன்றால் அவனைப் புகழார் எனலாம்.

மேலும், சங்க காலத்தில் வெண்பாவினைப் புலவர்கள் பெரும்பாலும் கையாண்டதற்குச் சான்று சங்க இலக் கியத்தில் காணப்படவில்லை. சங்க காலத்து ஔவையார் பாடியுள்ள இனிய நடையும் ஆழ்ந்த கருத்தும் பெருமித நோக்கும் சிறந்த உணர்வும் இந்த ஔவையாரின் வெள்ளைப் பாடல்களில் இல்லையென்பதையும் நன்கு அறியலாம்.

## 18

# நீலச் சிற்றாடை

பாரி மாய்ந்த பின்னர் அவன் மகளிர் இருவரும் மிடியென்னும் இடியால் தாக்குண்டு நலிவடைகின்றனர். பாரி "வஞ்சனையால் கொல்லப்பட்ட" செய்தி அறிந்து ஔவையார் விரைந்து புறப்படுகின்றார். வழியில் பெரு மழை பிடித்துக் கொண்டு ஆடை நனைந்து, ஆகமெல்லாம் நடுங்க, பாரியின் மகளிர் தங்கி உள்ள சிறிய இல்லத்தை அடைகின்றார்.

ஔவையாரின் வரவறிந்து அகமகிழ்ந்த மகளிர் அவர் நிலையினைக் குறித்து மிக வருந்துகின்றனர். நீர் சொட்டும் அவர் உடையினை மாற்றி வேறு ஒரு புத்தாடை கொடுக்க அவர்களிடம் ஒன்றுமில்லை. அதனால் "நீலச்சிற்றாடை" உடுத்தியிருந்த மகள் ஒரு கிழிந்த துணியைத் தான் உடுத்திக் கொண்டு அந் நீலச் சிற்றாடையை ஔவையாருக்குக் கொடுத்து அவர் குளிரைப் போக்கினாளாம். இக் காட்சியைக் கண்ட ஔவையாருக்குப் பல நினைவுகள் வருகின்றன. தம்மிடம் உரிமை பாராட்டி அன்புடன் ஒழுகியவர்களின் செயல்களையெல்லாம் வரிசையாக எண்ணிப் பார்க்கிறார். அவர்கள் அனைவரின் அன்புச் செயலுடன் பாரிமகள் நீலச்சிற்றாடை அளித்ததையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் ஈதகளைக் கொட்டும் சேரமான்
வாராயோ என்றழைத்த வார்த்தையும் இம்மூன்று
நீலச்சிற் றாடைக்கு நேர்

என்று பாடுகிறார். பாரி, காரியன், சேரன் முதலியோரின்



அன்புச் செயலை ஒத்ததே இச் செயலும் என்று கூறுகிறார்.

சோலை மழையில் வழி கடந்து வந்த ஔவையாரின் பசிப்பிணியைப் போக்குவதற்கும் அவர்கள் சிறந்த உணவு எதையும் படைக்கவில்லை. வறுமையால் ஒரே ஆடையுடன் இருக்கும் அம் மகளிர் எவ்வாறு நல்லமுதைப் படைத்து அவரை உண்பிப்பர்? வீட்டுக் கொல்லையிலே முளைத்திருந்த கீரையைப் பறித்துச் சமைத்து அன்னாருக்கு இடுகின்றனர். பெரும்புகழ் படைத்த ஔவையாருக்குப் புல்லிய இலைக்கறியை இட வேண்டியுளதே என்று வருந்திய அவர்கள் நெஞ்சப் புண், வாய் வழியாகவும் வெளிப்பட்டது. அவர்களின் அருந்துயரைக் கண்ட ஔவையார் ஆறுதல் கூறும் வாயிலாக,

வெய்தாய் நறவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறிந்த கையார்

எனப்பாடி அவர்களை வாழ்த்துகின்றார். கைகளில் கடகம் செறிந்து வறுமை வாழ்வு நீங்கிக் காணப்படுவீர் என்றும் வாழ்த்துகின்றார்.

இவ்விரண்டு கதைகளால் பாரிமகளிர் வறுமையால் நலிவுற்று வாடி வருந்தியதை நாம் அறிகிறோம். பாரி பறம்பு மலையின் கோமான். காரியன் பெரிய நிலக்கிழவன். சேரமான் முடிமன்னன். இம் மூவரும் ஔவையாரிடம் தங்கள் அன்பை வெவ்வேறு வகையில் வெளியிடுகின்றனர். பாரி தான் கொடுத்த பொருளையே பறிக்கிறான், காரியனோ களக்கொட்டைக் கொடுத்துவிட்டு நீண்ட பொழுது இறங்கும் பின் மாலைநேரத்தில் வந்து அவரிடமிருந்து களக்கொட்டை வாங்கிக் கொண்டு தன்

னுடனேயே அவர் தங்கிவிடுமாறு செய்கிறன். சேரமானே, தான் நடத்திய பெரு விருந்தில் அனைவரும் உட்கார்ந்திருக்கும் பொழுது விருந்தினர் ஒருவர் வருகின்றார் அவரை அழைத்து அமர்த்துவதற்கு ஓர் இலையும் வறிதே காணப்படவில்லையாம். அப்போது அவன் ஔவையாரைக் காண்கிறன். தன்னிலையை நன்கு அறிந்து அவர் போற்றுவார் என்னும் நம்பிக்கையாலும், தன் அன்பிற்குரியர் என்ற எண்ணத்தாலும், ஔவையாரை அவன் "வாராய்" என அழைத்து அந்த இடத்தில் வந்த விருந்தினரை இருத்துகின்றன்.

இம் மூன்று செயல்களுடன், வறுமையால் தான் உடுத்தியிருந்த ஒரு துணியையே கொடுத்த பாரி மகளிர் செய்கை பல மடங்கு மேல் அல்லவா? பாரி மாய்ந்த பின்னர், கபிலர் அம் மகளிர் இருவரையும் விச்சிக்கோன், இருங்கோவேள் முதலிய குறுநில மன்னர்களிடம் அழைத்துச் செல்லுகின்றார். அங்ஙனம் அரசவைக்குச் செல்லும் மகளிர் வறுமைக்கோலத்தோடு சென்றனர் என எண்ணுவது பொருத்தமாக இல்லை. கபிலரும் அவர்களை அக் கோலத்தில் வைத்திருக்க மாட்டார். அவருடைய மகளிராக அன்றோ அவர்களை அவர் கருதினார். பின்னரோ பார்ப்பாரிடம் அடைக்கலமாக அவர்களை வைத்துவிட்டுச் செல்லுகின்றார். அந்நிலையில் ஔவையாரை உபசரிக்கும் கடன், பாரி மகளிர்க்கு இல்லை. அப்படியே இருப்பினும் அடைக்கலமாகப் பெற்ற பார்ப்பனர்கள் அவர்களை வறுமைக் கோலத்தில் வாழ விட்டிருக்க மாட்டார்கள். அதற்கப்பால் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் கபிலர் பெற்ற திரண்ட நிதியம் அம் மகளிரின் உரிமையாக உள்ளது.

பாரியின் பெரும் பிரிவுக்குப் பின்னர், அம்மகளிர் பெரும் துன்பமுற்றனர். பகைவரின் கலிமாவை மலை மீது



நின்று எண்ணிய அவர்களின் சீரான செல்வ வாழ்க்கை குப்பைமேட்டின்மேல் நின்று உப்பு வண்டியை எண்ணி விளையாடும் அழிந்த நிலைக்கு வந்து விட்டது. இவ்விதம் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நோதக்க மாற்றத்தைப் புலப்படுத்துவதற்காகவே இவ் விரண்டு வறுமைக் கதைகளும் அமைந்துள்ளன போதல் வேண்டும். பாரி மகளிரின் துன்பத்தை நன்கு எடுத்துக் காட்டுவதற்கேற்ற கால ஔவையார், அம் மகளிர் உடையும் உணவுமின்றித் துன்பப்பட்டனர் என்னும் இப் புனைகதைகளைப் பாடிப் போந்தார் என்றே துணிந்து கூறலாம்.

# 19

# கரிமுகன் கடிதம்

சங்க காலத்தில் வாழ்ந்துவந்த ஔவையார், அதியமான் நெடுமானஞ்சியின் இனிய நண்பர். அவனால் அரிய நெல்லிக்கனியை அடையப் பெற்று அதனால் ஆண்டு பல வாழ்ந்திருந்தவர். அதியமானின் போர் நசையையும் பகைவர்களை அவன் வெல்லுந் திறனையும் புலவர்களை அவன் புரக்கும் பான்மையினையும் பல இனிய பாடல்களால் சுவை சொட்டப் பாடியுள்ளார்.

சேரர் பரம்பரையினனாகிய அதியன், பல போர்களை வென்று வாகை சூடியுள்ளான். அவற்றுள் எழுவரோடு முரணிப் போர்செய்து அவன் எய்திய வெற்றியையும் திருக்கோவலூரைத் தகர்க்குங்கால அவன் கொண்ட ஆருச் சினத்தையும் ஔவையார் மிகப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இவ்வாறு கோவலூரில் நெடுமானஞ்சி பெற்ற வெற்றியைச் சிறக்கப் பாடிய ஔவையார் அதே திருக்கோவலூர் சென்று மலையனையும் பாடினார் என்பது பொருத்தமாக இல்லை. பாரியின் மகளிரை ஔவையார் வேண்ட மலையமான் அவர்களைத் தன் மக்களுக்கு மணம் முடித்து வைத்தான் என்பதும் ஒவ்வாத செயலாக உள்ளது. அதியமான் கோவலூரை எறிந்ததற்காக அவனைப் பாராட்டிய அதே ஔவையாரே பாரிமகளிரை அழைத்துக் கொண்டு திருக்கோவலூரை அடைந்து, மலையனை வேண்டி இருந்தால் விச்சிக்கோவும், இருங்கோவேளும் அவர்களை மணக்க மறுத்ததைப் போல அவனும் தயங்காது மறுத்திருப்பான் என்பதில் ஐயம் சிறிதளவும் இல்லை.



சித்தர்கள் தோன்றி நம் நாட்டில் பல அற்புதங்களைச் செய்து காட்டியது போலவே பிற்கால ஔவையாரும் பாரி மகளிரின் மணவிழாவின்போது பல அரிய செயல்களைச் செய்து காட்டியுள்ளார்.

பாரியின் மகளிர்க்கும் மலையமான் மக்களுக்கும் திருமணம் நடத்துவது உறுதியாக்கப்பட்டது. மன்றலுக்கு இன்னும் பதினெட்டு நாட்கள் இருக்கின்றன. கோவலூர் வந்து சேர்ந்த ஔவையார், மலையன் நடத்தும் விழாவுக்கு முடிமன்னர் மூவரையும் அழைக்கிறார். அவ்வாறு அவர்களுக்கு அனுப்பும் அழைப்பை அவரே எழுதவில்லை. மலையமானையும் எழுதச் சொல்லவில்லை. அரசவையில் உள்ள ஓலை எழுதுவோரை எழுதும்படியும் ஏவவில்லை. முடி வேந்தர் மூவருக்கும், தாம் சொல்லும் வண்ணம் ஓலை எழுதுமாறு கரிமுகனையே அழைக்கின்றார். அங்ஙனம் நீ வாராவிடிலோ உன்னை சபித்துத் தீர்ப்பேன் என்றும் அப் பெருமானிடம் கூறுகிறார்.

... ... ... கரிமுகவன்
சென்னுவ வோலை கடிதெழுத வாராயேல்
தன் ஆண்மை தீர்ப்பேன் சபித்து.

என்ற அடிகள் இதனை விளக்கும். விநாயகரும் ஔவையார் முன்னே யானைமுகத்தோடு கையில் எழுத்தாணி பற்றி ஔவையாரின் கட்டளைக்குக் காத்திருக்கின்றார்.

சேர, சோழ, பாண்டியர் மூவரும் பாரியின்பாற் பொறாமை கொண்டு அவனைப் பொருது கொல்லமாட்டாது, வஞ்சனையாற் கொன்றனர் என்னும் பெருவழக்கிற்கிணங்கவே இடைக்காலத்து ஔவையாரின் பாடலும் அமைந்துள்ளது. சேரலர் கோனே! பாரி மகளிரின் வதுவை திருக்கோவலூரில் நடப்பதால் அங்கு நீ வரல்

வேண்டும். வருவதற்கு நாணாதே என்று சேரனுக்கு ஒரு கடிதம் வரையச் சொல்லுகிறார்.

பொன்னித் திருநாடனே! பாரியின் மகளிர் திருமணம் பொருட்டுத் திருக்கோவலூர் போவதா என்று அங்கிருந்த வண்ணமே நீ நகையாதே. இன்று பதினெட்டாம் நாள் விடியலிலே இங்கு கடுகிவந்து சேர்வாயாக என்று மற்றொரு இலிகிதம் சோழனுக்குத் தீட்டுகின்றார்.

மதுராபுரித் தென்னவனே! பாரி மகளிரின் திருமணத்திற்குச் செல்வது செய்யத்தகாத செயல் என்று தேம்பாதே. பதினெட்டாம் நாள் வைகறைப் போதில் பறம்பிற் கோமான் மகளிர்க்கு, வேண்டுவன கொண்டு விரைந்து வருவாயாக, என்று பிறிதொரு முடங்கலை வையத் துறைவனுக்கு எழுதச் சொல்லுகிறார்.

ஔவையாரின் அருள் வாக்குப்படியே அருளாளன் ஆனை முகத்தானும் ஆணியால் ஓலை வரைந்துவிட்டு மறைகின்றார். தெய்வம் எழுதிய திருவோலை சேரனுக்கும் செம்பியனுக்கும் தென்னவனுக்கும் கிடைக்கின்றன. அவர்களும் தங்கள் செயலுக்குக் கழுவாய் தேடும் வகையில் கலியாணத்திற்கு வருகின்றனர்.

மலையன் எதிர்சென்று அவர்களை வரவேற்கின்றான். ஔவையாரும் இனியன கூறி அவர்களை இன்புறுத்துகிறார். இவ்வாறு அவர்கள் இருக்கையில், பாரி மகளிரின் திருமணத்தைக் காணத் தமிழ்நாடே திரண்ட காரணத்தால் வாங்கி வைத்திருந்த பாலும் நெய்யும் தீர்ந்து போய் விட்டன. இச் செய்தியை ஔவையாரிடம் அவர்கள் அறிவிக்கிறார்கள். அதுகேட்ட ஔவையார் ஒரு சிறிதும் மனங் கவலவில்லை. திருமணம் நடக்காத



முன்பே திரண்டிருந்த மக்களுக்குப், பாலும் நெய்யும் போதவில்லை. திருமணம் நடந்த பின்னர். முடிகெழு வேந்தரையும் பின்னுமுள்ள பல குறுநில மன்னர்களையும் நிலக்கிழார்களையும் பெருமக்களையும் பொதுமக்களையும் சிலவேளையாவது உண்பிப்பது எங்ஙனம்? "நெய்யில்லா உண்டி பாழ்" அல்லவா? பாலுக்கும் நெய்யுக்கும் எங்கே போவது? தமிழ் நாட்டிலுள்ள ஆயர்களிடம் உள்ள அனைத்துப் பாலையும் நெய்யையும் வாங்கினால் கூட போதாவே? எனவே ஔவையாருக்கு ஓர் அரிய யோசனை தோன்றியது.

# 20

# பெண்ணை ஆய்ச்சியானது

கோவலூரை அணுகி ஓடுவது பெண்ணையாறு. மலையர் திருமணத்திற்கு மனிதர்களிடம் பாலும் நெய்யும் வாங்கினும் போதாதென்று உணர்ந்த ஔவையார் அப் பெண்ணையாற்றையே பாலும் நெய்யும் கொணர்ந்து கொடுக்குமாறு பாடினார்.

முத்தெறியும் முதிய பெண்ணையாறே! நீ எப்போதும் போல் தண்ணீரைத் தாங்கி ஓடாமல் இப்போது பாலையும் நெய்யையும் ஏந்திய வண்ணம் கோவலூர் வரைக்கும் வந்து கொடுப்பாயாக என்னும் கருத்துப் பொதிந்த,

> முத்தெறியும் பெண்ணை முதுநீர் அது தவிர்ந்து
> தத்திவரு நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
> செருமலை தெய்விகன் திருக்கோவ லூர்க்கு
> வருமளவிற் கொண்டோடி வா

எனும் இப்பாடலை பாடினார். உடனே, தொன்று தொட்டு நீர் சுமந்து வரும் அவ்வாறு, நெய்யும் பாலும் சுமந்து வந்து திருக்கோவலூர் மலையன் திருமணத்துக்குக் கொடுத்தது. கோவலூரைத் தாண்டியதும் அப் பெண்ணையாறும் முன்னை முறைபோன்று புனலாருகலே ஓடியது. பாரியின் மகளிர் திருமணத்துக்கு ஔவையாரின் அருள் திறனால் பெண்ணைப் பேராறு, பாலும் நெய்யும் சுமந்து வந்த விந்தைச்செயலைக் கண்டு மன்னர்களும் மற்றுமுள்ளவர்களும் விம்மிதமடைந்து பேசவும் வலியற்று நின்றனர். ஔவையாரின் தெய்வப் புலமையைப் போற்றி, அத் தெய்வ மாநதி அளித்த பாலையும் நெய்யையும்



மலையனின் சுவைமிக்க உணவொடும் சேர்த்துண்டு, வாயும் மனமும் இனிக்க மணமக்களை ஆசிகூறி அனைவரும் வாழ்த்தினர். ஔவைப்பெருமாட்டியைக் கைகூப்பித் தொழுது வணங்கினர். அரசர்களும் அப்பெருமாட்டியின் அருந்திறலைக் கண்ணுறக்கண்டு கரைகாணா வியப்பில் ஆழ்ந்தனர்.

இவ்விந்தைச் செயலை ஊரார்கள், வாயில் விரல் வைத்த வண்ணமே பேசிக்கொண்டிருந்தனர். அப் புதுமையினை நாம் கண்ணுறக் கண்டு களிப்படைந்ததைப் போல் இரு உயிர்கள் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று பரிதவித்தனர். தம் மகளிரின் வதுவையின் பொருட்டு மாநதியே பாலும் பயனும் கொண்டு வந்து கொடுத்து உதவியதைப் பாரியும் அவன் துணைவியும் கண்டிருப்பின் அவர்கள் உள்ளம் எங்ஙனம் களிப்படையும் என ஏங்கினர். அவன் செய்த கொடைச் செயல்தான் இங்ஙனம் விளைந்ததோ என்றும் எண்ணமிடலாயினர். இவ் வெண்ணம் அவர்கள் நெஞ்சிலும் வாயிலும் நிலைத்து நிற்கும்பொழுதே மற்றொரு புதுமை ஏற்பட்டது. அது முன்னையினும் பன்மடங்கு வியப்புடையதாய் இருந்தது. அற்புதம் நிறைந்ததாய் விளங்கியது. நாம் எவ்வுலகில் வாழுகிறோம் என மக்களை அது மயக்கியது. கனவு உலகத்திலா? என மக்களின் மனம் தடுமாறியது. ஆண்டவனே, ஔவையார் என்னும் அரும் பெயரில் மறைந்து கொண்டு இங்கு அற்புதத் திருவிளையாடல்களை நிகழ்த்துகின்றானோ எனப் பேரதும் வியப்புற்று நெடிது நின்றனர்.

# 21

# பொன்மாரி பெய்த வருணன்

மாயிரும் ஞாலம் அதன் வாழ்வில் கண்டறியாத வண்ணம் பாரியின் கொடைத்திறன் பரந்த இசையுடன் விளங்கியது. "மாவண் பாரி" எனப் புலவர்கள் அவனை மனமார வாழ்த்தினர். பொன்னும் மணியும் புனைதேரும் வரைபுரையும் களிறும் இரவலர் பெற்று தம் வறுமை தீரப் பெற்றனர். இவ் வண்ணம் கொண்டலும் நாணிப் பின்னடையும் வண்ணம் கொடைத்திறன் ஆற்றிய பாரி, தன் மகளிரின் மன்றலை நடத்தினால், அனைவருக்கும் பொன்னை அல்லவா அள்ளி அள்ளி வீசுவான் என ஔவையார் எண்ணினார்.

தாயினும் சாலப்பரிந்து, தந்தையினும் அற உயர்ந்து அம் மகளிரின் மணவிழாவை மண்டினி ஞாலம் காணு வண்ணம் நடத்தும் அவர் மற்றொரு விந்தைச் செயலையும் செய்து காட்டினார். தீம்புனல் உலகிற்குத் தெய்வமாகிய வருணனை நினைந்தார். கருணை மிகுந்து, இக்கடல் சூழ்ந்த காசினியைக் காத்துவரும் வருணனே! உன் சேனையாகிய கார்மேகங்களை, தண்ணீர் மழையைப் பெய்யச் சொல்லாமல் பொன்மழையைப் பெய்யச் சொல்லி ஆணையிடுவாயாக என்றார்,

கருணையால் இந்தக் கடல்உலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவத்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீரது தவிர்த்து
பொன் மாரியாகப் பொழி

என்ற பாடலே அவர் வருணனைப் பொன்மாரி பெய்யுமாறு வேண்டிப் பாடிய பாடலாகும். பாடலைக் கேட்ட வருணன்



சிறிது நேரமாவது காலம் தாழ்ப்பானா? விநாயகனே அவருக்கு வேண்டிய குற்றேவல் செய்யக் காத்திருக்கும் பொழுது வருணன் எம்மாத்திரம்? அவர் பாடிய உடனே வானம் உரறி பொன்மாரி பெய்தது. மக்கள் மட்டிலா மகிழ்ச்சி கொண்டு மாரியளித்த பொன்னை வேண்டுமளவும் பெற்று மணமக்களை வாயார வாழ்த்தினர். அகங் குளிர ஆசி கூறினர்.

ஔவையாரின் கட்டளைப்படியே தெய்வம் மணவோலை தீட்டியதையும் பெரும் பெண்ணையாறு நறு நெய்யும் தீம்பாலும் ஏந்திவந்து மன்றலுக்கு உதவியதையும் நீரைப் பொழியும் நிறைவானம் அதுதவிர்ந்து நீள்புவியோர் விரும்பும் நெடும் பொன்னைச் சொரிந்ததையும் கண்டு அருந் தமிழணங்கை எங்ஙனம் புகழ்வதென விளங்காது கண்ணால் மக்கள் த ம மகிழ்ச்சியைப் புலப்படுத்தினர். சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் இவ் வற்புதத்தைக் கண்டு தனிமிக வியந்தனர். ஓங்கிப் பரந்திருந்த திருமணப் பந்தரின்கீழ் பனந்துண்டமொன்று கிடந்ததை அவர்கள் கண்டனர். அருகிலிருந்த பெருந்தகு ஔவையாரை நோக்கி அப்பனந்துண்டையும் நோக்கினர். ஔவையாரும் அவர்கள் விருப்பம் யாதென வினவினார். அம் முடிமன்னர் மூவரும் முறுவலித்தவாறே உங்களுக்கு இப் பனந்துண்டமும் கனிந்து, கனி உதவுமோ என்று கேட்டனர்.

எல்லோரும் நிறைந்திருந்த அத் திருமணப் பந்தரிலே ஔவைப்பிராட்டி மந்திரத்தால் மாங்கனியைக் கொடுக்கும் மந்திரவாதியைப் போன்று அனைவரும் ஆழ்ந்த வியப்பும் அடையும் வண்ணம் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார்.

# 22

# பனந்துண்டம் கனி உதவியது

திங்கள் குலத்திலே தோன்றிய செழியனும் பொன்னி வள நாடனும் வஞ்சிக் கோனும் பாரி மகளிரின் திருமணத்திற்குப் போந்து அவர்களுக்கு வேண்டும் சிறப்பைச் செய்ய வந்துள்ளனர். மணப்பந்தரிலே உள்ள பனந்துண்டமே! நீ சங்கின் நிறத்தை யொத்த வெண்குருத்து விட்டு, பச்சோலை, காற்றில் "சலசலக்கும்" வண்ணம் வளர்ந்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்றாக மூன்று பனம்பழம் தரல் வேண்டும் என்றார்.

> திங்கட் குலத்தச் செழியனும் சோழனுஞ் சேரனுமே
> மங்கைக்கு அறுகிடவந்து நின்றார் மணப் பந்தரிலே
> சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்துக்
> கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
> நுங்குக் கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
> பங்குக்கு மூன்று பழந்தரல் வேண்டும் பனந்துண்டமே

என்ற இப் பாடலைக்கேட்ட அக் கரிய பனந்துண்டம் அனைவரின் கண்ணெதிரே வெண்ணிறம் பொருந்திய குருத்தை விரித்தது. பனைமடல் காற்றிலே "சலசல" வென்று ஓசையுடன் அசைந்தது. பாளைவிரித்து நுங்கு காய்த்தது. நுங்கு முற்றிப் பனம்பழமாக மாறியது. மூன்று கனிந்த பழங்களையும் சேர, சோழ, பாண்டியரின் இச்சைப்படியே கீழே உதிர்த்தது. ஔவையாரும் கொடுத்துப் புகழ்பெற்ற அம் மன்னர்களின் தடக்கைகளிலே அம்மூன்று கரிய கனிகளையும் ஈந்தார்.



இலக்கியம் எந்த உருவத்தில் இருப்பினும் சரியே, அது உயர்ந்த கொள்கைகளைக் கொண்டு மக்களை நன்னெறிக்கண் செலுத்தாவிடின் அதனால் பெரும்பயன் ஒன்றுமில்லை. கவிதையாயினும் தொடர்நிலைச்செய்யுளாயினும் தற்காலத்தில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள தொடர்நிலைக்கதையாயினும் (Novel) சிறுகதையாயினும் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் எழுதப்படுமானால் இவைகள் நீடித்து மக்களிடையே நிலவா. உயர்வு நவிற்சியோ, மக்களின் வாழ்வில் காணப்படாத அற்புதத் திருச்செயல்களோ ஒரு நூல் முழுவதும் நிறைந்திருக்குமாயின் அந் நூலும் மக்களிடையே நிலைபெற்று நில்லாது.

நம் முன்னோர்கள் கவிதையிலும் காவியத்திலும் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட செய்திகள் (Super-natural Elements) சிலவற்றைத் தங்கள் நூல்களிலே இணைத்துள்ளனர். அதைப் பின்பற்றிப் பிற்காலப் புலவர்களும் அம்முறையைக் கையாண்டனர். ஆனால் முன்னோர்கள் எக்காரணங்களுக்காக மனிதவன்மைக்கு மேம்பட்ட நிகழ்ச்சிகளைத் தங்கள் நூல்களில் புகுத்தினார்களோ அக்காரணங்கள் சரிவரப் பின்னோர்களால் கையாளப்படவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களே பெரும்பாலும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

இரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சி, தமிழர்களுக்கு இயம்பொணா இடுக்கண் பல விளைத்தது. அன்னவரின் ஆட்சியிலே மக்கள் அமைதியற்றுத் தவித்தார்கள். செங்கோன்மை எனப்படுவது நூலளவே காணப்படும் செய்தியாயிற்று. இதனால் மக்களின் மனம் அமை

தினயத் தேடி அலைந்தது. "மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" என்ற தமிழ்ப் பண்பாடும் நம்பிக்கையும் களப்பிரரின் கடுங்கோலால் ஆட்டங் கண்டன. மன்னனிடம் அமைதி இல்லை என்பதைத் மக்களும் புலவரும் கண்டனர். எனவே மன்னர்க்கெல்லாம் மன்னனாகிய இறைவனே தங்கள் இன்னலைப் போக்குவான் என இறுதியில் அவனைச் சரணடைந்தனர். அதன் பின்னரே அழியும் யாக்கையை உடைய அரசரைப் பாடிய புலவர்கள் "பிறவா யாக்கைப் பெரியோனைப்" பாடினர்.

களப்பிரருக்குப்பின் தமிழ் நாட்டை ஆண்டவர்கள் பல்லவர்கள். அவர்களும் தமிழ் மக்களின் உள்ளப் பாங்கை அறிந்து நடந்தார்களில்லை. நாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் அவர்களிடம் பட்டபாட்டைப் சொல்லுந்தரமன்று. இதனால் மக்களின் மனம் பெரிதும் வேறுபட்டது. "அனைத்தும் ஆண்டவன் வழிப்படியே செல்லும்" என முற்றும் நம்பினர். ஆனால் இவ்வாறு எண்ணிப் பலனை எதிர்பாராது கடமையைச் செய்தார்கள் அல்லர். அதற்கு நேர்மாறாகக் கடமையை அவர்கள் சிறிது சிறிதாகக் கை நெகிழ விட்டனர்.

இந்நெறிப்படி கிட்டத்தட்ட ஐந்து நூற்றாண்டுகள் மக்களின் மனம் சென்றது. அப்பால் ஒன்பதாம் நூற்றாண்டில் இரண்டாவது சோழப் பேரரசு நிலைபெற்று மிக உயர்ந்து, ஆட்சி செலுத்தியதெனினும் அதுவும் மக்களின் மனத்தைச் சிறிதாவும் மாற்றாமல், அவர்களின் "சும்மா இருக்கின்ற சுகத்தை" மேலும் வளர்த்தது. அறிவு நிறைந்த மக்கள் இறைவழிபாட்டின் மேன்மையை உணர்ந்து நடந்தனர். பாமரரோ, அரசனும் அறிஞரும் செல்லும் நெறி அதுவாதலால் தாமும் அங்ஙனமே செல்லுதல் வேண்டும் என எண்ணினர். ஆனால்



நடைமுறையில் அவர்கள் இறைவழிபாட்டின் உண்மைக் கருத்தை உணராமல் வெறும் சடங்குகளிலேயே இறைவனைக் காண முனைந்தனர்.

தத்துவத்தை அறிந்துகொள்ளுதல் பாமர மக்களுக்கு அரிதாதலால் அன்னவரின் மனத்தை இறைவழிபாட்டின் மூலம் திருப்பினர். சோழர்கள் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் முதலிய ஆலயங்கள் இவ்வழியில் மக்களுக்குப் பெரிதும் தொண்டு செய்தன. புலவர்களோ தங்கள் காவியங்களில் ஆண்டவனின் அருட்செயலையே பெரிதும் பாடினர். அவனுடைய அற்புதத் திருவிளையாடல்களை விளக்கும் வாயிலாகவே பாட்டும் நூலும் பயன்பட்டன.

ஆண்டவனின் அளப்பரிய வன்மையையும் எல்லாம் வல்ல திறனையும் எடுத்துக் காட்டுவதற்காகவும் மனிதனின் அற்ப ஆற்றலையும் ஏழைமனத்தையும் அவனுடைய எளிய வாழ்வில் அடங்கி உள்ள நொய்மைத் தன்மையையும் விளக்குவதற்காகவும் முதன் முதலில் மனித ஆற்றலுக்கு அடங்காத அற்புதச் செயல்கள் நூல்களில் எடுத்தோதப்பட்டன. பின்னர் வந்த புலவர்கள் இக்கருத்துப்படி நடவாமல் தங்கள் நூல் முழுவதும் அற்புதத்தைத் தவிர வேறொன்றையும் எழுதாமல் விட்டனர். இன்ன தன்மையினால் இடைக்காலத் தமிழ் நாட்டின் இலக்கியமே வேறுவகையாகப் போய்விட்டது. அதன் வரலாற்றையும் தெளிவாக அறிய முடியவில்லை.

தமிழ் நாட்டின் சூழ்நிலையும் மக்களின் மனநிலையும் புலவர்களின் கற்பனைத் திறமும் இவ்வழிப்படிச் சென்ற காலத்தில்தான் இரண்டாவது ஔவையாரும் இந்நாட்டில் தோன்றினர். அவருடைய ஆழ்ந்த அறிவும் செம்மை

சான்ற ஒழுக்கமும் ஆண்டவனிடம் அவர் கொண்ட அளவற்ற ஈடுபாடும் அவர் பாடியுள்ள கவிகளின் வாயிலாக நன்கு வெளிப்படலாயிற்று. வரலாற்றேடு தொடர்புடைய பாரியைப் பற்றி அவர் பாடியபோதும் அங்ஙனமே தம் பாடல்களைப் பாடினர்.

கரைபொரும் பெண்ணை யாற்றங் கரையிலே அமைந்துள்ள திருக்கோவலூரில் மலையமான் பெற்ற மாண்புறு மக்களுக்கும் பறம்பிற் கோமானின் பண்புறு மகளிர்க்கும் திருமணம் நடந்த காலையில் ஔவையார் தம் அருள் வன்மையால் மூன்று அரிய செயல்களை நிகழ்த்திக் காட்டினர். இம் மூன்று நிகழ்ச்சிகளும் மனித எத்தனம் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்தவை. தெய்வச் செயல் வாய்ந்தவை.

இவற்றுள் முதலாக இருப்பது ஔவையாரின் விருப்பத்திற்கிணங்க களிற்றுமுகன் ஆணிகொண்டு அவர் பாடிய வண்ணம் ஓலையில் எழுதியதாகும். பாரியின் கொடைப் புகழைக் கேட்டுப் பொறுமைப்பட்டு அதனால் அவனை வஞ்சகமாகக் கொன்றனர் முடி வேந்தர் மூவரும் என அக் காலமக்கள் நம்பினர். இம் மூவரும் பாரி மகளிரின் மன்றல் விழாவுக்கு வர எளிதில் ஒருப்படார். அவர்களை அழைத்து வருவதற்கு அவர்களினும் மேம்பட்ட ஒருவர் வேண்டும். ஔவையாரின் ஆணைப்படி ஆனைமுகனால் அம் மூவர்க்கும் மூவோலைகள் எழுதப்பட்டன என்றால் அவர்கள் வாராமல் இரார். மூவேந்தரும் திருமணத்திற்கு வந்து மணமக்களை ஆசிகூறினர். அவர்களின் வரவுக்குக் காரணம் தெய்வமே முன்னின்று முடங்கல் எழுதியது என்னும் எண்ணத்தை இக் கதை கற்பிக்க முயலுகிறது.



இரண்டாவதாக, திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை. திக்கற்ற பாரி மகளிரைக் குறுநில மன்னர்கள் மறுத்தாலும் தெய்வமும் அவர்களைக் கைநழுவ விடாது. மனிதர்களால் கைவிடப்பட்டாலும் இறைவன் திக்கற்றவர்களைத் தாங்குவது திண்ணம். இம் முறைப்படியே பாரியின் மகளிர்க்கும் தெய்வம் "மடிதற்று" முந்துதவியது என்னும் கொள்கையை நிலை நாட்ட இந்நிகழ்ச்சி முயலுகிறது.

மூன்றாவதாக, நம்முடைய நாட்டில் நாம் எக்காரியத்தைச் செய்யினும் அதை நாமே செய்து விட்டோம் என்று புறத்தே எவரிடமும் உரைப்பதில்லை. யாராவது கேட்பினும், "நாமா செய்தோம்? எல்லாம் அவன் செயல். அவன்தான் இக்காரியத்தை இனிது முடித்துள்ளான்" என்று சொல்வது இயல்பாக உள்ளது. ஆண்டவன்பால் ஈடுபாடு அதிகம் உள்ள நெஞ்சம், எதையும் தான் செய்து முடித்ததாகக் கூறாது. ஔவையார் இறைவன்பால் மிக்க ஈடுபட்டவர். எப்போதும் அவன் அருளை எண்ணியே அவர் வாழ்பவர். எனவே மூவேந்தர்க்கும் கடிதம் எழுதியதாக உள்ளதும் அவர் வழிபடும் கடவுளாகிய ஆனைமுகனால் எழுதப்பட்டது எனப் பாட்டில் காணப்படுகிறது.

நான்காவதாகப் பாரி மகளிரின் திருமணம் ஏனைக் குறுநில மன்னர்கள், முடிகெழு வேந்தர் முதலியோரின் திருமணம் போலாது மிக்க சிறப்புடைத்து எனக் காட்டுவதற்கும், "தர்மம் தலைகாக்கும்" என்ற முதுமொழியை நிலையூன்றுவதற்கும், அறவோனாகிய பாரி மகளிர்க்குத் தெய்வமே வந்து மணவோலை தீட்டியது என்றும் பாடப்பட்டது. இக் காரணங்களைப் போன்ற வேறு சில காரணங்களே ஔவையாரின் பாடலுக்கு அடிப்படை.

வானம் பொன்மாரி பொழிந்த பாட்டின் கருத்தும் இவ்வாறே யாதல் வேண்டும். இந் நாள்வரை எந்த நாட்டின் ஏட்டிலும் காணாத வகையில் பெருங் கொடையாளனாக நெடுமா பாரி விளங்கினான். இங்ஙனம் ஈடற்ற புகழ் திரட்டிய அவ் வள்ளல் தன் இன்ப மகளிர்க்குத் திருமணம் செய்யாமலே "வஞ்சனையால்" கொல்லப் பட்டான்.

அவனை மாய்த்துவிட்ட காரணத்தால் அவன் கடைப் பிடித்த கொள்கை இறந்துவிடவில்லை. வள்ளலை வஞ்சனை வெல்லலாம். ஆனால் அவ் வெற்றி இறுதி வெற்றியன்று. வள்ளன்மை அதனால் அடியுடன் அழிந்துவிடாது. முன்னையினும் பன்மடங்கு முறுகியலுடன் அதன் பண்பு வெளிப்படும். நல்ல கொள்கைகளை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த மாண்புடையோர்களுக்குத் துணைசெய்யத் தெய்வமும் முந்துவரும் என்பனபோன்ற சீரிய அறத்தின் அடிப்படையான சில உண்மைகளை வெளியிடவுமே இங்ஙனம் இப் பாடல் அமைந்துள்ளதாகக் கருதலாம். "பாரியும், பரிசிலர் இரப்பின் வாரேனென்னான், அவர் வரையன்னே" என்று சான்றோர்கள் அவனைப் பாடியுள்ளனரல்லவா? அப் பெற்றித்தாய அக் கொடைவள்ளலின் பெண்களின் திருமண வேளையில் அவனிருந்து ஆற்றும் கொடைப்பணியை தெய்வமே முன்னின்று நடத்தியது என்பது குறிப்பாக உள்ளது. இதன்மூலம் பாரிமகளிரின் திருமணம் மிக்க சீருடனும்சிறப்புடனும் பெருங்கொடையுடனும் நடந்தது என்ற உண்மையைத்தான் நாம் உணரல் வேண்டும்.

அறத்தையும் நீதியையும் வள்ளன்மையையும் பெருமைப்படுத்திக் கூறுவான் வேண்டி இவ்விரு நிகழ்ச்சி



களும்உயர்வு நவிற்சியுடன் கூறப்பட்டுள்ளன. ஆனால் மூன்றாவதாக உள்ள நிகழ்ச்சி கூறப்பட்டதற்குக் காரணம் வேறு இருத்தல் வேண்டும். முடிகெழு வேந்தர் களின் விருப்பத்திற்கிணங்கிய பனந்துண்டம் கனிந்த கனியைக் கொடுக்கும் செயலிலே, உள்ளியது முடிக்கும் நல்லியல்பு வாய்ந்தவர் புலவர் என்பதை அறிகிறோம். பொய்யா நாவினை உடையவர்களாகிய அவர்கள் அரிய செயல்களைச் செய்து முடிக்கும் பேராற்றல் வாய்க்கப் பெற்றவர்கள் என்பதையே அது காட்டுகிறது.

ஒருவரைப் புகழ்ந்து பாடுங்கால் அவர்களின் பண்பு நலங்களை ஓரளவு உயர்த்துப் பாடுதல் இயல்பேயாகும். இன்றைய நடைமுறை வாழ்விலும் கற்பனையோடு நாம் பல நேரங்களில் பேசுகிறோம். பொறையும் பண்பும் நிறைந் தவனை "தங்கக் கம்பி" என்று சொல்லுகிறோம். விரைந்து ஓடிவந்த சிறுவனை, "பறந்து வந்தான்" என்கிறோம். கருமி ஒருவனை "கருங்கல்லில் நார் உரிப்பவன்" என்று உரைக்கிறோம். இவ்வாறே அரசனின் வீரத்தையும் ஆற் றலையும் குறித்துப்பாடும் பாவலரும் அவனைக் கற்பனை நிறைந்த கவிதையால், படிப்போரும் கேட்போரும் இன்பத் தோடு மதிக்கும் வண்ணம் சுவையாகப் பாடினர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் வேண்டியது முடிக்கும் வினைத்திறனை, ஆவூர் மூலங் கிழார், இன்பத்தேன் செவியிலே வந்து பாயும் வண்ணம் கற்பனை நிறையப் பாடியுள்ளார்.

நீ, உடன்று நோக்கும் வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும் வாய் பொன்பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண் திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை

(புறம் - 38)

என்று பாடிய புலவரின் அடிகளை, உள்ளது உள்ளவாறே பொருள் கொள்ளலாமா? அவ்வாறு கொள்பவர் இலக்கியம் பயிலும் முறையை அறியாதவரே ஆவர். "நீ சினந்து பார்க்குமிடத்திலே செந்தீ பரவும். நீ மகிழ்ந்து காணும் இடத்திலே பொன் பூக்கும். வெவ்விய கதிரையுடைய ஆதவனிடம் நீ நிலவை வேண்டினும், தண்மதியிடம் வெங்கதிரை விழையினும் தடையின்றிப் பெறுவாய்" என்று அவன் ஆற்றலை அழகுறப் போற்றுகின்றார். இயற்கையின் போக்கையும் மாற்றும் திறல்வாய்ந்தவன் என்று கூறுவது புகழ்மொழியே. உண்மையன்று. இறுதியில் அவன் குளமுற்றத்தில் துஞ்சிய செய்தியே இவ்வாறு புலவர் கூறியது எதன்பொருட்டு என்பதை நன்கு விளக்கும்.

இதுபோன்றே ஔவையாரின் ஒள்ளிய அறிவையும் அவர்தம் தெய்வப் புலமையையும் அனைவர்க்கும் உணர்த்தும் பொருட்டே இப் பாடல் உள்ளது. ஔவையார் அழைக்கத் தெய்வம் ஓலை யெழுதியதும், மண நாளன்று நீலவானம் பொன் சொரிந்ததும் அவர் புகழையும், திறனையும் காட்டப் போதாவோ வெனின், அவ் விரண்டிலும் அவர் திறனைவிடப் பாரி வளர்த்த அறப்பயிர்தான் பாரில் அங்ஙனம் விந்தைச் செயல்களை ஔவையாரின் வாயிலாக விளைத்தது எனப் பலரும் எண்ணுதற்கு இடனுண்டு.

பொன்னாற் செய்த புனை இழையேயாயினும் இறுதியில் அதை மெருகிட்டு ஒளிரவைப்பது போன்றும் முடியில் அழுத்திய முழுமாணிக்கம் போன்றும் இவ்விறுதிப் பாடல் ஔவையாரின் அருந்திறல் மிக்க புகழை எடுத்துக்காட்ட உதவுகிறது.



"பாணர் தாமரை மலையவும், புலவர் பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்" அரசர்கள் கொடைத்திறன் வாய்ந்தவர்களாகப் பண்டைத் தமிழகத்தில் இருந்தனர். புலவர்களும் இரவலர்களும் அவர்களிடம் சென்று அவர்கள் வீரத்தையும் பெருவிறலையும் புகழ்வர். அதனால் மகிழ்ச்சி அடைந்த மனம், நிறையக் கொடுத்து இசையைப் பெற்று இந் நிலவுலகில் நீடிய வாழ்வு வாழ்கிறது. ஆனால் கொடுப்பது தம் கடனெனக் கொடுத்தவர் சிலரே. அவருள்ளும் பாரி என்னும் வேந்தனே, புகழையும் வாழ்த்தையும் எண்ணிக் கொடுப்பதைத் தன் கடனாக எண்ணி, வரையாது வழங்கினானில்லை. அவனே கொடையென்று கூறும் பரிசாக அவன் உருவம் திகழ்ந்து இயங்கியது.

தன் குடைநிழலில் வாழும் மக்களைப் புரக்கும் கடன் வேந்தர்க்கு உரியது. மக்களிடம் அவன் அருளுடையனாய் இருந்ததிலும் வியப்பில்லை. அவனுடைய பெருங் குணமெல்லாம் அவன் ஓரறிவுயிர்க்கும் பரிவு காட்டி அதன் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணிக் களைந்ததில்தான் உள்ளது. அரசனாக இருந்து அவன் ஆற்றிய அருட்பணிகள் எல்லாம் இதனால் பகலவன் முன் சிறு பொரியென சிறிய செயல்களாகப் போய் விட்டன. மண்ணில் தோன்றி அறம் வளர்த்த மாஞானிகளின் வரிசையிலே முதன்மையாகத் திகழும் ஒப்பற்ற வாய்ப்பைப் பெற்றான் புகழ் வடிவான வள்ளல் பாரி.

இம் மாஞானியை அவன் காலத்திலே அவனுடன் வாழ்ந்து வந்த, கபிலர் கவிதை நயமெலாம் நிறைந்த பாடல்களால் பாடியுள்ளார். அவரின் பாடல்களே அவன் வரலாற்றை எழுதுதற்குப் பெரிதும் துணையாய் இருந்தன. அவருடன் அவனைப் பாடியவர் அக் காலத்திலே வாழ்ந்து

V 2:11,1
N53-6



வந்த புலவர்களுள் ஔவையாரும் ஒருவர். அக் காலத்தில் அவர் புலவராலும் புரவலர்களாலும் பெரிதும் மதிக்கப் பட்டவர்.

இதனால் பிற்காலத்தில் இவருடைய பெயரைக் கொண்டு வாழ்ந்த புலவர், பாரியின் வரலாற்றைக் கபிலரின் செய்யுள் வாயிலாகவோ அன்றிச் செவி வாயாகவோ அறிந்து, ஔவையாரின் பெயரால் சில பாடல்கள் பாடினர். இவருடைய பாடல்கள் இவருக்கு முன்பிருந்த ஔவையார்ன் மாட்டு இவர் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துவன எனக் கொள்ள லாம். அங்ஙனமின்றி இவரே அக்காலத்துப் பாரியுடனும் கபிலருடனும் நட்புப் பூண்டிருந்தார் எனக் கொள்ளின் ஆராய்ச்சி அதற்கு இடங்கொடுக்கவில்லை.

இவருடைய பாடல்களை நாம் கவைக்குதவாதன என ஒதுக்கிவிடல் கூடாது. அவைகளில் காணும் நல்லுணர்ச்சி, அறவழிபாடு, முதலியவற்றை நாம் நன்கு உணரல் வேண்டும். பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்து வந்த பெருவள்ளலின் குறைபட்ட வரலாற்றையே தம் கற்பனைக்கு ஏற்ற பொருளாக எடுத்துக் கொண்டு கவிதைபாடிய அவர் உள்ளம் உண்மையிலேயே மிக உயர்ந்த தமிழ் உள்ளம். அத் தமிழ் உள்ளத்தை நாம் என்றும் நன்றி யுடன் பாராட்ட வேண்டும். பலமுறை வாழ்த்த வேண்டும். தமிழ் வளரவும் தமிழர் நன்னிலை எய்தவும் தமிழ்நாடு மேனிலை அடையவும் நம் முன்னோர்கள் வகுத்த நன்னெறிகளைக் கைப்பிடித்து அவர்களை வாழ்த்திய வண்ணமே நாமும் முன்னேறுவோமாக.

4858